# மன்னா


# பொது நிலையினருக்கான இறையியல் கல்வியகம் ஆரம்பம்

கத்தோலிக்கத் திருஅவையின் பொது நிலையினரை இறையியல் நம்பிக்கையிலும், உண்மையிலும் வலுப்படுத்தும் நோக்கோடு, மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் பேரார்வத்தினால் மன்னார் மறைமாவட்டத்தில் பொது நிலையினருக்கான இறையியல் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 01.09.2018 சனிக்கிழமை அன்று இக்கற்கை நெறி மரபியல் ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று காலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்ற திருவழிபாட்டைத் தொடர்ந்து, திருச்சபையின் சட்டமரபு, நியமங்களுக்கொப்ப மன்னார் மறைமாவட்ட புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குனராக அருட்பணி. ப.பி.டெஸ்மன் குலாஸ் அடிகளாரை மன்னார் ஆயர் அவர்கள் நியமித்து பணிப்பொறுப்பை ஒப்படைத்தார். அருட்பணி. ப.பி.டெஸ்மன் குலாஸ் அடிகள் இறைமக்கள் முன்பாக தனது பணி நம்பிக்கை பொறுப்பு அறிக்கையை வாசித்து இயக்குனராகப் பணிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயக் கேட்போர் கூடத்தில் இக்கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வின் தொடக்க விரிவுரையின் சுருக்க உரையை திரு அவையின் ஒழுக்கவியல் கோட்பாடுகள் என்னும் தலைப்பின் கீழ் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தின் மெய்யியல் துறைக்கான இயக்குனர் அருட்பணி. பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் வழங்கினார்.

➡ 15











## செபமாலைத் தாசர் சபையின் புதிய மாகாண முதல்வர்



அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளார் இலங்கையின் செபமாலைத் தாசர் சபையின் புதிய மாகாணத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் ஆலோசகர்களாக அருட்பணி. A.M. ஸ்ரீபன் அடிகளார், அருட்பணி. அனில் கிரிஷாந்த அடிகளார், அருட்பணி. ஜெபதாசன் அடிகளார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அருட்பணி. ஜெயசீலன் அடிகள் 1969ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13ஆம் திகதி, யாழ் சில்லாலையில் திரு. பெஞ்சமின் அமிர்தநாதர், திருமதி. மேரி ஜோசப்பின் தம்பதிகளின் நான்காவது மகனாக பிறந்தார்.

➡ 14

## திருச்சிலுவைக் கன்னியர் சபைக்குப் புதிய மாகாண முதல்வரும், நிர்வாகத்தினரும்



கடந்த ஆவணி மாதம் 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நீர்கொழும்பு தளுவக்கொட்டுவவில் அமைந்துள்ள மாகாண உயர் இல்லத்தில் நடந்தேறிய பொது அமர்வில் அருட்சகோதரி றொபினா பவுலின் அவர்கள் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் இலங்கைக்கான புதிய மாகாண முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவரது மாகாண ஆலோசகர்களாக அருட்சகோதரிகள் பெனிற்றா பாக்கியநாதர், லூசியா ஜோசப், ஜெரால்டின் மைக்கல், சுகந்தி பேனாட், அமிர்தா அந்தோனிப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் கடந்த 04.10.2018 அன்று தம் பணிப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர். திருச்சிலுவை கன்னியர் சபையின் இலங்கை மாகாணத்தை வழிநடத்தும் இவர்களது பாரிய பணியானது இறைவனின் அருளால் திறம்பட முன்னெடுக்கப்பட தூய ஆவியின் துணை வேண்டி நாம் செபிக்கின்றோம். ●

## பிரான்சிஸ்கன் மினிம் அருட்சகோதரிகள் துறவற சபைக்கு புதிய மாகாண முதல்வர்



திரு இருதய சின்னஞ்சிறு அருட்சகோதரிகள் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்.சகோ. மேரி பேனடேட் லெட்பட் அவர்கள் 04.08.2018 அன்றுமுதல் மாகாண முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தாலி தலைமையகத்திலிருந்து அருட் சகோதரி சல்வத்தோரிக்கா சேர்ரா என்பவரால் உத்தியோகபூர்வமாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இவர் தோட்டவெளி பங்கில் உள்ள அருட்சகோதரிகள் இல்லத்தில் கடமையாற்றுகின்றார். ●

## சாளம்பன் புனித அடைக்கல அன்னை ஆலய அபிஷேகமும், திறப்பு விழாவும்


ஆட்காட்டிவெளிப் பங்கின் கிளை ஆலயமான சாளம்பன் புனித அடைக்கல அன்னை ஆலய அபிஷேகமும், திறப்பு விழாவும் கடந்த 04.09.2018 புதன்கிழமை அன்று மாலை பங்குத்தந்தை அருட்பணி. ச.சத்தியறாஜ் தலைமையில், ஆலய அருட்பணிப் பேரவையினரின் பங்களிப்போடும், ஆலய மக்களின் ஒத்துழைப்போடும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களினால் இவ்வாலயம் கத்தோலிக்கத் திருஅவையின் திருவழிபாட்டு திருமரபு ஒழுங்கிற்கொப்ப அர்ச்சித்து திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு அருட்பணியாளர்கள், துறவிகள், அரச, அரச சார்பற்ற துறைசார் பிரதிநிதிகள் பலரும் வருகை தந்திருந்தனர். ●



## உலக மறைபரப்புத் தினம்

### - ஒக்ரோபர் 21 -




## ஒறுத்தல் முயற்சிகளோடு ஒன்றிணைந்து செபமாலையை செபிப்போம்.

இறைவனிடமிருந்து இவ்வுலக மக்களை பிரிக்கவும், மக்களிடையே பிரிவுகளை உருவாக்கவும், முயன்றுவரும், தீயோனிடமிருந்து திரு அவையை பாதுகாக்கவும், செபமாலை அன்னையின் மாதமாகிய இம்மாதத்தின் ஒவ்வொரு நாளும், விசுவாசிகள் செபமாலை செபிக்கும்படியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சிறப்பான ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டிருக்கின்றார்.

தீயோனை வெல்வதற்கு செபம் ஒன்றே சிறந்த வழி என்பதை திருத்தந்தை வலியுறுத்துகின்றார்.



## முதியோர் தினம் சிறப்பு ஒன்றுகூடல்

### - ஒக்ரோபர் 17 -

மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்தின் முதியோர்தின சிறப்பு ஒன்றுகூடல் வருகின்ற 17ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 - மாலை 4.00 மணிவரை தோட்டவெளி மன்னார் வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்தில் நடைபெறும்.

அழைப்புப் பெற்ற அனைவரும் சமூகம் தருமாறு இயக்குனர் அழைக்கின்றார். ●

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## திருச்செபமாலை மாதம் ஒக்ரோபர்

***01. திருச்செபமாலைப் பக்தி***

*திருச்செபமாலை கத்தோலிக்க மக்களின் தனித்துவமான பாரம்பரிய செபச் சொத்தாகும். இச்சிறப்பான, இலகுவான செபவழிமுறை திருச்சபையின் செபவாழ்வில் அனைத்து நிலையினராலும் சிறப்பாக குருக்கள், துறவியர் மற்றும் பொது நிலையினர் என்று எல்லோராலும் காலங்காலமாய் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.*

*ஆண்டவர் இயேசுவின் மறை உண்மைகளில் அதாவது அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பில் அன்னை மரியாளின் வாழ்வு இணைந்துள்ள இரகசியம் செபமாலை வழியாகத் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. இதனால் இது அன்னை மரியாவின் செபமாக இருக்கின்றது. திருத்தந்தை 6ஆம் பவுல் செபமாலையை "நற்செய்தியின் சுருக்கம்" என்றுரைக்கின்றார். ஏனென்றால் நாம் செபமாலையில் எம் ஆண்டவர் இயேசுக் கிறீஸ்துவின் பாஸ்கா மறைபொருளை மையமாகக் கொண்ட மகிழ்வு, ஒளி, துயரம், மகிமை ஆகிய மறை நிகழ்வுகளை தியானிக்கின்றோம். ஆகவே நாம் ஒவ்வொருநாளும் திருச்செபமாலை செபிக்கின்ற வேளையில் நற்செய்தியின் பாதையில் நடக்கின்ற அருளை பெறுகின்றோம்.*

***02. திருச்செபமாலையும், திருத்தந்தையரும்***

- *திருத்தந்தை 5ஆம் பத்திநாதர் ஐப்பசி 7ஆம் திகதியைத் திருச்செபமாலையின் திருநாளாக 1572 ஆம் ஆண்டு ஏற்படுத்தி உரோமை வழிபாட்டு நாட்காட்டியில் பதிவாக்கினார்.*
- *திருத்தந்தை 5ஆம் செக்ஸ்ரஸ் லொறெத்தோ, அன்னையின் புகழ் மாலையை 1587ஆம் ஆண்டு அங்கீகரித்தார்.*
- *திருத்தந்தை 9ஆம் பத்திநாதர், 1854ஆம் ஆண்டு மார்கழி 8ஆம் நாளில் அன்னையின் அமல உற்பவத்தைப் பிரகடனப்படுத்தி, திருச்செபமாலைப் பக்தியை ஊக்குவித்தார்.*
- *"திருச்செபமாலையின் திருத்தந்தை" என்று அழைக்கப்படும் திருத்தந்தை 13ஆம் சிங்கராயர், திருச்செபமாலையைப் பற்றி 12 சுற்றுமடல்களையும், 5 அப்போஸ்தலிக்க மடல்களையும் எழுதியுள்ளார்.*
- *திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், 1950 ஆம் ஆண்டு அன்னையின் விண்ணேற்பினை தனது சுற்றுமடலில் பிரகடனப்படுத்தியதோடு, பத்திமா, லூர்து ஆகிய இடங்களில் காட்சி தந்த அன்னையின் பக்தியை திருச்செபமாலை மூலம் திருச்சபையில் பரப்பினார்.*
- *திருத்தந்தை 23ஆம் அருளப்பர், "திருச்செபமாலையானது மறையுண்மைத் தியானம், நெருங்கிய உறவு, பக்தியுள்ள கருத்துக்கள் என்ற மூன்று உண்மைகளை உள்ளடக்கின்றது என்றும், இது சமுதாயத்தைப் பாதிக்கும் தீமைகளுக்கு எதிரான ஆற்றல் மிக்க ஆன்மீக ஆயுதமாய் இருக்கின்றது" என்றும் கூறியுள்ளார்.*
- *திருத்தந்தை 2ஆம் யோன், திருச்செபமாலைக்கு ஒளியின் மறையுண்மைகளை இணைத்ததோடு "கன்னி மரியாவின் திருச்செபமாலை" என்ற சுற்றுமடலையும் எழுதியுள்ளார்.*
- *திருத்தந்தை 14ஆம் பெனடிக்ற் திருச்செபமாலையை "புதிய வசந்த கால அனுபவம்" என்று குறிப்பிட்டுள்ளார்.*

***03. இறைதிட்டத்தை நிறைவேற்றிய அன்னை***

*அன்னை மரியாள் இறை திட்டத்தை நிறைவேற்ற தன்னை முழுமையாக இறை திருவுளத்திற்கு ஒப்படைத்த ஒரு கன்னித்தாய். அதன் மூலம் இறை தாய் என்ற மகிமையை பெற்றாள். கானாவூர் திருமண வீட்டில் "அவர் சொல்வதைப் போல் செய்யுங்கள்" என மொழிந்ததன் மூலம் தன் மகனை இறை இயேசுவின் வார்த்தைகளின்படி நடக்க வாழப் பணிக்கிறாள் எம் அன்னை.*

*சிலுவையின் அடியில் அன்னை மரியாளையும், அன்புச் சீடரையும் பார்த்து ஆண்டவர் இயேசு "இதோ உம் மகன், இதோ உம் தாய்" என மொழிந்தார். தன்னில் விசுவாசம், நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அன்னை மரியாளின் பிள்ளைகள் என்பதை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், அன்னை மரியாளினுடைய கரங்களுக்கு மனுக்குலம் முழுவதையும் ஒப்படைத்து, மனுக்குலத்தின் தாய் என்பதை பிரகடனப்படுத்துகின்றார் இறைமகன் இயேசு.*

*ஆகவே, அன்னை மரியாளுக்கு எம்மை, எம் குடும்பத்தை, எம் தேசத்தை, நாட்டை, உலகத்தை ஒப்படைத்து திருச்செபமாலை ஊடாக இறைதந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி, இறைபிள்ளைகளாக வாழ ஒவ்வொரு நாளும் குடும்பச்செபத்தில் திருச்செபமாலையில் இணைவோம். தீமைகளை தவிர்த்து வாழ இறை வல்லமையை அன்னை மரியாள் பெற்றுத்தருவாள்.●*

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா மதிப்பாசிரியர்.*

௳ ௳ ௳

## மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் ஆயர் திருப்பொழிவு நாள் ஒக்.20

## வாழ்த்துகின்றோம்! செபிக்கின்றோம்!

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் தந்தை மேதகு இரா.யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆயராக தான் திருநிலைப்படுத்தப்பட்ட 26வது ஆண்டு நிறைவை (1992 - 2016) எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி நினைவு கூருகின்றார்.



இளைப்பாறும் எம் ஆயர் தந்தை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகின்றது.●

## உயர் கல்விக்காக பெல்ஜியம் அருட்பணி அ.அருள்றாஜ் குரூஸ்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி அ. அருள்றாஜ் குரூஸ் அடிகளார் கடந்த பல வருடங்களாக நானாட்டான், முருங்கன் பணித் தளங்களில் பங்குத் தந்தையாக சிறப்பாக பணியாற்றிய பின் தனது உயர் கல்வியை மேற்கொள்வதற்காக புரட்டாதி மாதம் 21ஆம்திகதி பெல்ஜியம் பயண மானார்.



இவர் அங்கு இரண்டு வருடங்கள் சமய இறையியல் (Theology of Religion) பாடத்தை கற்று தேர்ச்சி பெறுவார். அருட்தந்தை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா பத்திரிகை நிர்வாகம் தெரிவிக்கின்றது.●

# பாராட்டுகின்றோம்

## நீதிமன்ற வலய சமாதான நீதவானாக திரு. இறம்மிக்கேல் யக்கோவு சேரம்

மறைப்பணியாளர் ஒருவர் மன்னார் நீதிமன்ற வலய சமாதான நீதவான் ஆனார். மன்னார் மறைமாவட்டமூத்த பொதுநிலைப் பணியாளரான வேதியர் திரு. இறம்மிகேல் யக்கோவு சேரம் அவர்கள் மாண்புமிகு நீதி அமைச்சர் தலதா அத்துக் கோறள அவர்களால் மன்னார்நீதிமன்ற வலயத்துக்கான சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டுள்ளார். 04.09.2018 அன்று மன்னார் மேல் நீதிமன்றில் தனது சத்தியப்பிரமாணத்தைச் செய்து கொண்டார்.



➡ 15

## அகில இலங்கை சமாதான நீதவானாக திரு. அடைக்கலம் அந்தோனிமுத்து

திரு.அடைக்கலம் அந்தோனிமுத்து அவர்கள் 21.09.2018 அன்று மன்னார் மாவட்ட கௌரவ நீதவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அதிபராக, ஆசிரிய ஆலோசகராக ஆரம்பக்கல்வி, உதவிக்கல்விப் பணிப்பாளராக 38 வருடங்கள் கல்விச் சேவையில் பணியாற்றி 2000ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து வாழ்வுதயத்தில் சமாதான இணைப்பாளராக 04 ஆண்டுகளும், அரசாங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் மாந்தைப் பிரதேசத்தின் தலைவராக 05 ஆண்டுகளும், மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத்தின் உப தலைவராகவும், மன்னார் நகர, பிரதேச சங்கங்களின் சமாசத்தின் தலைவராகவும், மன்னார் பங்கு மூத்தோர் சங்கத்தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். சமய, சமூகப் பணிகளில் தற்போதும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்ற இவர் இன்னும் சிறப்பாக தம் பணிகளை ஆற்ற மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.●



## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### ஒக்ரோபர்

01. குழந்தை இயேசு ஆலயம் - பறங்கிகமம். (இலுப்பைக்கடவை), பாவிலுப்பட்டான்கட்டிகுடியிருப்பு.
02. புனித செபமாலை அன்னை திருவிழா - பெரியநீலாசனை.
05. புனித பௌஸ்ரினா திருவிழா - பம்பைமடு.
06. புனித சதாசகாய அன்னை திருவிழா - பாவற்குளம்.
07. புனித செபமாலை அன்னைத் திருவிழா - தலைமன்னார், பெரிய நீலாசனை, மணல்மோட்டை.
10. குழந்தை இயேசுவின் சின்னத் திரேசா - முள்ளிக்குளம்.
13. புனித பற்றிமா அன்னை திருவிழா - பற்றிமாநகர்(ஓமந்தை)
14. மடுமாதா சிறிய குருமட திருவிழா.
20. மன்னார் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டது. (1992)
21. புனித வேளாங்கண்ணி - தலைமன்னார். (பியர் பீச்) உலக மறைபரப்பு தினம்
28. புனித யூதாததேயு - மெனிக்பாம், இரட்டைகுளம், மடுக்குளம்.
    புனித அமைதியின் அரசி திருவிழா - முறியாகுளம்.
31. புனித அடைக்கல அன்னை திருவிழா - தட்டாங்குளம்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## துயர் பகிர்கின்றோம்

மன்னார் மறைமாவட்ட அருட்பணி. ஞானறாஜ் குரூஸ் (நேரு) அவர்களின் அன்புத் தந்தையார் திரு. ஜோசப் பிரான்சிஸ் குரூஸ் (அமிர்தம்) அவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

வவுனியாவைச் சேர்ந்த திரு. திருநாவு அன்ரனி செந்தில் விமலன் (மன்னார், மடுமாதா சிறிய குருமட பழைய மாணவன்) கடந்த 31.08.2018 அன்று இறைபதமடைந்தார்.

அருட்தந்தை அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும், மற்றும் அமரர். செந்தில் விமலன் அவர்களின் அன்பு மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை மன்னா தெரிவித்து நிற்கின்றது. இறையடி சேர்ந்த தந்தையார் , சகோதரன் இறைவனின் அமைதியில் இளைப்பாற செபிப்போம்.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*-மன்னா நிர்வாகம்-*

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# உறுதிப்பூசுதல் கொண்டாட்ட நிகழ்வுகள்

## மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம்





மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கில் 142 மறைக்கல்வி மாணவர்களுக்கு உறுதிப்பூசுதல் வழங்கும் திருநிகழ்வு 09.09.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகவும் பக்தி அருட்சியோடு நடைபெற்றது. இதனை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி நடாத்தினார். பேராலயப்பங்குத்தந்தை, அருட்பணி. ஞானப்பிரகாசம், மற்றும் உதவிப்பங்குத்தந்தைகள் மறையாசிரியர்கள், பங்குப்பணியாளர்களை பாராட்டுகின்றோம்.●

## இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம்




வவுனியா மறைக்கோட்டம், இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் தலைமையில் 43 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. எம். ஜெயபாலன், உதவிப்பங்குத்தந்தை மற்றும் மறையாசிரியர்களை அன்போடு வாழ்த்துகின்றோம்.●

## தரணிக்குளம் புனித யோசேவ்வாஸ் ஆலயம்.




வவுனியா மறைக்கோட்டம், தரணிக்குளம் புனித யோசேவ்வாஸ் ஆலயத்தில் 16 மாணவ மாணவியருக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் 02.09.2018 அன்று மாலை 5.00 மணிக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கினார். பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியசாமி அவர்கள் பங்கு மறையாசிரியர்களின் ஒத்துழைப்போடு, பிள்ளைகளை சரியான முறையில் ஆயத்தப்படுத்தி, வழிபாடுகளையும் நல்லமுறையில் ஒழுங்குபடுத்தியிருந்தார். அர்ப்பணிப்போடு செயற்படும் பங்குத்தந்தையர்களை பாராட்டுகின்றோம்.●

## முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயம்.




கடந்த 09.09.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 43 மறைக்கல்வி மாணவர்களுக்கு எம் ஆயர், அவர்கள் உறுதிபூசுதல் திருவருட்சாதனம் வழங்கினார். இந்நிகழ்வின்போது பங்குத்தந்தை அருட்பணி ஜெயசீலன் பங்குமக்கள் அனைவரும் முதல் முறையாகத் தம் பங்கிற்கு வருகை தந்துள்ள ஆயர் அவர்களை மங்களகரமாக, அன்போடு வரவேற்றனர். பங்குத்தந்தையையும், அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற பங்கு மறையாசிரியர்கள், பங்குப்பணியாளர்களையும் வாழ்த்துகின்றோம்.●

# மறைக்கல்வி நிலையச் செய்திகள்

**தேசிய மறைக்கல்வித் தினம் - 16.09.2018**

"என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்." யோவா. 21:15

கடந்த புரட்டாதி 10ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை தேசிய மறைக்கல்வி வாரம் மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் மிகச் சிறப்பாக அனுஸ்டிக்கப்பட்டது. அநேகமான பங்குகளில் மறைக்கல்வி வாரத்தில் ஒவ்வொரு தினமும் மறைக்கல்வி மாணவர்களுக்கான போட்டிகள், விளையாட்டுக்கள், சிறப்பு ஒன்றுகூடல்கள், முதியோர் தரிசிப்பு போன்று பல நிகழ்வுகள் நடைபெற்றன. 16ஆம் திகதி மறைக்கல்வி தினம் அன்று காலை சிறப்புத் திருப்பலியும், மாலை கலை நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

**மறைக்கல்வி மாணவர்களுக்கான தேர்வு 03.11.2018**

இவ்வருடமும் வழமை போன்று மறைக்கல்வி மாணவர்களுக்கான மறைக்கல்வித் தேர்வு கார்த்திகை 03 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 முதல் 12.00 மணி வரை மன்னார் மறைமாவட்டத்திலுள்ள மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய 4 கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் நடைபெறும். ஏறக்குறைய 160 பாடசாலைகளிலுள்ள 12,000 மாணவர்கள் (தரம் 3-11 வரை) இத்தேர்வுக்கு தோற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.●

# கரிசல் புனித கப்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா





மன்னார் மறைமாவட்டத்தின் கரிசல் புனித கப்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா சனிக்கிழமை 08.09.2018 அன்று பங்குத்தந்தை அருட்பணி. பெனோ அடிகளாரின் தலைமையில் நடைபெற்றபோது மன்னார் மறைமாவட்ட ஆன்மீக, மரியாயின் சேனை பக்தி சபை இயக்குனர் அருட்பணி. அ. இராயப்பு அடிகளார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, பங்குத் தந்தையுடன் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பதையும், கலந்து கொண்ட பக்தர்களின் ஒரு பகுதியினரையும், திருச்சுருப பவனியையும் படங்களில் காணலாம்.●

மன்னார் மாவட்டச் செய்திகள்

## சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல் மாவட்டங்களின் பிரதிநிதிகளுடன் பகிர்வு




யு.எஸ்.எயிட். உதவியுடன், இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் சமயங்களினூடாக நல்லிணக்க அனுபவ பகிர்வு சுற்றுலா கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி முதல் செப்ரம்பர் 2ஆம் திகதி வரை நடைபெற்றது. நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற இச் சுற்றுலாவில் மன்னார், புத்தளம் நுவரெலியா ஆகிய மாவட்டத்திலிருந்து சுமார் நூறு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகன் பெரோ, மன்னார் மாவட்டத்திலிருந்து அருட்சகோதரி ஏ. ரூபராணி, நுவரெலியா பௌத்த மதத் தலைவர்கள் வண. ஏ.அமித்தஹகவா ஹிமி தேரர், வண. சுமதலங்கார தேரர், புத்தளம் வண. சந்திரத்தின தேரர், புத்தளம் பிக்குணி வண. ஏ.தம்மமாலா, இந்து சமய குருக்களில் நுவரெலியா பிரமசிறி நந்தகுமார் குருக்கள், சிவசிறி என். நிகிராம் குருக்கள், நாவலப்பிட்டி கிறிஸ்தவ மத போதகர் வண.பிதா. ஆனந்தராஜா இவர்களுடன் மூன்று மாவட்டங்களைச் சார்ந்த பௌத்த, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்து, முஸ்லீம் மதங்களைச் சார்ந்தவர்கள் இவ்வுறவுப்பால நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.●

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு அன்பளிப்பு




காணாமல் ஆக்கப்பட்டோரின் பிள்ளைகள் சுமார் நூறு பேருக்கு கல்விக்கான உபகரணங்களும், உறவுகளுக்கு ஆடைகளும் வழங்கும் வைபவம் மன்னார் பிரஜைகள் குழுவினால் 07.09.2018 அன்று மன்னார் ஜே.ஆர்.எஸ் நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் மெதடிஸ்த ஆலய அருட்பணி ஜெகதாஸ் அடிகளார், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இவ்வுறவுகளுக்கு இவற்றை வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.●

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## தேசிய பொலீஸ் தினத்தை முன்னிட்டு தென்னம் கன்றுகள் நடுகை

மன்/ சின்னப்பண்டிவிரிச்சான் கிராமத்தில் தூய பிரான்சீஸ்கு சவேரியார் ஆலய வளாகத்தில் 02.09.2018 அன்று ஞாயிறு திருப்பலிக்குப் பின்னர் பொலீஸ், பொதுமக்கள் நட்புறவு அமைப்பினால் மடுப்பிரதேசப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மடவெல அவர்கள் தலைமையில் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. ரெறன்ஸ் குலாஸ் அவர்களது முன்னெடுப்புடன் தென்னங்கன்றுகள் நடப்பட்டன. இந் நிகழ்விற்கு ஆலய நிர்வாகத்தினர், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர், திருப்பாலத்துவ சபையினர், மாதாகூட்டத்தினர் போன்ற பக்திச் சபைகளின் உறுப்பினர்கள் பெரும்பாலோர் கலந்து சிறப்பித்தனர்.●

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# கவுனாஸ் நகரில் திருத்தந்தை பிரான்சிஸ்



கவுனாஸ் நகரின் Santakos பூங்காவில் திருத்தந்தை நிறைவேற்றிய திருப்பலியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட விசுவாசிகள் கலந்துகொண்டனர். வில்நியூஸ் நகரிலிருந்து 106 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கவுனாஸ் நகருக்கு செப்ரம்பர் 23 ஆம் திகதி அன்று காலை 8.15 மணிக்கு காரில் புறப்பட்டார். திருத்தந்தை பிரான்சிஸ். லித்துவேனியாவின் இரண்டாவது பெரிய நகரமான கவ்னாஸ், Neris மற்றும் Nemunas ஆறுகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்கது.

இந் நகரிலுள்ள விலங்கியல் பூங்கா, லித்துவேனியாவிலுள்ள ஒரே பூங்காவாகும். ஏறத்தாழ 12 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட, கவ்னாஸ் நகரின் Santakos பூங்காவில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட விசுவாசிகள் வெள்ளமென ஆரவார மகிழ்ச்சியுடன் கூடியிருந்தனர். திருத்தந்தை திறந்த காரில் பூங்காவை வலம்வந்த வேளையில், மக்கள் மஞ்சளும், வெண்மையும் கொண்ட வத்திக்கான் நாட்டின் கொடிகளை ஆட்டிக்கொண்டு, உரத்த குரலில் திருத்தந்தையை வாழ்த்திக்கொண்டிருந்தனர். வெண்மை நிறத்தில் உடையணிந்த பெரிய பாடகர் குழு தொடக்கப் பாடலைப் பாட, திருத்தந்தையும் திருவழிபாட்டு ஆண்டின் 25ஆம் ஞாயிறு திருப்பலியை ஆரம்பித்தார். இத்திருப்பலியின் மறையுரையில் ‘‘இயேசுவை நம் நடுவே வரவேற்போம். அவரது வார்த்தைகள் வழியே, திருப்பலி வழியே, நம்மைச் சுற்றியுள்ள சிறியவர்கள் வழியே நம் நடுவே இயேசுவை வரவேற்போம்’’ என்றார் திருத்தந்தை. இத்திருப்பலியின் இறுதியில் ஞாயிறு மூவேளை செப உரையும் ஆற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ். மூவேளை செப உரைக்குப் பின்னர், கவுனாஸ் உயர்மறைமாவட்ட தலைமைஇடம் சென்றார் திருத்தந்தை. இவ்விடம் இவ்வுயர் மறைமாவட்டத்தின் பெரிய குருத்துவ கல்லூரியாகும். பெரிய போரின்போது இவ்விடம் இராணுவ மருத்துவமனையாக மாற்றப்பட்டது. இதன் பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டதால் குருத்துவக் கல்லூரி மூடப்பட்டது.

இதன் நூலகத்தில் இருந்த ஏறத்தாழ 90 ஆயிரம் புத்தகங்கள் அழிக்கப்பட்டன. அதிகமான அருட்பணியாளர்கள் சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும், 1945ஆம் ஆண்டுக்கும், 1981ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கவுனாசில் 428 அருட்பணியாளர்கள் படித்துள்ளனர். லித்துவேனியா சுதந்திரம் அடைந்தபின்னர் இவ்விடம் மீண்டும் திருஅவையிடம் ஒப்படைக்கப்பட்டது.

➡ 15

# செல்லவேண்டிய இடத்தைக் காண்பித்து வழி நடத்தும் தூதர்கள்



நம் பயணத்தில் உதவ மட்டுமல்ல, நம் பாதையைத் தெரிவு செய்து, அழைத்துச் செல்பவர்களும் புனித காவல் தூதர்களே.

நாம் செல்ல வேண்டிய இடத்தை நமக்கு காண்பித்து, அந்த இடம் நோக்கி நம்மை அழைத்துச் செல்பவர்களே நம் காவல் தூதர்கள் என்ற கருத்தை மையமாக வைத்து தன் டுவிட்டர் செய்தியை இச்செவ்வாயன்று வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

‘‘நம் வாழ்வில் காவல்தூதர்களின் இருப்பு என்பது பயணத்தில் நமக்கு உதவுவதற்காக மட்டும் அல்ல, மாறாக நாம் எங்கு செல்ல வேண்டுமோ அந்த இலக்கை நமக்குக் காண்பிப்பதற்குமாகும்’’ என புனித காவல் தூதர்கள் திருவிழாவையொட்டி திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தி கூறுகின்றது. மேலும அச்செய்தியில், ‘இறைவனின் புனிதமிகு தாயே, உம் அடைக்கலம் தேடி ஓடி வருகின்றோம். எம்முடைய தேவைகளில் எழுப்பும் விண்ணப்பங்கள் குறித்து பாராமுகமாய் இராதேயும். அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் எம்மை விடுவித்தருளும், மகிமை நிறை அருள்கன்னியே’’, என ஒரு செப விண்ணப்பத்தையும் எழுப்பியுள்ளார்.●

# மரணதண்டனையை முற்றிலும் ஒழிக்க விரும்பும் திருப்பீடம்



‘‘தவறு செய்பவர் திருந்தி வாழ வழிவகுப்பது ஒன்றே இவ்வுலகை குற்றங்களிலிருந்து விடுவிக்கும் என்பதில் திருப்பீடம் நம்பிக்கை கொண்டுள்ளது’’ - பேராயர் காலகர். மரண தண்டனையை எதிர்த்து குரல் எழுப்பும் ஐ.நா. அவையுடன், உலக நாடுகள் அதிகமதிகமாக இணைந்து வரும் இவ்வேளையில், திருப்பீடமும் மரண தண்டனையைக் குறித்து பல காலமாக எழுப்பிவரும் குரலை மீண்டும் ஒரு முறை எழுப்புகின்றது என்று வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். ‘‘மரண தண்டனை: வறுமையும், சட்ட உரிமையும்’’ என்ற தலைப்பில் ஐ.நா.வின் தலைமையகத்தில் செப்ரம்பர் 25 அன்று நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் திருப்பீட பன்னாட்டு உறவுகள் துறையின் தலைமைச் செயலர், பேராயர் பால் ரிச்சர்ட் காலகர் அவர்கள் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

மரண தண்டனையை முற்றிலும் ஒழிப்பதற்கு, 20ஆம் நூற்றாண்டில் திருப்பீடம் பல முயற்சிகளை மேற்கொண்டதை இவ்வுலகம் அறியும் என்று கூறிய பேராயர் காலகர் அவர்கள், 21ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து, மரண தண்டனைக்கு எதிராக திருப்பீடம் தன் முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளது என்று எடுத்துரைத்தார். தனி மனிதர் ஒவ்வொருவரும் மதிப்பிற்குரியவர், மற்றும், பொதுவான நன்மை ஆகியவற்றை, தன் இரு தூண்களாகக் கொண்டுள்ள திருப்பீடம், இதே அடிப்படையில், எந்தச் சூழலிலும் மரண தண்டனையை திருஅவை ஏற்றுக்கொள்ளாது என்பதை, தன் மறைக்கல்வி பாடமாக, அண்மையில் வழங்கியுள்ளது என்று, பேராயர் காலகர் அவர்கள், தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

தவறு செய்பவர் திருந்தி வாழ வழிவகுப்பது ஒன்றே, இவ்வுலகை, குற்றங்களிலிருந்து விடுவிக்கும் என்பதில், திருப்பீடம் நம்பிக்கை கொண்டுள்ளது என்று, பேராயர் காலகர் அவர்கள், ஐ.நா. அவையில் வழங்கிய உரையின் இறுதியில் கூறினார்.●

# 15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் ஆசியாவிலிருந்து 71 பிரதிநிதிகள்



ஆசியாவிலிருந்து 71 பிரதிநிதிகள் கலந்துகொண்டு, உலக ஆயர்களுடன், ‘இளையோர், விசுவாசம் மற்றும் அழைத்தலை தெளிந்து தேர்தல்’ என்பது குறித்து விவாதித்தனர். இளையோர், விசுவாசம் மற்றும் அழைத்தலை தெளிந்து தேர்தல் என்ற தலைப்பில் இளையோரை மையப்படுத்தி நடைபெற்ற 15வது உலக ஆயர்கள் மாமன்றத்தில், ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் கலந்துகொண்ட பிரதிநிதிகளின் பெயர்கள், மாமன்றத்தின் தலைவர் பிரதிநிதிகள், செயலாளர்கள், திருத்தந்தையினாலேயே நியமிக்கப்பட்டனர்.

ஈராக்கின் கர்தினால் லூயில் இர.்.பேல் சாக்கோ, மியான்மார் கர்தினால் சார்லஸ் மாங் போ, பாப்புவா நியு கினி கர்தினால் ஜான் ரிபாட் ஆகியோர், உலக ஆயர்கள் மாமன்றத்தில், தலைவர் பிரதிநிதிகளாகவும், லெபனானிலிருந்து நான்கு பேர், இந்தியாவிலிருந்து இருவர் மற்றும் பிலிப்பைன்சிலிருந்து ஒருவர் என, ஏழு பேர் உதவியாளர்களாகவும் கலந்து கொண்டனர்.

இலங்கை, இந்தியா பங்களாதேஷ், தாய்வான், கொரியா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், இந்தோனேசியா, ஈரான், கஜகஸ்தான், லாவோஸ், கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர், புருனெய், மியான்மார், அரபு நாடுகள், பாகிஸ்தான், தாய்லாந்து, கிழக்கு திமோர், வியட்நாம் ஆகிய ஆசிய நாடுகளின் திருஅவைகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சிறப்பாக இலங்கையிலிருந்து இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதி மேதகு கலாநிதி கிலிற்றஸ் சந்திரஸ்ரீ பெரேரா ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டார்.

இளையோர், விசுவாசம், அழைத்தலை தெளிந்துதேர்தல் எனும் தலைப்பில் ஒக்ரோபர் 3ஆம் திகதி புதன் கிழமையன்று மாமன்றப் பிரதிநிதிகளுடன் திருப்பலி நிறைவேற்றி, 15வது உலக ஆயர்கள் மாமன்றத்தை ஆரம்பித்து வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

# புனித அன்னை தெரேசாவைப் பற்றிய புதிய நூல்

அன்னை தெரேசா அருளாளராக உயர்த்தப்பட்ட வேளையில், வத்திக்கானில் வாழ்ந்தோருக்கு வழங்கப்பட்ட ஆன்மீக உரைகளின் தொகுப்பாக ஒரு புதிய நூல் வெளியிடப்பட்டது. புனித அன்னை தெரேசா அவர்கள் இறையடி சேர்ந்த நாள். புரட்டாதி 5ஆம் திகதி சிறப்பிக்கப்பட்டது. அதற்கு முன் ஆவணி 31ல் அன்னையைப் பற்றிய மற்றுமொரு நூல் இத்தாலிய மொழியில் வெளியாகியது.

‘‘அன்னை தெரேசா கடவுள் நம்பிக்கையற்றவருக்கும், திருமணமானவர்களுக்கும் புனிதர்’’ என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூலை, பாப்பிறை இல்லத்தில் ஆன்மீக உரைகளை வழங்கிவரும் அருட்பணி ரானியேரோ காந்தலமெஸ்ஸா (Raniero Cantalamessa) அவர்கள் எழுதியுள்ளார். 1980ஆம் ஆண்டு முதல் பாப்பிறை இல்லத்தின் மறையுரையாளராகப் பணியாற்றிவரும் இவர் அன்னை தெரேசா அருளாளராக உயர்த்தப்பட்ட நிகழ்வையொட்டி பாப்பிறை இல்லத்திலும், வத்திக்கானிலும் வாழ்ந்தோருக்கு வழங்கிய ஆன்மீக உரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.●

# குடும்ப வாழ்வின் மேன்மையை அறிவித்துவரும் திருத்தந்தையர்



‘‘திருமண அருளடையாளத்தை முன்னின்று நிகழ்த்தும் அருட் பணியாளர்களுக்கு, குடும்ப வாழ்வை மேற்கொள்வோருடன் இணைந்து பயணிக்கும் கடமையும் உள்ளது’’ - திருத்தந்தை

குடும்ப வாழ்வை உயர்த்திப்பிடித்த திருத்தந்தையரின், குறிப்பாக, திருத்தந்தை புனித 2ஆம் ஜான் பால் அவர்களின் வழியைத் தொடர்ந்து, தானும் குடும்ப வாழ்வின் மேன்மையை அறிவித்து வருவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செப்ரெம்பர் 27 வியாழன் மாலை வழங்கிய ஓர் உரையில் கூறினார். உரோமை மறைமாவட்டமும், வத்திக்கான் நீதித்துறையும் இணைந்து, ‘‘திருமணமும், குடும்பமும்’’ என்ற மையக்கருத்துடன், ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பங்கேற்ற 850 உறுப்பினர்களை, உரோம் நகர் புனித ஜான் இலாத்தரன் பசிலிக்கா பேராலயத்தில சந்தித்தத் திருத்தந்தை அவர்களுக்கு வழங்கிய உரையில் இவ்வாறு கூறினார்.

### குடும்ப வாழ்வில் உருவாகும் பிரச்சனைகளின் பின்னணி

திருமண உறவிலும், குடும்ப வாழ்விலும் உருவாகும் பல பிரச்சனைகளின் பின்னணியில், சரியான புரிதல் இல்லா நிலையும், உணர்ச்சிகளின் வெளிப்பாடும் உள்ளன என்பதைத் திருத்தந்தை அவர்கள் தன் உரையில் கவலையுடன் சுட்டிக்காட்டினார். திருமணத்திற்கு முன்னர், இளையோருக்கு ஒரு சில வகுப்புக்கள் நடத்தப்பட்டாலும், அவர்களுக்கு திருமணத்தையும், குடும்ப வாழ்வையும் குறித்த பாடங்கள் தொடர்ந்து வழங்கப்படுவது அவசியம் என்று திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார்.

### அருட்பணியாளரின் கடமை தொடர்கின்றது

திருமண அருளடையாளத்தை முன்னின்று நிகழ்த்தும் அருட்பணியாளர்கள் தம் கடமை முடிந்துவிட்டதென்று எண்ணாமல், குடும்ப வாழ்வை மேற்கொள்வோருடன் இணைந்து பயணிக்கும் கடமையும் உள்ளதென்று திருத்தந்தை அவர்கள் தன் உரையில் வலியுறுத்தினார்.

➡ 15

# இறப்பு வரை வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணியுங்கள்



‘‘புனிதத்துவமும் நற்செயல் முயற்சிகளும் ஒரு சிலருக்கு மட்டும் உரியதல்ல, மாறாக, அனைவராலும் வாழ்வு முழுவதும் கடைபிடிக்கப்பட வேண்டியது.’’ – திருத்தந்தை

புனிதத்துவத்திற்கும், பிறரன்பின் பாதையில் இணைந்து நடைபோடுவதற்கும், விடுக்கப்படும் அழைப்பை ஒவ்வொரு கிறிஸ்தவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி செயலாற்றிவரும் ரொஸ்மினியன் துறவு சபையை பாராட்டுவதாகத் தெரிவித்தார். அருளாளர் Antonio Rosmini என்பவரால் தொடக்கப்பட்டு, ரொஸ்மினியர்கள் என அழைக்கப்படும் பிறரன்புத் துறவு சபையின் உலகப் பொது அவைக் கூட்டத்தில் கலந்து கொண்டோரை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடிய திருத்தந்தை அவர்கள், திருப்பீடத்திற்கு எல்லயற்ற மதிப்பையும், அதனோடு நெருங்கிய தொடர்பையும், பாசத்தையும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்களுக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அச்சபை நிறுவனரின் வார்த்தைகளை மீண்டும் நினைவூட்டினார்.

➡ 15

புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் சாட்சிய வாழ்வும், பணியும்

### இலங்கை மக்களின்மேல் கொண்ட ஆன்மீகத்தாகம்

16ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், போர்த்துக்கேயரின் வருகையால் இலங்கையில் போதிக்கப்பட்ட கிறிஸ்தவ மறை, தீவின் கரையோரப்பகுதிகளில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வளர்ச்சி பெற்றிருந்தது. மறைபணியாளர்கள் பலமுறைகளில் தம் பணிகளைச் சிறப்புடன் ஆற்றி வந்தனர். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒல்லாந்தரால் இலங்கையின் கரையோரப்பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் போர்த்துக்கேய ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து முற்றாக நீக்கவேண்டுமென்று தீவிரமாக செயற்பட்டனர்.

எனவே, போர்த்துக்கேயரால் இலங்கையில் கொண்டுவரப்பட்ட கத்தோலிக்க மதத்தினரை கொடூரமாகத் துன்புறுத்தி, முற்றாக அழித்துவிட முற்பட்டனர். கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டது. கத்தோலிக்க ஆலயங்கள், பாடசாலைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒல்லாந்தரின் கல்வினிஸ் மதம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. கத்தோலிக்கர் நாடுகடத்தப்பட்டனர். சிறைபிடிப்பட்டனர். தண்டப்பணம் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். கத்தோலிக்க மறைபணியாளர் அனைவரும் நாட்டைவிட்டு துரத்தப்பட்டனர். குருக்களுக்கு மறைவிடம் கொடுக்கும் கத்தோலிக்கர்கள் தண்டிக்கப்பட்டனர்.

இலங்கையில் கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தரால் அழிக்கப்படுவதையும், மக்களின் அவல நிலையையும் கோவாவிலிருந்து சீனா நாட்டிக்குச் சென்று, திரும்பிச் செல்லும் வழியில் இலங்கையில் தங்கியிருந்த போது தான் கண்களால் கண்டவற்றை குருவானவர் ஒருவர் மூலம் அறிந்து கொண்ட யோசேவ்வாஸ் அடிகளார் இலங்கை மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்டார். இதன் காரணமாக தமது நெருங்கிய குருக்களின் ஆலோசனையைக்கேட்டு அறிந்து கொண்டார்.

இலங்கையில் ஆன்மீக வளர்ச்சியின்றி அங்கலாய்த்த, பரிதவித்த மக்களை இறைவனின் மக்களாக மீண்டும் ஒளிரச்செய்ய ஆவலாய் இருந்தார். இறைவனும், இலங்கை மக்கள் மட்டில் இரக்கம் கொண்டு அடிகளார் மூலம் அவர்களுக்குப் பணிபுரிய சித்தமாயிருந்தார். யோசேவ்வாஸ் அடிகளாரும் இந்நோக்கம் நிறைவேற வேண்டுமென்று சிலுவைமுன் அதிக நேரத்தைச் செலவிட்டு ஆண்டவரிடம் மன்றாடுவார்.

### இலங்கை நோக்கிய பயணம்

1686 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இலங்கை நோக்கிய தமது பயணத்தை ஆரம்பித்தார். தம்முடன் செபப்புத்தகத்தையும், திருப்பலிக்குத் தேவையான பொருட்களையும் மட்டுமே எடுத்துக்கொண்டார். வேறு எவற்றையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. உதவியாளர்களாக தனது சபைக்குரு ஒருவரையும், சகோதரன் ஒருவரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படலானார். வரும் வழியில் முன்பு தான் மறைப்பணிபுரிந்த கன்னடப்பிரதேச மக்களை சந்தித்து அவர்களுக்கு மறைபணிகள் பல செய்தார். ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் அம்மக்களோடு தங்கியிருந்து அவர்களை விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தினார்.

1687ஆம் ஆண்டு தை மாதத்தில் கன்னடப்பிரதேசத்தை விட்டு, காட்டுப்பாதைகள் வழியாக கால்நடையாகவும், கடல் யாத்திரையாகவும் மலையாளப் பிரதேசத்திற்குள் சென்றார். அங்குள்ள கிறிஸ்தவர்களைச் சந்தித்துக்கொண்டார். மேய்ப்பனில்லாத ஆடுகள் போன்று வாழ்ந்த அம்மக்களுக்கு போதனைகள் வழங்கியும், பாவசங்கீர்த்தனம், நற்கருணை ஆகிய அருட்சாதனங்களை வழங்கியும் அவர்களைத் தேற்றினார்.

1687ஆம் ஆண்டு மன்னார் கரையில் இறங்கி, பின்பு யாழ்ப்பாணம் சென்றார். யோசேவ்வாஸ் அடிகளார் மறைப்பணியில் அனுபவித்த துன்பங்கள், இடையூறுகள் அளவிட முடியாதவையாகும். இருந்தபோதும் தமது முயற்சிகளில் தளர்வடையாது செயலாற்றி வந்தார். அன்றாட வாழ்வில் தம்மோடு கூடவே பணிபுரிந்தவர்களினது தேவைகளை நிறைவு செய்வதற்கும் எதுவுமே இல்லாத நிலை காணப்பட்டது. கடவுள் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரு சில நல்ல உள்ளம் படைத்த கிறிஸ்தவர்கள் மூலம் கடவுள் அவர்களுக்கு உதவிகள் பல புரிந்தார்.

### சிதறிய மந்தையை தேடிய நல்லாயன்

கிறிஸ்தவத்தை விட்டு விலகி, வேற்று மதவழிபாடுகளில் பங்கு கொண்டு வந்த கிறிஸ்தவர்கள் பலரை மனம் மாற்றி, மீண்டும் கிறிஸ்தவர்களாக்க அடிகளார் மேற்கொண்ட கடினமான முயற்சிகள் ஏராளம் என்று சொல்லலாம்.

பல்வகையான வேலைகளில் யோசேவ்வாஸ் அடிகளார் நேரத்தைச் செலவழித்தாலும், ஆண்டவரின் வார்த்தையை பிறருக்கு எடுத்துச் சொல்லுவதற்கு தேவையான உண்மைகளைப் படிப்பதற்கும் தவறுவதில்லை. "இறைவார்த்தையை அறிவி, வாய்ப்புக்கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு" என்ற பவுலின் வார்த்தைக்கு ஏற்ப யோசவ்வாஸ் அடிகளார் தம்மிடம் பிச்சைக்கு வருகின்ற ஏழை மக்களுக்கும் செபிக்க கற்றுக் கொடுப்பார். கிறிஸ்தவ மறையை கற்றுக்கொடுப்பார். இந்த நல்ல பழக்கத்தை உண்டாக்கிய பெருமை அடிகளாரையே சாரும்.

அவருடைய இரக்க செயல்களினதும், நற்கிரிகைகளினதும் புகழ் எங்கும் பரவியதால் அவரைக் காண்பதற்காகவும், அவரது போதனையை கேட்பதற்காகவும் மக்கள் பலர் அவரிடம் வந்தனர். அவருடைய போதனைகள் கல்லான, கடின இதயம் கொண்டவர்களையும் மெழுகுபோல உருக்கிவிடும் வல்லமையுடையதாக விளங்கியது. "கலப்பையில் கை வைத்த



பின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்லர்" என்ற இயேசுவின் அறிவுரைப்படி யோசேவ்வாஸ் அடிகளார் இறைவனின் பணிக்குத் தன்னை முழுமையாக கையளித்தார். தாய், தந்தை, சகோதரர், உற்றார், உறவினர் என்ற இரத்த உறவினரோடு உறவைப் பேணிக்கொள்வதை பொருட்படுத்தாது, முற்றும் துறந்த ஒருவராகத் தம்மை இறைவனின் ஊழியத்திற்கு கையளித்தார்.

### அடிகளார் ஆன்மீக தாகம் கொண்டவர்

மறை போதகப் பணியில் இவர் கொண்ட தணியாத ஆர்வம், இவருடைய ஆன்மீக தாகத்திற்கான அற்புதமான சான்றாகும். விசுவாச விதையை கிறிஸ்துவை அறியாத மக்களிடையே விதைக்க வேண்டுமென்று தன்னை முழுமையாக, அப்பணிக்காக அர்ப்பணித்த உண்மையான பணியாளன் இவர். இலங்கை முழுவதுமான இவரது கால்நடை மறையணங்கள் இவரின் ஆன்மீக தாகத்தின் அளவிடமுடியாத அடையாளங்கள். அச்சுறுத்தல்களுக்கும், அளவுகடந்த துன்பகரமான சவால்களுக்கு மத்தியிலும் கிறிஸ்துவை அடையாளப்படுத்தத் துடிக்கும் இவரது ஆன்மீகத் தாகம் பொற்களுக்கு அப்பாற்பட்டது. இவர் தான் பெற்றுக்கொண்ட அழைப்பையும், அவ்வழைப்பின் பொருளையும் தன் உயிரிலும் மேலாக நேசித்தார். பாதுகாத்தார். இவர் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின்மேல் கொண்ட வேட்கைதான், இவரது அற்புதமான பணிக்கான ஆழமான அடித்தளம் என்று சொன்னால் அது மிகையாகாது.

### மாதோட்டத்தில் பணிகள்

சிறிது காலம் கொழும்பில் தங்கியிருந்த பின்பு வாஸ் அடிகள் புத்தளம் சென்று அங்கிருந்து மாதோட்டம் சென்றார். மாதோட்டம் பெரும் எண்ணிக்கையிலான கத்தோலிக்க மக்களைக் கொண்டுள்ள இடம். அது வன்னி வரையும் பரவியிருந்தது. இது முக்கிய கத்தோலிக்க பகுதியாக விளங்கியபோதும், யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று வருடங்களின் பின் தப்பி ஓடியபோது வாஸ் அடிகள் அங்கு செல்லவில்லை. ஏனெனில் மாதோட்டம் மன்னாருக்கண்மையில் அமைந்திருந்த வேளையில் மன்னார் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்ததுடன், யாழ்ப்பாண அரசுக்குட்பட்ட இடமாகவும் இருந்தது.

ஒல்லாந்த அதிகாரி கென்றிக் வன் றீட் வாஸ் அடிகளைத் தேடி குருவேட்டை நடத்தும்போது அங்கு செல்வது பாதுகாப்பற்ற விடயமாகும். அடிகளார் இவ்வேளையில் இலங்கையின் பல பகுதிகளிலும் பணியாற்றியிருந்தமையால் இவ்வாறான ஆபத்துக்களைச் சந்திப்பதற்கு ஆயத்தமாயிருந்தார். மன்னார் கத்தோலிக்கர் மத்தியில் சில காலம் அதிக ஆவலுடனும் பணியாற்றினார்.

பல கிராமங்களைப் பயமின்றி தரிசித்து, திருவருட்சாதனங்களை வழங்கி வந்தபோதும் அடிகளாரை கைது செய்வதற்கு எந்த வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இம்மக்களிடம் காணப்பட்ட மூட நம்பிக்கை, விசுவாசத்திற்கு பெரும் தீங்காய் இருந்தது. இங்கு சிற்றாலயங்களை அமைப்பதற்கு மூப்பர்களையும், அண்ணாவிமார்களையும் ஏற்படுத்த மக்களைத் தூண்டினார். மாதோட்டத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையிலான கத்தோலிக்கர் வாழ்ந்தமையினால் வெகுவிரைவில் இப்பகுதி ஒரு குரு தங்கியிருந்து பணியாற்றும் இடமாக மாறியது. மாதோட்டத்திலுள்ள கத்தோலிக்கர் மன்னார் தீவிற்கு திருவருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சென்றார்கள் என அறியப்படுகின்றது.

மன்னார் தீவில் அவ்வேளை பிரசித்தி பெற்ற ஏழு கத்தோலிக்க ஆலயங்கள் இருந்துள்ளன. இவை ஒல்லாந்தரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் தென்னிந்திய கரையோரத்திலிருந்து அனுப்பப்பட்ட மறையாசிரியர்கள் மன்னாரில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களுக்கு மறை அறிவை அளித்து வந்துள்ளார்கள்.

### யோசேவ்வாஸின் உடனுழைப்பாளிகள்

வாஸ் அடிகளார் 1689 முதல் 1692 வரையிலுமான காலப்பகுதியில் தனியொரு குருவாகவே இலங்கை முழுவதும் பணியாற்றினார். முதலில் யாழ்ப்பாணத்திலும் தொடர்ந்து கண்டிக்கும் சென்று, கண்டியைத் தமது பணியின் நடுநிலையமாக ஏற்படுத்தினார். அங்கிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கால் நடையாகச் சென்று மக்களைத் தரிசித்து, அவர்களுக்கு மறை அறிவையூட்டி, துன்பங்களைத் தாங்கப் பல வகைகளிலும் ஊக்குவித்து ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கொம்பனியினரிடமிருந்து எழுந்த கடும் சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார். முதன்முதலில் ஓர் இடத்தில் பணியாற்றி, வேறு இடங்களுக்குச் செல்லும் முன்பு, அந்தக் குழுமத்து மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மூப்பு, அண்ணாவி என்போரின் உதவியுடன் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார். வாஸ் அடிகள் மறையில் ஆழமான நன்மதிப்புப் பெற்றவர்களை மட்டுமே மக்களின் ஆலோசனையுடன், மூப்பராகவும், (அண்ணாவி) உபதேசியாராகவும் நியமித்தார். இவ்வாறு மக்களின் கருத்துக்களை ஏற்று உரிய மதிப்பளித்தமை அவரது ஆழமான ஆன்மீகத்தின் வெளிப்பாடாகவே தென்படுகின்றது.

மூப்பர் என்பவர் சமூகத்தின் தலைவராகவும், சமய, சமூக நிகழ்வுகளை முன்நின்று நடத்துபவராகவும், பிணக்குகளின் போது நடுநிலையாளராகவும் செயற்பட்டார். அண்ணாவி (உபதேசியார்) வழிபாடுகளின் போது குறிப்பாக, ஞாயிறு தினங்களில் குரு இல்லாத இடங்களில் பூசைத்தியானம் செபிப்பது, நோயாளருக்காக வேண்டுதல் செய்வது, இறந்தோரின் அடக்கச்சடங்கை நடத்துவது, ஆலயங்களைக் (கொட்டில் ஆலயங்கள்) கண்காணித்தல் என்னும் நிலைகளில் பணியாற்றினார்.

செபங்களைக் கற்றுக்கொடுப்பதுடன் திருவருட்சாதனங்களுக்கு பிள்ளைகளையும், பெரியோர்களையும் தயார்ப்படுத்துவதும், மக்கள் மத்தியில் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதும் இவர்களின் கடமையாகும். குறைந்த எண்ணிக்கையிலான குருக்கள் பணியாற்றிய நிலையில் வலுவான மறைப்பணியை வாஸ் அடிகளும் தொடர்ந்து ஒறற்றோரியன் சபைக்குருக்களும் மேற்கொள்ளவும், கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கவும் இது மிகப்பொருத்தமான பயனுள்ள முறையாயமைந்தது. மக்களும் இவர்களுக்கு மதிப்பளித்து இவர்களைத் தங்கள் தலைவர்களுக்காக ஏற்று ஒத்துழைப்பு வழங்கியமை, வாஸ் அடிகள் சூழலுக்குப் பொருத்தமான மறைபரப்பு முறையைக் கையாண்டார் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

### ஆபத்தில் அளித்த ஆதரவு

ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் கத்தோலிக்க மறையை இலங்கையிலிருந்து முற்றாக அகற்றுவதற்குப் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டிருந்தனர். அவற்றில் ஒன்றாக கத்தோலிக்க குருக்களுக்குப் புகலிடம் அளிப்பது மரணதண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பின்னணியிலும் வாஸ் அடிகள் தமது மறை அறிவிப்புப் பயணங்களின் போது எங்கு சென்றாலும் அவ்விடங்களிலுள்ள மக்களுடன் அவர்களின் சிறு குடிசைகளிலேயே தங்கி, அவர்கள் வழங்கிய உணவை உண்டு அவர்களில் ஒருவராகவே பழகினார். இதனால் மக்களுக்கும், அவருக்குமிடையே உறவு ஏற்பட்டது. ஆனால் மக்கள் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் வெளியிட்டிருந்த மரணதண்டனை எச்சரிக்கையின் மத்தியிலும் வாஸ் அடிகளுக்குப் புகலிடம் அளித்தமை, மற்றும் தமக்கு ஆபத்து ஏற்படினும் குருவைத் தங்களின் இல்லங்களில் ஏற்று ஆதரித்தமை குருவின் மேல் கொண்டுள்ள கவனத்தையும் பற்றையும், மதத்தின் மேல் கொண்டுள்ள ஆர்வத்தையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

### மக்கள் காட்டிய ஆர்வத்தில் கிடைத்த ஆறுதல்.

ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் விதித்திருந்த பல தடைகள், எச்சரிக்கைகள் மத்தியிலும் மக்கள் நடந்து கொண்ட விதம் வாஸ் அடிகளுக்குப் பெரும் ஆறுதலாக அமைந்திருக்கும். குறிப்பாக, எந்தக் குருவின் உதவியும் கிட்டாத நிலையிலும் மக்கள் தங்களாலான முயற்சிகளை மேற்கொண்டு தங்கள் விசுவாசத்தைக் காத்ததும், தாம் எதிர்கொண்ட பல ஆபத்துக்கள் மத்தியிலும் தங்கள் பிள்ளைகளுக்கு கத்தோலிக்க விசுவாசத்தை வழங்கியமையும், குருவுக்கு புகலிடம் அளித்தமையும், மக்கள் தங்கள் மத்தியில் ஒற்றுமையாக செயற்பட்டமையும், குரு மக்களிடம் கோரிக்கை விடுத்த வேளையில் ஒத்துழைப்பு வழங்கியமையும் கட்டாயம் யோசேவ்வாஸ் அடிகளுக்குப் பெரும் ஆறுதலாயும், ஊக்குவிப்பாயும் அமைந்திருக்குமென உறுதிபடக் கூறலாம். வாஸ் அடிகளும், ஒறற்றோரியன் சபை குருமாரும் அளித்த ஆழமான விசுவாசத்தினால் 1707இல் கொழும்பு மூப்பர் இம்மாவோ கொலோசோ என்பவரின் தலைமையில் கத்தோலிக்கர் தமது மனித உரிமைவேண்டி மேற்கொண்ட போராட்டம் குருக்களுக்கு பெரும் ஆறுதலை அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

### அடித்தட்டு மக்கள் சார்பானவர் (Grassroot Peole)

தாழ்த்தப்பட்டோர், உரிமையிழந்தோர், ஏழைகள், பாவிகள், வரிதண்டுவோர் எனப்பட்ட அடித்தட்டு மக்கள் சார்பாகச் செயற்படுவதென இயேசு எடுத்த தீர்மானம் அவரது வாழ்வின் முக்கிய தீர்மானமாயமைந்தது. வாஸ் அடிகளும் இலங்கை சென்று, ஒல்லாந்தர் ஆட்சியில் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு, ஆபத்துக்கள் மத்தியிலும் உதவுவது என மேற்கொண்ட தீர்மானம் அவரது வாழ்வின் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இத்தீர்மானத்தை வாஸ் அடிகள் மேற்கொள்வதற்கு அவரது ஆழமான ஆன்மீக வாழ்வே காரணமாயமைந்தது. அவரது பணியின்போது மக்களின் நன்மதிப்பையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்கும், பல ஆபத்துக்கள் மத்தியில் இறை பராமரிப்பில் உறுதியான நம்பிக்கை கொண்டு, அணைந்து கொண்டிருந்த விசுவாசத்தை மீண்டும் பெரும் சுடராக ஒளிரச்செய்வதற்கும் துணைநின்றது அவரது ஆன்மீகமே. இறைவன் ஏழையான இயேசுவில் தம்மை வெளிப்படுத்தினார். வாஸ் அடிகள் ஏழைகளில் இயேசுவைக் கண்டார். அவர்கள் மீட்புப்பணிக்கு தம் வாழ்வை அர்ப்பணித்தார்.



# மாணவர் மன்னா சிறப்புப் பக்கம்



## ஆசான் நீர் வாழ்க!

**திரு. யோசேப் ஆரோக்கியம் குருஸ்**
**(ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்– வங்காலை)**

இறையவன் தனக்கு நேரமில்லையென்றே
மறையவன் பணிக்கென உமைப்படைத்திட்டான்.
கறையதைநீக்கும் உம் பணியில் மாந்தர் நிறைவுபெற்று
குறையற்று வாழ்கின்றார் குவலயம் செழிப்புற்று.

ஆதாம், ஏவாளுக்குப் பாடம் சொல்ல அன்று நீர் இல்லை.
சோதனையில் அவர் வீழ்ந்து, உலகிற்கு தந்தார் தொல்லை.
போதனை நீர் செய்திருந்தால், புத்தி அவர் தெளிந்திருப்பார்.
சாதனை புரிந்தே, உலகில் சரித்திரம் படைத்திருப்பார்.

விஞ்ஞானம் உலகில் முன்னேறிடவே வேகமாய்,
எஞ்ஞான்றும் இங்கே உழைப்பவர் நீர் தாகமாய்.
மெஞ்ஞானம் அழிந்திடா தழைத்திட இருகண்மணி
துஞ்சாமல் கடினமாய் இளைப்பவர் நீர் எம் பொன்மணி.

ஏழ்மை உமை வாட்டினாலும் எல்லோர்க்கும் ஏணியாகிடுவீர்.
தாழ்மை இன்றி பிறர் வாழ அச்சாணியும் ஆகிடுவீர்.
தோழமையுடனே தொண்டாற்றிட உலகெங்கும் ஏகிடுவீர்.
வாழ்வைத் தொலைத்தவர்க்கும் வளமே நீர் ஆகிடுவீர்.

வீழ்க மடமை உமைவிட்டு தூர ஓடி.
ஆழ்க உம் அறிவு அகிலமெல்லாம் தேடி.
சூழ்க நல் வரங்களெல்லாம் உம்பதமே நாடி.
வாழ்க நீர் பல்லாண்டு வளம் பெற்று கோடி.●

## உருவாக்குங்கள்

**செல்வன். டேவிட். ஜெறோம் ஜதுசன்**
**(மன் மாவிலங்கேணி றோ.க.த.க. பாடசாலை)**

நாங்கள் முதல் நாள் பாடசாலை வந்தோம். எங்கள் கைகளை நீங்கள் பற்றிக் கொண்டீர்கள். எல்லாமே புதியனவாக இருந்தபோது பொறுமையோடு எங்களுக்குப் புரிய வைத்தீர்கள். நம்பிக்கையையும், அன்பையும், இறை பக்தியையும் எங்களுக்குக் கற்றுத் தந்தீர்கள்.

உங்கள் சிவப்புப்பேனா இன்று போடுகின்ற ஒவ்வொரு சரியும், பிழையும் எங்கள் வாழ்வில் சரியையும், பிழையையும் தெரிவு செய்ய எங்களுக்கு உதவும், உங்கள் காலடிகள் மீது எங்கள் கால்களை வைத்து உங்களைப் பின்பற்றுகின்றோம்.

கவனமாக இருங்கள் - ஏனென்றால் உங்களைத்தான் நாங்கள் பின்பற்றுகின்றோம். நம்பிக்கையோடு உங்கள் முன் அமர்ந்திருக்கின்றோம். எங்களை உருவாக்குங்கள் நாங்கள் நிறைய, நிறைய சாதிப்போம். அந்த சாதனைகளின் போது உங்கள் பெயரை உலகம் உரத்து உச்சரிக்கும். நன்றிப்பூக்களை உங்கள் மலர்ப்பாதங்களில் தூவி நிற்கின்றோம்.●




## பேசாலையில் மறைக்கல்வி வார விழா







மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயப் பங்கில் கடந்த வாரம் மறைக்கல்வி வாரமாக அனுஷ்டிக்கப்பட்டதுடன் ஞாயிற்றுக் கிழமை 16.09.2019 அன்று இத் தினம் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

பேசாலை பங்குத் தந்தையும், சட்ட முதன்மைக் குருவுமான அருட்பணி ச.தேவராஜா கொடுதோர் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கி.அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, உதவிப் பங்குத்தந்தை அருட்பணி பசில் கிளைன் அடிகளாருடன் ஒன்றிணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.●

## தாழ்வுபாடு பங்கின் மறைக்கல்வி வார சிறப்புத் திருயாத்திரை

31.08.2018 வெள்ளிக்கிழமை அன்று காலை 8.30 மணியளவில் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் இருந்து பங்குத்தந்தை அருட்பணி. பி. யேசுராஜா அடிகளாரின் தலைமையில் அருட்சகோதரி, மறையாசிரியர்கள், மறைக்கல்வி மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மடுத்தேவாலயத்தை நோக்கி திருயாத்திரை மேற்கொண்டோம். தொடக்கமாக மடு மாதாவின் ஆரம்ப இருப்பிடமான மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்தை பார்வையிட்டோம். மாந்தை ஆலய வரலாறு பற்றி எமது பங்குத்தந்தை மாணவர்களுக்கு சுருக்கமாக கூறினார்.

➡ 15



## திருமதி. நயோமி அன்ரனி குருஸ் 'நல்லாசிரியர் விருது' பெற்றார்



கடந்த 16.09.2018 அன்று, வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி நயோமி அன்ரனி குருஸ் அவர்கள் சென்னையில் பாரிபௌண்டேஷனின் நல்லாசிரியர் விருதினைப் பெற்றுக்கொண்டார். அவரை மன்னா வாழ்த்தி நிற்கின்றது.●

## நல்லாசிரியர்: ஆளுமையும், ஆன்மீகமும்

# ஆசிரியரை நாடும் இறைவன்

சக்தியிலும், அறிவிலும், ஞானத்திலும், இறைவன் அளவற்றவர். முடிவில்லாதவர். குழந்தைகளின் அறிவையும், ஞானத்தையும் விருத்திசெய்து, அவர்களை இலகுவாக பரீட்சையில் சித்தியடையச் செய்ய இறைவனால் முடியும். ஆனால் இறைவனின் விருப்பமும் வழியும் அதுவல்ல. பிள்ளைகளின் எல்லா வளர்ச்சிப் படிநிலைகளிலும் அவர்களை அரவணைத்து, அன்புசெய்து, அமுதூட்டி வளர்த்தெடுக்க தாயைப் படைத்தது போல் அறிவையும், ஞானத்தையும், ஊட்டி வளர்க்க நல்லாசிரியர்களை இறைவன் தேர்ந்து கொண்டார். மனிதனை மீட்க மனிதனின் உதவியும், ஒத்துழைப்பும் இறைவனுக்குத் தேவைப்படுகின்றது. ஆனால், இம் மீட்பு செயலில் இறைவனுக்கு உதவுவதற்கு குழந்தைகளுக்கு அறிவும், அனுபவமும் போதாதென்றபடியால் இம் முக்கியமான பணியில் தனக்கு உதவ இறைவன் ஆசிரியர்களை அழைத்திருக்கின்றார். பல ஆசிரியர்களைப் பொறுத்தவரை, சிலவருடங்களுக்கு முன்பிருந்தே, ஏனைய அரச துறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தினாலோ அல்லது ஆசிரிய சேவையில் காணப்படும் சலுகைகளுக்காகவோ இத்துறையைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். தற்காலத்தில் ஆசிரியரின் ஊதியமும் ஓரளவுக்கு திருப்திகரமானதாக உள்ளது என்பதையும் இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானது. விரும்பியோ, விரும்பாமலோ இந்நிலையை ஆசிரியர்களில் பலரும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இவ்வாறான ஆசிரியர்கள் கூட இறைவனுக்கு உதவுபவர்களாக இருக்கின்றனர். ஆசிரியர்களுக்கு கட்டாயமாக கிடைக்கவேண்டிய பயிற்சியும், இருக்கவேண்டிய வினைத்திறனும் இவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். இயலுமையும், புத்திசாலித்தனமும் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால், தனது மனத்தையும், இதயத்தையும் திறந்து, இறைவனின் உதவியை நாடினால் இறைவனின் உதவிக்கரம் நீட்டப்படும் என்பது உறுதி. ஆசிரியர்களைப் பொறுத்தவரை இரு துருவங்களாக (Extremes) அவர்களைக் காணலாம். நான் புத்திசாலி, பயிற்றப்பட்டவன், என்னால் எல்லாம் முடியும் என்ற மனநிலையோடும், அதீத தன்னம்பிக்கையோடும் தலைக்கனத்தோடும், இறைவனின் உதவி எனக்கு எதற்காக என்ற எண்ணத்தோடும் இருப்பவர்கள் ஒருவகையினர். உண்மை என்னவென்றால், ஒருவர் அறிவாளியோ இல்லையோ,

### தொடர் - 01



இறைவனின் வல்லமையிலும், உதவியிலும் நம்பிக்கை உண்டோ, இல்லையோ, வகுப்பறையில் ஒவ்வொரு வினாடியும் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் இறைவனின் வல்லமையை தனது கற்றல் கற்பித்தல் பணியில் உணர்ந்து கொள்வாராயின் அவரது ஆசிரியப்பணி மென்மேலும் வினைத்திறனுடையதாக அமையும். இவர்கள் முழு விருப்போடு பணிசெய்யவும், ஆர்வத்தோடு கற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கவேண்டுமென இறைவன் கேட்கின்றார். விவேகமும், நுண்திறனும், புத்திசாலித்தனமும் கொண்ட சிறப்புற பயிற்றப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் இது பொருத்தமானதாக அமையும். இன்னுமொரு வகையான ஆசிரியர்களையும் அவதானிக்கலாம். கற்றல் கற்பித்தல் பணியில் எம்மால் எல்லாவற்றையும் சாதிக்கமுடியாது என்று நினைப்பவர்கள் கடவுளின் வல்லமையை மதிப்பவர்கள்: பாராட்டுபவர்கள், உதவியை வேண்டி நிற்பவர்கள் அதேவேளை போதிய முயற்சி எடுக்காமல், அர்ப்பணிப்பின்றி, சோம்பேறித்தனத்தோடு இறைவனின் வல்லமையில் மட்டுமே நம்பிக்கை வைத்து எல்லாவற்றிற்கும் அவரையே கையேந்தி நிற்பவர்கள்.

இந்த இருவகை மனப்பான்மைகளும் தவறானவையாகும். இவ்விரு வகையான ஆசான்களால் வினைத்திறனோடு பணிசெய்ய முடிவதில்லை. தனது திறமையில் நம்பிக்கையும், விடாமுயற்சியும், தியாக சிந்தையும், அதேவேளை இறைவனின் உதவிக்கரத்திலும், வல்லமையிலும் நம்பிக்கையும் கொண்ட ஆசான்களையே இறைவன் எதிர்பார்க்கின்றார்.

ஆசிரியர்களே! நீங்கள் எந்தவகையைச் சார்ந்தவர்கள்? ஒவ்வொரு ஆசிரியரும் தனித்துவமுடையவர். ஒரே கற்பித்தல் பணியை வெவ்வேறு முறைகளில் தமக்கே உரிய பாணியில் செய்யக்கூடியவர். ஒருவிடயத்தை இரு ஆசிரியர்கள் இரு வேறுவிதமாக கற்பிப்பார்கள். ஆகவே குறிப்பிட்ட ஒரு ஆசிரியர் தனது கற்பித்தலை சரியாகவும், நேர்த்தியாகவும் மேற்கொள்ள வில்லையெனில் அவரை இன்னுமொரு ஆசிரியரால் பதிலீடு செய்ய முடியாது. பதிலாளும் அதே பாணியில் கற்பித்தலை மேற்கொள்ள முடியாது. எனவே குறிப்பிட்ட ஆசிரியர் மூலம் குறிப்பிட்ட வகுப்புக்கு இறைவனால் திட்டமிடப்பட்ட குறிப்பிட்ட பணி நிறைவேற்றப்படாமல் போகலாம்.

**பதிப்பாசிரியர் குறிப்பு :**

நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும் என்ற தொடரை அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி அவர்கள் எழுத முன்வந்துள்ளார். இவர் ஒன்பது வருடங்கள் ஆசிரியப் பணியிலும், நான்கு வருடங்கள் அதிபர் பணியிலும் தன்னை அர்ப்பணித்தவர்.

இவர் ஆரம்பித்துள்ள எழுத்துப் பணியில் உற்சாகமும், ஊக்கமும் அளிக்க இத் தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களை எம் அலுவலகத்திற்கும், அவரது மின்னஞ்சலிற்கும் அனுப்பி வையுங்கள்.●

E-mail:saponcianomi@gmail.com

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!



# மாணவர் மன்னா



## [மத்தேயு நற்செய்தி] விவிலிய வினாவிடைப்போட்டி - 03

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.10.2018 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப்பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக, சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. நான்கு நற்செய்தியாளர் விவிலிய அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபெற்றும் மாணவர்கள் மட்டுமே 'நற்செய்தியாளர் விருது' பெறும் இறுதி எழுத்துப் போட்டிக்கு தகுதி பெறுவர்.
8. "விவிலிய வினாவிடைப் போட்டி - 03", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 116/3, சென் ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும். ●

### மத்தேயு அதிகாரங்கள்: 21-28 வரை

## வினா - விடைகள்

01. இயேசு தம் சீடரோடு எருசலேமை நெருங்கிச் சென்று ஒலிவமலையை அடைந்தபோது அங்கிருந்த ஊரின் பெயரென்ன?
02. திருச் சட்ட அறிஞர் ஒருவர் திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளையாது என்று கேட்டதற்கு இயேசு கூறிய பதில் என்ன?
03. இயேசு இறைவாக்கினர்களை கொல்லும் நகரம் எதுவென்று சுட்டிக்காட்டினார்?
04. இயேசு எந்தமலைமீது அமர்ந்து இருந்த போது உமது வருகைக்கும், உலக முடிவுக்கும் என்ன அறிகுறி என்று கேட்டார்கள்?
05. எந்த இறைவாக்கினர் நடுங்கவைக்கும் தீட்டு திருவிடத்தில் நிற்பதை காண்பீர்கள் என்றார்?
06. ஐந்து தாலந்து பெற்றவர் மேலும் எத்தனை தாலந்தை சம்பாதித்தார்?
07. வானதூதர் அனைவரும் புடைசூழ, மானிட மகன் மாட்சியுடன் வரும்போது, தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருக்கும் போது யார் யார் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர்?
08. இயேசு பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் இல்லத்தில் பந்தியில் அமர்ந்து இருந்த போது பெண்ணொருவர் விலையுயர்ந்த தைலத்தை கொண்டு வந்து என்ன செய்தார்?
09. தலைமைக்குருக்களும், மக்களின் மூப்பர்கள் யாவரும் இயேசுவைக் கொல்ல கட்டி இழுத்துக்கொண்டு யாரிடம் சென்றனர்?
10. இயேசு தம் சீடர்களிடம் இறுதியாக கூறிய வார்த்தை என்ன?

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 02 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ஜெ. ஆன் பிரித்திக்கா பீரிஸ்
இல: 7/17, 5ம் ஒழுங்கை
எமில்நகர், மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
கி.எ. எழில்ராஜ் குரூஸ்,
அரிப்பு கிழக்கு,
அரிப்பு.

**மூன்றாம் பரிசு:**
B. வினுயா,
தலைமன்னார் ஸ்டேஷன்,
தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 69 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 47 பேர்.

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 02இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ம. ஆன் மியூலிக்கா குலாஸ், தலைமன்னார் ஸ்டேசன்.
02. S. டிலைக்ஷன், பெரியகமம், மன்னார்.
03. றொ. டில்சிக்கா, யோசேவ்வாஸ்நகர், தோட்டவெளி.
04. அமலதாசன் அனுசிஜா, பள்ளக்கமம், முருங்கன்.
05. இ. ஆன் குலோடியா, காத்தான்குளம், நானாட்டான்.
06. பி. விதுஷா, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை.
07. பி. சகாயமேரி, பள்ளிமுனை மேற்கு, பள்ளிமுனை.
08. R. லெயூமி, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
09. J. அபிஷா, உயிலங்குளம், கள்ளிகட்டைக்காடு.
10. S. ஆரோக்கியதாசன், பள்ளிமுனை மேற்கு, பள்ளிமுனை.
11. ஐ. நெகோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
12. T. சரண்யா, உயிலங்குளம், மன்னார்.
13. பி. நிதுஷா, தோட்டவெளி, மன்னார்.
14. றெ. அபினா, கட்டையடம்பன், மடுறோட்.
15. கோ. ஆன்மேரி கட்டையடம்பன், மடுறோட்.
16. A. கிர்ஷான், அளவக்கை, முருங்கன்.
17. A.T. ஜெயப்பிரியன், உயிலங்குளம், மன்னார்.
18. கு. ஆன் சினேகா, காத்தான்குளம், நானாட்டான்.
19. யு. யூலியற் நிசோபனா, அளவக்கை, முருங்கன்.
20. கி. எவாஞ்ஜெலின் குரூஸ், அரிப்பு.
21. சை. யேசுதாசன், கட்டைக்காடு, நானாட்டான்.
22. அ. அபி, புதுக்கமம், உயிலங்குளம்.
23. தே. தேவறஜீவன், சிறுக்கண்டல், முருங்கன்.
24. ஜெ. பிறின்ஸ்ரன் ஜோ, எமில்நகர், மன்னார்.
25. அ. தீபிகா றக்ஷாயினி, புதுக்கமம், உயிலங்குளம்.
26. ஆ. றெஸ்மியா, வேப்பங்குளம், வவுனியா.
27. ம. டெசினா, நெளுக்குளம், வவுனியா.
28. பே. மெபோனா றீனி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
29. S. டெல்சினா, காத்தான்குளம், நானாட்டான்.
30. ம. திருசானி டெசினா, நெளுக்குளம், வவுனியா.
31. ம. டிஷாமினி, நெளுக்குளம், வவுனியா.
32. பே. பன்சிகா, மடுறோட்.
33. யோ. ஜெரோஷா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
34. கி. விதுஷா, ஆத்திக்குளி, முருங்கன்
35. அ. அலெக்ஷன், மடுறோட், பெரியகுஞ்சுக்குளம்.
36. தி. அயந்தினி, கட்டைக்காடு, நானாட்டான்.
37. ஜெ. சார்லஸ், உயிலங்குளம்.
38. செ. ஜெஷிலா நிதர்ஷன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
39. அ. கிறிஸ்துராசா, அனுஷியா, குருங்கன்.
40. அ. ஆன் சோபிக்கா, வங்காலை.
41. செ. பிபியானா குரூஸ், முத்தரிப்புத்துறை.
42. ஜீ. தனுஷன், சிறுக்கண்டல், முருங்கன்.
43. ர. றொசானி, வேப்பங்குளம், வவுனியா.
44. வெ. ஆன்மியூறி, அளவக்கை, முருங்கன்.
45. அ. மேரி அனோலின், நானாட்டான்.
46. S. மரிஸ்ரெலா, பள்ளிமுனை மேற்கு
47. தி. தனுஜான், நானாட்டான்.

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

# கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள்

- அருட்தந்தை. யா. றமேஸ் அ.ம.தி -

கிறிஸ்தவ நாகரிகமென்பது கிறிஸ்துவின் வாழ்க்கையிலும், போதனையிலும் மிளிர்ந்த நீதி, உண்மை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், தாழ்ச்சி, எளிமை, இரக்கம், மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை தமதாக்கி வாழ்வதாகும். இதன் உருவாக்கத்தில் யூதநாகரிகம், கிரேக்க நாகரிகம் மற்றும் உரோமை நாகரிகம் என்பன நேரடியாக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதேவேளையில் யூத நாகரிகம் நேரடியாக மொசப்பத்தேமிய மற்றும் எகிப்திய நாகரிகங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவையாகும். யூத நாகரிகம் சுமேரிய, கானானேய, அசீரிய, பபிலோனிய பண்பாடுகளின் சிறப்பு அம்சங்களுடன் வளர்ச்சி பெற்ற ஓர் நாகரிகமாகும். சவுல், தாவீது, சாலமோன் போன்ற இஸ்ராயேல் முடி மன்னர்களின் ஆட்சிக்காலத்திலே பாலஸ்தீனப் பேரரசில் யூத நாகரிகம் உருவாக்கம் பெற்றுள்ளது. யூத நாகரிகத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டவராயிருந்தாலும் இயேசு அதன் நெறிமுறைகளை புதிய கண்ணோட்டத்தில் விளக்கி வாழ்ந்தும் காட்டியுள்ளார். யூத நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கிரேக்க, உரோமை நாகரிகத்தின் பண்புகளையும் வாழக்கையில் கைக்கொண்டு மக்களும் வாழக் கற்றுக்கொடுத்தார். இவையே கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையாகும்.

### யூத நாகரிகம்

விவிலிய அடிப்படையில் நோக்கும்போது இஸ்ராயேல் மக்களின் வரலாறானது கி.மு 1800 - 1700 காலப்பகுதியில் மொசப்பத்தேமியாவில் ஆபிரகாமின் அழைப்புடன் ஆரம்பமாகியது. ஆபிரகாம் மொசப்பத்தேமியாக் கலாசாரத்தில் பிறந்து வளர்ந்தவராவார். மந்தை மேய்ப்பவரான ஆபிரகாம் யூப்பிரடீஸ், தைக்கிறீஸ் ஆற்று வழியாக பயணம் செய்து, யோர்தானில் குடியமர்ந்து இஸ்ராயேல் இனம் உருவாகக் காரணமானார். யோசேப்பினுடைய காலத்திலே பஞ்சத்தினால் இடம்பெயர்ந்த இஸ்ராயேல் மக்கள் எகிப்திற்குச் சென்று, அங்கே பல ஆண்டுகள் குடியமர்ந்தனர். ஏறத்தாழ 450 ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் எகிப்திய நாகரிகத்தின் தாக்கத்திற்கு ஆளாகினர். மோசே மற்றும் ஆரோன் தலைமையில் எகிப்தைவிட்டு வெளியேறிய இஸ்ராயேல் மக்கள் யோசுவா தலைமையில் கானானை அடைந்து அங்கு கி.மு 1020 இல் சவுல் அரசனின் கீழ் இஸ்ராயேல் அரசை நிறுவினர். காலப்போக்கில் இஸ்ராயேல் வட அரசு, தென் அரசு என இரண்டாகப் பிரிய கி.மு 722 இல் ஆசீரியர் வட அரசை தமது ஆட்சியின் கீழ் அடிமையாக்கினர். இதனால் ஆசீரிய நாகரிகத்தின் தாக்கமும் இஸ்ராயேல் நாகரிகத்தில் கலந்து கொண்டது.. கி.மு 604-586 இல் பபிலோனியர் யூதேயாவையும், பாலஸ்தீனாவையும் கைப்பற்றி இஸ்ராயேல் மக்களை பபிலோனியாவிற்கு நாடு கடத்தினர். இதனால் இஸ்ராயேலர் பபிலோனிய நாகரிகத்தின் தாக்கத்திற்கும் ஆளாகினர். பின்னர் பாரசீகரின் ஆட்சியின் கீழ் 200 ஆண்டுகள் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் பாரசீக நாகரிகமும் சேர்ந்து கொண்டது. கி.மு 333 - கி.மு 63 வரை மகா அலெக்சாண்டரின் கிரேக்க ஆட்சியினால் இஸ்ராயேலர் கிரேக்க நாகரிகத்தின் கணிசமான தாக்கத்திற்கு உள்ளாகினர். உரோமையரின் ஆட்சியின் கீழ் உரோமை நாகரிகமும், இஸ்ராயேலரிடம் செல்வாக்குச் செலுத்தியது. யூத நாகரிகத்தின் தோற்றத்தில் மொசப்பத்தேமிய நாகரிகம் கணிசமான செல்வாக்குச் செலுத்திய அதே வேளையில் எகிப்து, ஆசீரிய, பபிலோனிய, பாரசீக, கிரேக்க, உரோமை நாகரிகங்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பிற்பட்ட காலத்தில் கிரேக்க நாகரிகத்தின் தாக்கம் இஸ்ராயேலரிடத்தில் மிகவும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இவ்வாறு வரலாற்றில் பல நாகரிகங்களின் கூட்டு நாகரிகமாக யூத நாகரிகம் நோக்கப்படுகின்றது.

யூத நாகரிகத்தின் பண்புகளான ஒரே கடவுள் நம்பிக்கை, உடன்படிக்கை வாழ்வு, எபிரேய விவிலிய நூல்கள், யூத சமய சடங்குகள், யூத விழாக்கள், பலிகள், ஆலய வழிபாடுகள், யூதச் சட்டங்கள் என்பன கிறிஸ்தவ நாகரிகத்தில் பெருமளவில் தாக்கம் செலுத்தியுள்ளன. இயேசு நசரேத்தூரில் ஒரு யூத குடும்பத்தில் பிறந்து, யூத கலாசாரத்தில் வளர்ந்து, யூத வரலாற்றை யூதப் பள்ளியிலேயே கற்றுத்தேர்ந்து, அச் சூழமைவில் சிந்திக்கவும், வாழவும் பயிற்றப்பட்டார். ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்து, தாய் மரியா கொண்டிருந்த இறை நம்பிக்கையிலிருந்து இறைவன் இரக்கமும், பரிவும், நேர்மையும், நீதியும் உள்ளவரென நம்பினார். இறையாட்சியை அனைவருக்கும் போதித்து, அதற்காகவே வாழ்ந்து, மரணித்து, மீண்டும் உயிர்பெற்றார். கிறிஸ்தவ நாகரிகம் தோன்றுவதற்கு இயேசுவின் வாழ்வும், போதனைகளும், பரிப்பினைகளும், செயற்பாடுகளுமே அடிப்படையாக அமைந்துள்ளன. இதனால் கிறிஸ்தவ நாகரிகத்தினுள் யூத நாகரிகத்தின் கூறுகளை இலகுவில் இனங்காண முடியும்.

### கிரேக்கநாகரிகம்

மனித சமூகத்தின் மேம்பாட்டிற்கு பெரும் பங்களிப்புச் செய்த பல நாகரிகங்களில் கிரேக்க நாகரிகம் முதன்மையானதும், அத்துடன் அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும் வித்திட்டதும் ஆகும். கிரேக்கர்கள் விவசாயத்தையும், கடல்வழி வர்த்தகத்தையும் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். அரசியல், மெய்யியல், தர்க்கம், பௌதீகம், புவியியல், வாணிபம், கணிதம், இலக்கியம், கலை, மருத்துவம், விளையாட்டு போன்ற பல துறைகளுக்கும் பங்களிப்புச் செய்த நாகரிகம் ஆகும். தனி மனித ஆற்றலை வளர்ப்பதிலும், உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் திறமையாக செயற்படுவோரை கௌரவிப்பதிலும், இராணுவப் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் முன்னிலை வகித்தது. பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களை புரிந்து முடிவுகளை எடுக்கும் முறைமை இவர்களின் பெரும் பங்காகும். சோக்கிரட்டீஸ், பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் போன்றோர் சிறந்த சிந்தனையாளர்கள் ஆவர். திருவிவிலியத்திலும், கிறிஸ்தவ வாழ்விலும் கிரேக்கத்தின் ஆதிக்கத்தினை அளவிடமுடியும். புதிய ஏற்பாட்டில், குறிப்பாக யோவான் மற்றும் பவுலின் படிப்பினைகளில் கிரேக்க மெய்யியலின் தாக்கத்தினைக் காணமுடிகிறது. கிறிஸ்தவ வாழ்வினுள் குறிப்பாக அறிவியலிலும், கலை, மற்றும் நாடகத்துறையிலும், கட்டடக்கலையிலும் கிரேக்க நாகரிகத்தின் தாக்கம் வெளிப்படுகின்றது.

### உரோமை நாகரிகம்

தைபர் ஆற்றங்கரையோரத்தில் காணப்படும் உரோமை நகர் இலத்தின் மக்களின் வதிவிடமாகவும், வாணிப மையமாகவும் விளங்கியது. உரோமிற்கு அடித்தளமிட்டவர்களான ரோமுலஸ் மற்றும் அவரது முன்னோர் கிரேக்க நாட்டிலிருந்து போர்காரணமாக குடியேறியவர்களே ஆவர். மக்களிடம் காணப்பட்ட ஆதிக்கத் தன்மையும், மற்றைய மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களும், அடைந்த வெற்றிகளுமே உரோம் பரந்த பேரரசாக மாறக் காரணமாகும். உரோமைப் பேரரசின் காலத்திலே ஐரோப்பா முழுவதிலும் ஒற்றுமை நிலவியது.

➡14



# இளையோர் மன்னா



## வில்நியூசில் இளையோர் சந்திப்பு

"எச்சூழலிலும் இயேசுவில் நம்பிக்கை வைப்பதற்கு அஞ்ச வேண்டாம், இரக்கம் என்ற இயேசுவின் புரட்சிப் பாதையின் ஓர் அங்கமாக இருங்கள்" - திருத்தந்தை பிரான்சிஸ்.

செப்ரம்பர் 22 ஆம் திகதி மாலை உள்ளூர் நேரம் 5.30 மணிக்கு, அதாவது இந்திய-இலங்கை நேரம் இரவு எட்டு மணிக்கு, வில்நியூஸ் நகரின் பேராலய வளாகத்தில் இளையோரைச் சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வில்நியூஸ் நகர் வரலாற்றின் மையமாக அமைந்துள்ள இந்த வளாகம், 19ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. புனிதர்கள் ஸ்தனிஸ்லாஸ், லடிஸ்லாஸ் பேராலயத்திற்கு முன் அமைந்துள்ள இந்த வளாகத்திலுள்ள வைக்கப்பட்டுள்ள ஒரு கல், புதுமையின் கல் என அழைக்கப்படுகின்றது. இதை மூன்று முறை சுற்றி வருகின்றவர்களுக்கு, நினைத்தவை நடக்கும் என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. திருத்தந்தை இந்த வளாகத்தில் திறந்த காரில் வலம்வந்த வேளையில், அவ்விடத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான இளையோரின் உற்சாக ஆடல்பாடல்கள் எங்கும் எதிரொலித்தன. இந்த இளையோர் சந்திப்பில் முதலில், மோனிக்கா, ஜோனாஸ் ஆகிய இரு இளையோர் தங்களின் சாட்சிய வாழ்வை திருத்தந்தையிடம் பகிர்ந்து கொண்டனர். இந்த இளையோரின் பகிர்தலுக்குப் பின்னர் இளையோரின் நடனமும் இடம்பெற்றது.

மோனிக்கா கூறியதற்குப் பதில் சொன்ன திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "உங்களோடு ஒரு நாடக அரங்கத்திற்குச் சென்று, பின்னர், ஓர் உணவகத்தில் அமர்ந்து பேசியதைப் போல்



உணர்ந்தேன். உங்கள் வாழ்க்கை நாடகம் அல்ல, அதில் நடப்பவை அனைத்தும் நிஜமானவை" என்று கூறி தன் உரையைத் தொடர்ந்தார். இலக்கு ஏதுமின்றி, நம்பிக்கையின்றி சுற்றி வருவதற்கு இளையோருக்கு பெரும் சோதனைகள் உள்ளன. உங்கள் நம்பிக்கையை இயேசுவின் மீது வைத்து, முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் வாழ்வு அவ்வப்போது தீப்பிடித்து எரிந்தாலும், அதை மீண்டும் கட்டியெழுப்பும் வேளையில் இயேசுவும் உங்களோடு இணைந்து உங்கள் வாழ்வை கட்டியெழுப்புவார் என்று இளையோரை ஊக்கப்படுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ். இளையோர் சந்திப்பை நிறைவுசெய்து, திருத்தந்தை அந்த வளாகத்தைவிட்டுச் சென்று கொண்டிருந்த வேளையில், இளையோரின் ஆடல்பாடல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருந்தன.

## "பழையன கழைந்து புதியன புகுவோம்"



பேசாலைப் பங்கின் 2018ஆம் ஆண்டிற்கான இளைஞர் ஒன்றியமானது 05.08.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை சிறப்புத் திருப்பலியுடன் உதயமாகியது.திருப்பலியை பேசாலையின் பங்குத்தந்தை அருட்பணி தேவராஜா கொடுதோர் சிறப்பித்தார். தொடர்ந்து புதிய இளையோர் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பேசாலைப் பங்குத்தந்தை தலைமையில் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. பசில் க்ளைன் அவர்கள் இளையோர் ஒன்றிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பின் Aid Action Group இளைஞர்களுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வு இடம்பெற்றது.●

## தாழ்வுபாடு பங்கில் இளைஞர் வாரம்

26.08.2018 ஞாயிறு அன்று காலை திருப்பலிக்கு முன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இளைஞர் வாரம், முதல் நாள் கொடி விற்பனை, இரண்டாம் நாள் சிரமதானம் மற்றும் யுவதிகளுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி தொடர்ந்து மூன்றாம் நாள் மாலை திருப்பலி முடிவில் அருட்தந்தை லக்கோன்ஸ் அடிகளாரால் கருத்தமர்வும் நடாத்தப்பட்டது.

நான்காம் நாள் பட்டித்தோட்டம் வயோதிப இல்ல சந்திப்பு, ஐந்தாம், ஆறாம் நாட்களில் ஆண்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. ஏழாம்நாள் காலை திருப்பலியை இளைஞர், யுவதிகள் சிறப்பித்ததோடு மாலை சிறிய ஒன்றுகூடலுடன் நிகழ்வுகள் அனைத்தும் முடிவடைந்தன.





இவ்வார நிகழ்வுகளினூடாக இளையோர் மத்தியில் உற்சாகம் பிறந்ததோடு அர்ப்பணிப்பு மனநிலை அதிகரித்ததை அவதானிக்க முடிந்தது.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## வெற்றிப் பயணத்தில் தன்னம்பிக்கை

### - அருட்பணி. ம.மரிசுதன். செபமாலைதாசர் சபை, அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம் -

வெற்றிப் பயணத்தில் தன்னம்பிக்கை என்பது இன்றியமையாத தராதரமாக இருக்கின்றது. தன்னம்பிக்கை இல்லா மனிதன் நடைப்பிணத்திற்குச் சமமானவன். தன்னம்பிக்கை இல்லை என்றால் சாதனை மட்டுமல்ல சிறுபொருளைக் கூட அசைக்க முடியாத முடக்குவாதக்காரர் ஆகிடுவோம். **"தன்னிரக்கத்தை விட்டொழித்து தன்னம்பிக்கையைப் பெறாவிட்டால் நீங்கள் பெறும் வெற்றிகள் தற்காலிகமானவைகளாகவே இருக்கும்"** என்பதை ரியோ ஒகாவா என்ற சர்வதேச ஆன்மீக எழுத்தாளர் *(வெற்றியின் விதிகள்)* மிக அழுத்தமாகப் பதிவு செய்கின்றார். தன்னம்பிக்கையற்ற (தன்னை நம்பாத) மனிதரை மற்றவர்கள் நம்புவது என்பது கல்லில் நார் உரிப்பதுபோல சாத்தியமற்ற விடயம். நம்மை நாம் நம்பும், மதிக்கும் விதம் மற்றவர்கள் நமக்கு முக்கியத்துவம் கொடுக்கச் செய்கின்றது. உங்களை நீங்கள் நம்பவேண்டும். உங்களுடைய சொந்த திறமை மீது உங்களுக்குக் கட்டாயம் நம்பிக்கை இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உங்களை நம்பி மற்றவர்கள் பாரிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள். நாம் தைரியமாக, திடகாத்திரமாக இருத்தல் அவசியம். அவ்வாறு இருக்கும் போது தீமை நம்மைக்கண்டு பயம் கொள்ளும். நம் தைரியத்தின் முன் தோல்வியும் தோற்கடிக்கப்படும்.

அருணி மாசிங்கா எவரஸ் சிகரத்தை தொட்ட முதல் இந்திய மாற்றுத் திறனாளி பெண்மணி. இவர் ஒரு முன்னாள் இந்திய தேசிய கரப்பந்தாட்ட வீராங்கனை. ஒருமுறை புகைவண்டியில் பயணிக்கையில் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு, ஓடும் புகையிரதத்திலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டார். அதன் விளைவாக தனது இடது காலை இழந்தார். இந்த துரதிஸ்ரட நிகழ்வினால் மனம் ஒடிந்து உட்காரவில்லை. தன்னம்பிக்கையை ஊன்று கோலாய்க் கொண்டு உத்வேகத்தோடு எழுந்தார். அந்தக் கணம் 'நான் எவரெஸ்ட் சிகரம் தொட்டு இந்திய தேசிய கொடிநாட்டுவேன்' என்று சபதம் பூண்டார். 52 நாட்கள் ஒரு செயற்கை காலோடு நடந்து 2013ஆம் ஆண்டு வைகாசி திங்கள் 21ஆம் நாள் காலை 10.55 மணியளவில் எவரெஸ் மலை உச்சியில் தன்னம்பிக்கைத் தடம் பதித்தார். அதனைத் தொடர்ந்து ஆபிரிக்காவின் கிளிமஞ்சாரோ ஐரோப்பாவின் எல்பராஸ், அவுஸ்ரேலியாவின் கொஸ்கியஸ்கோ, இந்தோனேசிய கர்ஸ்ரென்ஸ், ஆஜன்ரினாவிலுள்ள அக்கோன்குவா மற்றும் மெகின்லே வின்சன் மாசிப் மலைமுகடுகளும் தனது பெயர் உச்சரிக்க செய்து பாதச் சுவடுகள் பதித்திருக்கிறார். 2015ஆம் ஆண்டு பாரத அரசு இவருக்கு 'பத்மசிறீ' விருதும், 2016 ஆம்



ஆண்டு 'அர்ச்சுனா' விருதும் வழங்கிக் கௌரவித்தது. இத்தனைக்கும் அவர் மூலதனமாய் போட்ட தன்னம்பிக்கை தான் காரணம்.

நமது வாழ்வை நிர்ணயிக்கக் கூடியது நம்மை பற்றி நாம் கொண்டிருக்கும் சுய உணர்வு அல்லது சுயமதிப்பு. சொல்வேந்தர் சுகி.சிவம் *'வெற்றி நிச்சயம்'* என்ற நூலில்

**"உன்னைப் பற்றிய மற்றவரது அபிப்பிராயங்கள் வெறும் காலி அபிப்பிராயங்கள் (Empty opinions). ஆனால் உன்னைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயங்கள் உன் வெற்றி மாளிகையின் அஸ்திவாரங்கள்" என்கிறார்.**

நாம் மற்றவர் கருத்துக்களுக்கு செவிகொடுக்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை. மற்றவர் புகழ்ச்சியிலும், இகழ்ச்சியிலும் தங்கியிருத்தல் ஆகாது. அப்படி இருப்பின் நமது முடிவுகளை, தீர்மானங்களை, வெற்றி, தோல்வியை தீர்மானிப்பது அடுத்தவர்களாகவே இருப்பார்கள். இன்னொருவரது விமர்சனங்களால் பாதிக்கப்படுபவன் ஒருபோதும் தலைவனாக முடியாது. நாம் தனக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் நத்தையைப் போல் அல்லாமல் குடவை உடைத்து உயரப் பறக்கும் பட்டாம் பூச்சியாய் இருக்கவேண்டும்.

சிலர் சோகமாகவே இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள். அதற்காக சோக திரைப்படங்கள் பார்ப்பார்கள், சோக பாடல்கள் கேட்பார்கள். துன்பியல் சித்திரங்களை வீட்டில் மாட்டிவைப்பார்கள், தாடிவளர்ப்பது போன்ற பல காரியங்களில் ஈடுபடுவார்கள். இவற்றை மற்றவர்களின் அனுதாபத்தை சம்பாதித்துக் கொள்ள செய்பவர்களும் உண்டு. "**கடவுளால் கூட இப்படித் தனக்குத் தான் துயரத்தைத் தேடிக் கொள்பவர்களை காப்பற்ற முடியாது**" என ரியோ ஒகாவா கூறுகின்றார். இதற்கு மாற்றுவழியாக தன்னம்பிக்கையை வளர்க்க தியானம் துணைபுரியும். 'எனக்கு வலுவூட்டும் இயேசுவின் துணையோடு எல்லாம் செய்ய முடியும்' 'என்னால் முடியும்' 'எனக்கு இது சாத்தியமாகும்' 'இன்றைக்கு வெற்றி பெறாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் வெற்றி பெறுவேன்.

வெற்றிபெறும்வரை விடமாட்டேன்' என்ற வார்த்தைகளை அடிக்கடி பார்க்கும் இடங்களில் எழுதி, மனதில் பதியவைக்க வேண்டும். இவற்றை நிறைவேற்ற சபதம் எடுக்க வேண்டும். இந்த மனநிலை ஒரு மனிதனின் ஒவ்வொரு நரம்புகளிலும், திசுக்களிலும் கலந்திட வேண்டும்.

இன்னும், தன்னம்பிக்கைக்குத் தடைக் கல்லாக இருப்பது பயம் அல்லது அச்ச உணர்வு. பயம் வாழ்க்கையை, இலட்சியத்தை இதன் நம்பிக்கையை புரட்டிப் போடக்கூடிய சுனாமி போன்றது. பயத்தின் தாக்கம் பரந்தது. உடலில் அதிர்வை ஏற்படுத்தக் கூடியது. பயம் வந்தால் அத்தனை சப்த நாடிகளும் அடங்குவதை நாம் அறிவோம். பயம் நமது திறமைகள், தகைமைகள் பற்றிய சந்தேகத்தை உருவாக்கும் காரண கர்த்தா. வித்தகக் கவிஞர் பா.விஜய் "**பயம் என்பது உனக்குள் இருக்கும் இனத்துரோகி**" என்றுகூறுகிறார்.

நம்மில் பலருக்கும் நமது சமூக, பொருளாதார, உடல் நிலை, எதிர்காலம் சம்பந்தமான பயம் இருக்கின்றது. நாம் உடலை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அச்சத்தை அடக்கி ஆழும் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒருமுறை "அஞ்சுவது ஒன்றிற்கே அஞ்சுக" என்று சொன்னார்.

ஆகவே இந்த பூமியில் நாம் எதற்கும் பயப்படத் தேவையில்லை. இந்த பயத்திற்கும் மாற்றுமருந்து, சிறந்த நிவாரணி தன்னம்பிக்கையே. "நல்லதே நடக்கும் என்று ஆக்கபூர்வமாக நினைக்கும் மனப்பான்மை (Positive mental attitude) பயத்தைப் போக்குவதற்கு மிக வலிமையான கருவி" இது நெப்போலியனின் சிந்தனை துளிகள்.

ஆகவே மனதில் தோன்றும் பயம், சோர்வு என்பவற்றை விரட்டியடித்து தன்னம்பிக்கையோடு நமது வெற்றிப் பயணத்தில் வீறுநடை போட்டால் நாமும் சிகரத்தை தொட்டு சிறப்படையலாம்.●

## மறைமாவட்ட ஆணைக்குழுக்கள்

# கறிற்ராஸ்-வாழ்வுதயம்

### 1. "தொழில் திட்டமிடலினை உரிய முறையில் மேற்கொண்டு வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்யுங்கள்."

**கறிற்ராஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. செ.அன்ரன் அடிகளார்.**



இந்தியாவிலிருந்து மீளவும் தாயகம் திரும்பிய மக்களுக்கான வாழ்வாதார வலுவூட்டல் பயிற்சி கருத்தமர்வானது 11.09.2018 அன்று வாழ்வுதய மண்டபத்தில் நடைபெற்றது. இக் கருத்தமர்வினை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே இயக்குனர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் "கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து எமது நாட்டிற்கு மீண்டும் வருகைதந்த ஒவ்வொரு குடும்பமும் தத்தமது குடும்ப பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையில் உள்ளது. எனவே தாங்கள் இங்கு வந்தபின்னர் பல்வேறு விதமான வாழ்வாதாரப்பிரச்சனைகளுக்கு முகம்கொடுப்பதை அறிவோம். இக்காலத்தில் திட்டமிடாத வாழ்வாதார முயற்சிகள் பல குடும்பங்களைப் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கின்றன. சில குடும்பங்கள் வரவுக்கு மீறிய கடன்களைப் பெற்று பல இன்னல்களை சந்திப்பதைப் பார்க்கின்றோம்.

எனவே, எந்தவொரு தொழிலினை ஆரம்பிப்பதாகவிருந்தாலும் தொழில் திட்டமிடல் மிக அவசியமாகவுள்ளது. சரியான தொழிலினை, அதற்கு ஏதுவான சூழலில் தொடங்குங்கள். சரியான தொழில்திட்டம் எமது வாழ்வாதாரத்தினை மேலும் வளர்க்கும்." என்கின்ற ஆழமான சிந்தனை மிக்க கருத்துரையினை வழங்கி, தமது ஆசியுடன் பயிற்சியினை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பயிற்சி நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்டத்திலிலுள்ள 5 பிரதேச செயலகங்களிலுமிருந்து பதிவு செய்யப்பட்ட 49 குடும்ப தலைவர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். இக் கருத்தமர்வு தொழில் யோசனை உருவாக்கல், தொழில் தெரிவு, தொழில் திட்டம் தயாரித்தல், குடும்ப பொருளாதார திட்டமிடல் போன்ற கருத்தியல் அடங்கிய பயிற்சியாக அமைந்தது காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை இப்பயிற்சி இடம்பெற்றது.

### 2. சர்வமத செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் குழுவின் ஒன்று கூடல்



மேற்படி ஒன்றுகூடலானது சர்வமத ஒன்றிய அரச ஊழியர்கள், மற்றும் சமயத் தலைவர்கள், வாழ்வுதய பணியாளர்களை உள்ளடக்கி 06.09.2018 காலை 10.00 மணியளவில் வாழ்வுதயம் பொது மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வாழ்வுதய சர்வமத செயற்பாடுகளின் இலக்குக்கிராமங்களான அளவக்கை, செம்மண்தீவு, வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், அடம்பன் ஆகிய கிராமங்களில் இருந்து கிராம அலுவலர்கள், சமயத் தலைவர்கள், கலாசார உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் சர்வமத செயற்திட்டத்தின் நோக்கம் தொடர்பாகவும், கடந்தகாலங்களில் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மூலம் அடையப்பட்ட விளைவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளுக்கான திட்டமிடலும், ஆலோசனையும் இடம் பெற்றது.

இத் திட்டமிடலில் சர்வமத, சமய விழாக்களை சிறப்பிப்பதற்கான நிகழ்வுகள் தொடர்பாகவும், அரச ஊழியர்கள் மற்றும் சமயத் தலைவர்களுக்கான உறவுப்பால நிகழ்வுகள் தொடர்பாகவும், கலை கலாசார நிகழ்வுகள், கண்காட்சி நிகழ்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம் பெற்றது. இவாலோசனை கூட்டத்தினை வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. செ.அன்ரன் அடிகளார் தலைமை உரையினை நிகழ்த்தி ஆரம்பித்துவைத்தார். பின்னர் இதில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் எதிர்காலத்தில் இத்திட்டத்தினை மேலும் அர்த்தம் கொண்டதாக மாற்றுவதற்கு தங்களது ஆலோசனைகளையும் வழங்கியதுடன் சர்வமத செயற்பாடுகள் தொடர்பான மேலும் சில திட்டமிடல்களையும் வகுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### 3. 18 வயதிற்குட்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளதும் அவர்களின் பெற்றோருக்குமான வலுவூட்டல் செயற்றிட்டம்



இச் செயற்திட்டமானது Kinder Mission எனப்படும் திட்டத்தின் ஊடாக கறிற்ராஸ் இலங்கையின் மூலமாக நிதியினை பெற்று கறிற்ராஸ் வாழ்வுதயம் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட இலக்கு கிராமங்களில் உள்ள 18 வயதிற்கு உட்பட்ட விசேட தேவைக்கு உட்பட்ட பிள்ளைகளதும் அவர்களின் பெற்றோருக்குமான வலுவூட்டல் செயற்பாடாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இச்செயற்பாடு மன் ஆண்டாங்குளப் பாடசாலையில் வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் அனுமதியுடன் 2017 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்டு பிள்ளைகளுக்கான கற்றல் செயற்பாடுகள் அரசாங்கத்தின் விசேட கல்வி ஆசிரியரினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இக் கற்றல் வகுப்பானது காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மதியம் 12.00 மணிவரை நடாத்தப்படுகின்றது. இங்கு ஒவ்வொரு பிள்ளைகளின் திறமைகள், அவர்களது நிலைப்பாடுகளுக்கு அமைவாக கற்றல் விடயங்கள் நடைபெறுகின்றது. குறிப்பாக நிறங்கள் அடையாளம் காணல், நிறம் தீட்டுதல், சித்திரம் வரைதல், பிள்ளைகளின் அசைவு செயற்பாடுகள், விளையாட்டுக்கள் எண் கணித முறைகளின் மூலம் கற்றல் நடைபெறுகின்றது. அத்துடன் பிள்ளைகளின் பெற்றோருக்கு தனி உளவளத்துணை செயற்பாடுகள், குழு உளவளச் செயற்பாடுகள், வலுவூட்டல் கருத்தமர்வுகள், மாதாந்த ஒன்றுகூடல்கள் போன்றவைகளும் இடம்பெற்று வருவதோடு பிள்ளைகளின் போக்குவரத்து கொடுப்பனவுகளும், போசாக்கு வழங்கல் பணிகளும் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

### 4. வாழ்வுதய உதவிக்கரப் பிரிவின் அதி உன்னதமான பணிகள்.

வாழ்வுதய உதவிக்கரப் பிரிவானது மன்னார் மறைமாவட்டத்தில் கறிற்ராஸ் வாழ்வுதயத்தின் மனித நேய பணிகளில் மிகவும் உன்னதமான பணியாக கருதப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக எமது நாட்டில் உள்நாட்டு போரின் அகோரதாக்குதல்களினால் கால், கை, அவயவங்களை இழந்த மக்களின் கண்ணீரைத்துடைக்கும் அதி உன்னத பணியாக இருந்தது. இவை மட்டுமல்லாது பிறப்பிலேயே விசேட தேவைக்குட்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கான பொக்கிசமாகவும் திகழ்ந்து வருகின்றது. இப்பணியானது இலங்கையின் அனைத்து மறைமாவட்ட நிலையங்களின் விண்ணப்பங்கள், கோரிக்கைகளுக்கு அமைவாக தேசிய ரீதியாக தனது பணியினை அன்று தொட்டு இன்றுவரை ஆற்றிவருகின்றது.

தற்பொழுது தனது பணிகளை விரிவுபடுத்தி நவீன தெழில்நுட்பவியல் சாதனங்களை தன்னகத்தே கொண்டு செவ்வனே பணியாற்றி வருகின்றது. குறிப்பாக இப்பணிகளை எடுத்துப்பார்க்கும்போது Prosthetic Services, Orthotic Services, Patient follow up, Other Assistive devices, Mobile services & Camp, Patient education, Physiotherapy Services, போன்ற பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. இதில் இன்றுவரை 4000 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பயனாளிகள் செயற்கை அவயவங்களை இலவசமாகப் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

இவ்வாறான பணிகளுக்கு CRS அமைப்பு நிதியுதவியினையும், Motivation தொழில்நுட்ப உதவியினையும் வழங்கிவருகின்றது. இப்பணிகளை ஆற்றுவதற்காக இந்நிலைய அலுவலர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் போன்றோர் இந்தியா, கம்போடியா போன்ற நாடுகளுக்கு வதிவிடப்பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டு பயிற்சிகளை பூர்த்தி செய்ததன் பின்னரே இப்பணிகளை ஆற்றுவதற்கு வாழ்வுதய இயக்குனரால் அனுமதிக்கப்படுகின்றார்கள். இப்பணிகளின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் தமது பயன்பாடுகள் தொடர்பாக அண்மையில் தமது அனுபவப்பகிர்வுகள் மூலம் வாழ்வுதயத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர். இச்செயற்பாட்டின் மற்றுமொரு மனிதநேய பணியாக 6 மாதகாலத்திற்கு ஒருதடவை மாபெரும் இரத்ததான நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் பல நல் உள்ளங்கொண்டவர்கள் தமது உதிரத்தை தானமாக வழங்கிவருகின்றனர்.

### 5. வறுமைக்கான காரணங்களை கவனத்திற்கொள்ளலும், விவசாயிகளுக்கான உணவுப்பாதுகாப்பினை உறுதி செய்தலும்

இத்திட்டமானது மன்னார் மறைமாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு கறிற்ராஸ் நோர்வே கறிற்ராஸ் இலங்கை மூலமாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது இதில் மேற்படி மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 9 இலக்கு கிராமங்கள் உள்வாங்கப் பட்டுள்ளன.

குறிப்பாக விவசாய குடும்பங்கள், பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள், முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர் போன்றவர்கள் இலக்கு குழுக்களாகவுள்ளனர். இத்திட்டத்தின் நோக்கமானது மக்கள் நஞ்சற்ற உணவு வகைகளை உற்பத்தி செய்து, வளமான இயற்கை பசளைகளை பாவித்து, விவசாயத்தில் ஈடுபடுவதற்கான விழிப்பூட்டல்களை வழங்குவதாகும். 2021ஆம் ஆண்டு வரை இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

➡ 14

# பாப்பிறை மறைபரப்புச்சபைகள்

**- திரு. டொன் பிலிப் பறுனாந்து ஞானப்பிரகாசம். செயலாளர், மறைபரப்புச்சபைகள் -**

### "உருவாகி, உருவாக்குவோம்."

உடல், உயிர் ஆன்மா என்னும் உடல் கூறுகள் கொண்டுள்ள மனித இயக்கத்தில், மனித ஆரம்ப பருவங்களான சிறுவர் பருவம், இளமைப் பருவம் ஆகிய இரண்டும் முக்கியமான பருவ காலங்களாகும். நாம் வாழும் யுகத்தில் மகிழ்ச்சியின் உச்சத்தில் மிதக்கும் எண்ணங்கள் கொண்ட சிறுவர், இளையோராகிய இளந் தலைமுறையினர். வெந்ததைத் தின்று, விதிவந்தால் சாவு என்ற தேக்கநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்பதைக் காணமுடிகின்றது.

"உலர்ந்த எலும்புகளே! ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள்" (எசேக்.37:4). ஆம் வாழ்க்கை என்பது ஓடுகிற நதி. அங்கு தூய்மை இருக்கும். வாழ்வில் துள்ளலும், மலர்ச்சியும் இருக்கும். ஏனெனில் சிறுவரது தோழன் சின்ன இயேசு. அவரே நல்வழி காட்டுபவர். "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (மத் 19:14) என்றார். இதனால்தான் இளையோரே, "உலகு விழிப்புறச் செய்யுங்கள்" என திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். இன்றைய உலகில் இளம் தலைமுறையினரின் உருவாக்கத்திற்கு தடைக்கற்கள் போடப்படுகின்றன. எதிர் காலத்தை இருள்மயமாக்கி, நுகர்வுக்கலாச்சாரம், போதைவஸ்து பாவனைகள், தொலைத் தொடர்பு போன்றவை இப்பராயத்தினரின் போக்கிற்குத் தீனி போடுகின்றன. சிறுவர்களது தோழன் சின்ன இயேசு, அவரே எங்களுக்கு நல்வழிகாட்டுவார். அவரைப் பற்றி நாளும் எடுத்துரைத்து, மறைபரப்பும் தேவை நமக்கு உள்ளதை நாம் உணர்ந்து செயற்படவேண்டிய தேவை உள்ளது. இதுவே காலத்தின் கட்டாயம் ஆகும். வழிமாறிச் செல்லாதவாறு சிறுவர்களை இயேசுவிடம் அழைத்துவர, இளையோராய் இயேசுவின் தூதர்களாய் செயயற்படும் **திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் அணிதிரளும் காலத்தையும் தேவையையும்** உணர்வோம். இவ்வாறு "உலகு விழிப்புறச் செய்யுங்கள்" என்னும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விருது வாக்கைச் செயற்படுத்த விளைவோம், முன்வருவோம். நிகழ்கால உலகின் சிறுவர்கள் துன்ப, துயர்களை சந்தித்து தீமையின் கலாசாரத்திற்குள் மூழ்கிப்போய் உள்ளனர். சிறுவர்களுக்கு இழைக்கப்படும் துன்பதுயர், கொலைகள் போன்ற அநீதிகள் நிறைந்த சிலுவையாக இவைகளை நோக்கி ஒப்படைக்கும் பொழுது, தீமை தோற்றுவிடும் என்னும் நம்பிக்கையுடன் சுமந்து செபித்து வாழ்வோம். இயேசுவின் தூதர்கள் நாம் என்று நெஞ்சில் நிறுத்தி, நம் வயது சிறுவர்கள், இளைஞர்களை தோழர்களாக ஏற்று நம்மோடு அழைத்து, கிறிஸ்துவின் அணியில் ஒன்று சேர்ந்திட திருப்பாலர்சபையில் பணியைத் தொடர்வோம், பலப்படுத்துவோம்.

- ➢ சிறுவன் சாமூவேல் "பேசும் உம் அடியான் கேட்கிறேன்" என்று கடவுளின் குரலுக்கு பதிலளித்தான். சாமூவேல் வளர்ந்தான் ஆண்டவர் அவனோடு இருந்தார். சாமூவேலது வார்த்தை எதையும் அவர் தரையில் விடவில்லை. சாமூவேல் ஆண்டவரின் இறைவாக்குரைக்க நியமிக்கப்பட்டார். 1சாமு 3: 19-20
- ➢ ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை இஸ்ராயேலின் அரசனாககடவுள் தேர்ந்து கொண்டார். 1சாமு 16: 6-13
- ➢ அரசனது சிறப்புணவினாலும், அவன் பருக வைத்த திராட்சை இரசத்தினாலும் தம்மை தீட்டுப்படுத்திக் கொள்ளாது, உண்ணாது, பருகாது, உள்ளத்தில் உறுதியோடு இருந்து, பத்து நாட்களாக மரக்கறிகளையும், தண்ணீரை மட்டுமே உண்டு பருகி, கடவுளிடமிருந்து அறிவையும், அனைத்து இலக்கியத்தின் தேர்ச்சியையும், ஞானத்தையும் பெற்றுக்கொண்ட தானியேல், நாம் வாழும் இன்றைய சூழலில் நமது வாழ்விற்கு முன்மாதிரியாக திகழ்கின்றார். (தானி1: 15-17)
- ➢ "நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்." (லூக் 2: 52)

சிறிய தென்னம் பூவிற்குள் இளநீர் சேர்ந்திருப்பது போல் இயற்கையின் அதிசயங்கள், இறைவல்லமையைக் காணும் சிறுவர் இளையோராக, நமது வாழ்வை இறைபாதையில் இட்டுச் செல்ல முன்வருவோம். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக உருமாற்றம் பெற்றிட, திருப்பாலத்துவ சபையின் வழிகாட்டலைப் பெற, நமது பங்களிப்பை அளிப்போம். அன்பு, மன்னிப்பு, உறவு இறைவார்த்தை, திருப்பலி, திருச்செபமாலை, குடும்பசெபம், திருவருட்சாதனங்கள் ஊடாக, நமது ஆன்மீக வாழ்வை கட்டியெழுப்பப்பிட, நாம் உருவாகுவோம், உருவாக்குவோம். சிறியோர், இளையோர், இயேசுவின் சீடராக நடைபயில்வதுதான் இயேசுவின் சீடத்துவம்.

இதுவே நாம் பெற்றுக் கொண்ட திருமுழுக்கின் அழைப்பு என்பதை நாம் உணர்ந்து தன்னலம் கடந்த, பிறர்நலம் பேணும் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களின் மேன்மைமிகு பொறுப்பை செயற்படுத்த விளைவோம். நூற்றாண்டுகளாக செயற்பட்டு வரும் திருப்பாலத்துவசபை நோக்கம் செயற்படுவதற்குமான பணிக்கு பாப்பிறை மறைபரப்புசபையில் திருப்பாலத்துவசபையைத் தொடங்கிய 175 வது ஆண்டு நிறைவில், நம்மை அர்ப்பணித்து மறைமாவட்ட பங்குகளில் **உருவாகி, உருவாக்குவோம்.●**

**சிறப்புக் கட்டுரைகள்**

# உலக மறைபரப்பு ஞாயிறு

**- திரு. டொ.பி.ப. ஞானப்பிரகாசம், செயலாளர். அன்பியம், பாப்பிறை மறைபரப்பு சபைகள் -**

### உலக மறைபரப்பு ஞாயிறு தினம்: 21.10.2018

உலக நாடுகள் அனைத்திலும் மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள மறைபரப்பாளர்களுக்கு, செபத்தினாலும், ஒறுத்தலினாலும் ஒத்துழைப்புவழங்கி மறைபரப்பு சேவையை செயற்படுத்திவருவது, "**பாப்பிறை விசுவாச மறைபரப்பு சபையாகும்**". உவந்தளிக்கும் உதவிகள், உலகின் அதிக தேவை உள்ளோரான ஏழை, வறியோர் ஆகியோருக்கு, மறைபரப்புப்பணிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. இம்முறை 92 வது உலகமறைபரப்பு ஞாயிறு 2018இல் பரிணமிக்கின்றது. திருத்தந்தையின் விசுவாச மறைபரப்புச் சபையானது, 1822ஆம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டில் லியோன்ஸ் என்னும் நகரில், **செல்வி. மாரிபொலின் ஜெரிக்கோ** என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் நோக்கம், மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள மறைபரப்பாளர்களுக்கு செபத்தினாலும், ஒறுத்தலினாலும் ஒத்துழைப்பு வழங்கி மறைபரப்பு சேவையை எல்லா நாடுகளிலும் வளர்த்தல்வேண்டும் என்பதாகும்.

எமக்கு இறைவன் மேல் உள்ள அன்பினால் அவருக்கு கீழ்ப்படியவும், அவரது மறைபரப்புப் பணியைச் செய்யவும் முடியும். மக்கள் அனைவரும் மீட்படையவும், உண்மையை அறிந்து கொள்ளவும் மறைபரப்பாளர்களாக தங்களை அர்ப்பணித்து தியாகத்தோடு கிறிஸ்து கொண்டுவந்த மீட்பின் நற்செய்தி வாழ்வின் விழுமியங்களை உலகமெங்கும் போதிக்கும் பணியாற்றி வருவோர் தாம் மறைபரப்பாளர்களாகும். இயேசு ஆண்டவர் தம் சீடர்களுக்கு, "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" (மத். 28:19) என்று தம் சீடர்களுக்கு பணித்தார். மக்கள் அனைவரும் மீட்படைய அறுவடைக்கு தேவையான இறை ஊழியர்களை மன்றாடித் தேர்ந்தெடுத்து அவர்களின் குருத்துவ துறவற உருவாக்கத்திற்கு அனைவரும் கவனம் செலுத்தி, கரிசனை கொண்டு தேவ அழைத்தலையும் ஊக்குவித்து வளர்ப்பது அவசியமான ஒன்றாகும். "கதிரவன் உதிக்கும் திசை தொடங்கி மறையும் திசைவரை என்னையன்றி வேறு எவரும் இல்லை என்று மக்கள் அறியும்படி செய்கிறேன்" (எசாயா 45:6.) என ஆண்டவர் கூறுகின்றார். இறைவனின் சேவையில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவர் கொண்டுவந்த அன்பு, மன்னிப்பு, விடுதலை, அமைதி, மகிழ்ச்சி ஆகிய இறையாட்சியின் பண்புகள் பற்றி அனைவருக்கும் எடுத்துரைப்பவர்களை நாம் மறைத் தூதுப்பணியாளர்கள் என்று அழைக்கின்றோம். இவ்வுலகில் இறைவனின் திருவுளம் நிறைவேற தன்னலம் மறந்து, பிறர்நலம் பேணும் இறை ஊழியத்திற்காக கடல் கடந்து சென்று மறைதூதுப்பணி ஆற்றிய வரலாறும் இவர்களையே சாரும். புனித பிரான்சிஸ் சவேரியார், புனித யோசேவ்வாஸ் அடிகளார், குழந்தை இயேசுவின் சின்ன திரேசம்மாள் ஆகியோர் போல் பலரை மறைதூதுப்பணி ஆற்றியவர்கள் வரிசையில் காணலாம். இவ்வாறான உண்மைகளை தருகின்ற உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தை ஐப்பசி 21ஆம் திகதி நாம் கொண்டாடுகின்றோம். உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தை, இலங்கை நாட்டில் எமது மன்னார் மறைமாவட்ட அனைத்து கத்கோலிக்கரும் கவனத்தோடும், அதன் பொறுப்புணர்ந்தும், தாராள குணத்துடனும், பங்களிப்பு செய்தும் அனுசரித்து வருகின்றோம். சிறியோர், பெரியோர், இளையோர் அனைவரும் ஒன்றுபட்டு பெருமளவு நிதி சேகரிப்பை திரட்டியெடுத்து, தாழ்ச்சியோடு உலக மறைபரப்பு திட்டத்திற்காக காணிக்கையாக்கி வருவது குறித்து மகிழ்ச்சி அடைவதோடு, கடந்த பல ஆண்டுகளாக நாமே முதலிடத்தில் மறைபரப்புக்கு நிதி பங்களிப்பு செய்துள்ளோம் என்பதில் பெருமையடைந்து, அனைவருக்கும் பாராட்டும், நன்றியும் தெரிவித்து நிற்கின்றோம். இவ்வாண்டும் அதே முயற்சியோடு மறைவளர்க்க, மறையில் வளர முயற்சிப்போம்.

நாம் எடுக்கும் முயற்சிகளை இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பார். **விசுவாசத்தில் உறுதி பெற்று அர்ப்பணிப்புடன், இயேசுவை அறிவிப்போம். அனைத்தையும் இறை மகிமைக்காகவே செய்வோம். மனம் மாறி, இறையரசின் மதிப்பீடுகளை அறிவிப்போம்.** இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசம், நாடு வறுமை, ஏழ்மை, பொருளாதார நலிவு, இயற்கை வளம் குன்றியமை போன்ற சவால்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனையும் தாண்டி, எமது விசுவாசத்தை ஆழப்படுத்தி இயேசுவின் மறைபரப்புப் பணியை உலக மக்களிடையே வளர்த்தெடுக்க இளம் குருக்கள், துறவியர் தம்மை அர்ப்பணித்து இறை ஊழியம் புரிவதற்கு இறை அழைத்தலை நாடி முன்வருகின்ற இறை ஊழியர்களையும் வாழ்த்திவரவேற்கின்றோம். அவர்களை வளர்த்தெடுப்பதும் நமது தலையாய கடமையாகும். இந்த விழிப்போடு மறைபரப்புப் பணியை செய்வதற்கு இந்நாள் நமக்கு அழைப்பு தருகின்றது. அன்பே உருவான இறைவன், எமக்குள் செயலாற்றி, எமது இதயங்களை அன்பினால் நிரப்புகின்றார் இந்த செய்தியை மறை அறிவிப்புப்பணி குறிப்பிடுகின்றது.

"உங்களிடம் கேட்கிறவருக்கு கொடுங்கள்." (மத் 5: 42) "முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்பிற்குரியவர்" (2கொரி 9:7) "ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கின்றார். அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பி தந்திடுவார்" (நீ.மொ 19:17) "ஒருவர் ஏழைக்கு வாரி வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்" (2கொரி 9:9) 15ஆம் நூற்றாண்டுவரை திருச்சபைக்கு அப்பால் மீட்பு இல்லை என்னும் கருத்து இருந்தது 1962-1964 காலங்களில் 2ஆம் வத்திகான் சங்கத்தின் மறுமலர்ச்சி காரணமாக "பிற சமய மாண்பு" ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் உலக மறைபரப்பு தினம் கிறிஸ்துவின் மீட்பினை உலகம் முழுவதும் பெறுவதற்கும், மறைபரப்புவதற்கும் வழிசமைக்கிறது. மனித குலம் அனைத்திற்கும் செய்யும் சேவை மறை பரப்பு பணியாகும். எனவே மறைபரப்பு பணியானது நற்செய்தி அறிவிப்பு பணியாக உயர்வடைகின்றது. "வறியவர்களின் திருச்சபையென" கடவுளின் திருச்சபையாக உயர்வு பெறுகின்றது. தனி மனிதனுக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், உலகிற்கும் கிறிஸ்துவின் நற்செய்தியை கொண்டு செல்பவர்கள் "நாங்கள் தான்" என்பதை இன்று மறைபரப்புப்பணி நற்செய்தி நமக்கு பாடம் கற்றுத்தருகின்றது. "அன்பே உருவான இறைவன் எமக்குள் செயலாற்றி எமது இதயங்களை அன்பினால் நிரப்புகின்றார்" என்னும் நிறைவோடு உலக மறைபரப்பு தினத்தை அனுசரிக்க முனைந்திடுவோம்!, விரைந்திடுவோம்!! ●

# உலக முதியோர் தினம்

**- கி. அருளப்பு, விடத்தல்தீவு -**

### உலக முதியோர் தினம்: 01.10.2018

அவனன்றி ஓர் அணுவும் அசையாது. நன்றே வரினும் தீதே விளையினும் யாம் அறியோம் பராபரமே? என் உடல், பொருள், ஆவி அனைத்தும் இறைவனுக்கே! இதுவே மனித வாழ்வின் முழுமை! பூவிலே இருந்து தான் காயும், பழமும் உண்டாகின்றன. பூவிலே நாசிக்கு நறுமணமாகவும், பழத்திலே நாவுக்கு சுவையாகவும் இருக்கும். இது நமக்குத் தெரிந்ததே இந்தப் பூவிற்கும், பழத்திற்கும் இடைப்பட்ட பருவத்தை நோக்கினால் பூவிலே கசப்பாகவும், பிஞ்சிலே துவர்ப்பாகவும், காயிலே புளிப்பாகவும், பழத்திலே இனிப்பாகவும் இருப்பதை நாம் பார்க்கலாம். மதிரம் மெல்ல மெல்ல பழத்திற்கு ஏறும் போது பழம் தானாகவே விழுந்து விடுகின்றது. மனிதனுடைய வாழ்வும், வளர்ச்சியும் இப்படிப்பட்டதே. அதிலே பிள்ளைப்பருவம், பள்ளிப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என வரையறுக்கப்படுகின்றது. இதிலே இரு வகை உணர்வுகள் உண்டு. ஒன்று பற்றுள்ள பருவம். இன்னொன்று பற்றற்ற பருவம். பூவிலே கசப்பு, பிஞ்சிலே துவர்ப்பு, காயிலே புளிப்பு, இவை பற்றுள்ள பருவத்தை குறிக்கின்றது. அதாவது ஆசை, கோபம், மோகம், பொறாமை என்பவற்றைக் குறிக்கும். புளிப்புள்ள வரைக்கும் பற்றிருக்கும். இவை தவிர்க்க முடியாதவை. பற்றற்ற வாழ்வு சாந்தம், அமைதி, இரக்கம், கருணை போன்ற பண்புகளைக் கொண்டவை. இவை மதிரத்தைக் குறிக்கின்றது. இதுவே முதுமைப்பருவம்.

ஒருமுறை பிறக்கின்றோம். ஒருமுறை இறக்கின்றோம். இந்த பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்டதே வாழ்வு. இது கடவுளின் நியதி. கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்திலே வரும் நிறைவுப் பருவம் இந்த முதுமை. முதுமை என்பது வயதைப் பொறுத்தது அல்ல. அது உணர்ச்சிகளைப் பொறுத்தது. வயது என்பது வாழ்வின் வளமான நிறைவு. அது கடந்து போனவற்றின் பிரகாசமான நினைவு. வாழ்க்கை என்பது வாழும் நாட்களில் இல்லை. அவரவர் செய்து முடிக்கும் செயல்களில் உள்ளது. எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம். இப்படித்தான் வாழவேண்டுமென்ற இலட்சிய நோக்கமும் உண்டு. எப்படியும் வாழலாம் என்ற துர்நோக்கமும் உண்டு. இவ் வார்த்தைகள் எமக்கு முன்பு வாழ்ந்த நம் மூதாதையர்கள் சொல்லி வைத்த பொன்மொழிகள்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம், தின்றதே மகிழ்ச்சி, குடிப்பதே குதூகலம் என்று முதுமை அடைகின்றோமா? அல்லது நம் முன்னோர்களின் அமிர்த மொழிகளின்படி வாழ்ந்து முதுமை எய்துகின்றோமா? இதைப்பற்றி சிந்திக்க ஓர் உண்மை சம்பவம். மலை உச்சியில் மழை பொழிகின்றது. அந்த மழை நீர், மலை மேல் வழிந்தோடி, நிலத்தில் குழி தோண்டி, ஆற்றிற்கு ஓடுகின்றது. இது நல்ல தண்ணீர். இதைப் பல உயிரினங்கள் பருகுகின்றன, அதைப் பாம்பும் குடிக்கின்றது, பசுவும் குடிக்கின்றது. பாம்பு குடித்த நீர் நஞ்சாக மாறி மனிதர்க்கு



பல கெடுதல்களை உண்டு பண்ணுகின்றது. பசுகுடித்த நீர் பாலாக மாறி மனிதர்களுக்கு நல்ல உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும் உண்டு பண்ணுகின்றது. இறைவார்த்தை எமக்கு சொல்லி நிற்பது, முதுமையின் மதிப்பு நீடிய வாழ்வினால் வருவதன்று. ஆண்டுகளின் எண்ணிக்கை அதன் அளவு கோலன்று, ஞானமே மனிதருக்கு உண்மையான நரை திரை. குற்றமற்ற வாழ்க்கையே பழுத்த முதுமை. (சாலமோனின் ஞான நூல் 4:7:8) இதை உறுதிப்படுத்துகின்றது. நரைமுடி ஒரு பொன்முடி என்பதை நன்கறிந்து, ஞானத்திலே நாம் ஒவ்வொருவரும் முதிர்ச்சி அடைய இறைவார்த்தை நம்மை அழைக்கின்றது. இறைவனின் அருட்கொடைகளையும், அரவணைப்பையும், உய்த்துணரும் காலம் முதுமைக் காலம். இறைவனின் கவனம் நம் பக்கம் திரும்பும் காலம் முதுமைக் காலம். என் அருள் உனக்குப் போதும். வலுவின்மையினால் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்று இறை வார்த்தை கூறுகின்றது. (2கொரு 12:9) எனவே இறைவன் நமக்கு கொடுத்த காலத்தை வீணாக்காமல் இறைவனுக்கு நன்றி கூறுவோம். ஆகையால் உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல், ஞானத்தோடு வாழுங்கள். இந்த நாட்கள் பொல்லாதவை. காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள். (எபே 5:16,17) பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், ஓட்டப்பிள்ளைகள் உறவுகளோடு சீரும் சிறப்புடனும், இறை விசுவாசத்திலும், இறை மனித உறவு முதிர்ச்சியிலும் முதிர்ந்த சாட்சிகளாக வாழ வாழ்த்துகின்றேன். ●


**மன்னாவை**
**உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
**- மன்னா நிர்வாகம்.**


# முதிர் பொது நிலையினரும் சமூக மறைக்கல்வியும்

### முதிர் நிலையினர் யார்?

திருச்சபையில் பொது நிலையினர் யார் என்பதற்கு இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் 'பொது நிலையினர் எனப்படுபவர் யார் இல்லை' என்றுதான் தனது பதிலை விளக்குகின்றது. அதுபோலவே முதிர் நிலையினர் என்பதற்கு அவர்கள் யார் இல்லை எனக் கூறுவதே மிகவும் பொருத்தமாகும்.

முதிர் நிலையினர் எனப்படுபவர் மூன்று கால் முதியவர் அல்லர். பொய்ப்பல் நிலையினர் அல்லர். முதுமையில் தள்ளாடும் வயோதிபர் அல்லர். அதே முதுமையினால் பார்வையற்றவரோ, கூன்விழுந்தவரோ அல்லர். மாறாக 'வயது வந்தவர்', மன முதிர்வு பெற்றவர், சிற்றில், சிறுதேர் பருவங்களைக் கடந்து, குமரப் பருவத்தை அண்மையில் தாண்டிய குணப்பாகுபாட்டை உணர்ந்த மூதிளையோர். அவர்கள் தேடும், தேடவேண்டிய சமூக மறைக்கல்வி பற்றி இவண் ஆராய்வோம்.

### முடங்கிக் கிடக்கும் முதிர் நிலையினர்

இன்று பல்வேறு தாக்கங்களினால் கத்தோலிக்க முதிர் நிலையினர் தங்களது அன்றாட வாழ்வில் இறையாட்சி நெறிகளின்படி வாழ முடியாமல் முடங்கிக் கிடக்கின்றனர். அவர்களைத் தட்டி எழுப்பி, தடையின்றி தங்களது ஆன்மிக வாழ்வில் அவர்கள் நடைபோட வழிகாட்டும் மறைக்கல்விக் கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம்.

**அ. வாழ்விடங்களில் வழங்கப்படும் வாழ்வியல் மறைக்கல்வி**

"இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கின்றார்" (லூக்.19:10). இயேசு தேவைப்படுவோர்க்கு அரிதாகக் காட்சியளிக்கும் அந்நியனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளவில்லை. மாறாக தம்மை அண்டி வருவோருக்கு மட்டுமே அன்றி, தாமும் தேடிச் சென்றே அவர்களது தேவைகளை நிறைவு செய்திருக்கின்றார். இன்று முதிர் நிலையினர் தாங்கள் வாழும் இடங்களில்தான் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். சில வேளைகளில் நேர்நிலையிலும், சில வேளைகளில் எதிர்மறையாகவும் சிந்தித்துத் தெளிவற்ற முடிவை எடுக்கின்றனர். அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது மறைக்கல்வியாளரின் கடமை ஆகும்.

**ஆ. வாழ்ந்து காட்டும் வழிகாட்டிகளின் வாழ்வும் ஒரு மறைக்கல்வியாகும்**

அடங்கா ஆர்வமும், அறிவதை அனுபவிக்கத் துடிக்கும் ஏக்கமும் கொண்டவர்கள் முதிர் நிலையினர். தேனொழுகப் பேசிவிட்டு எள்முனையளவும் அதை மெய்ப்பிக்காத மேலாளர்களை அல்ல. மாறாக வார்த்தையும், வாழ்க்கையும் இணைந்து செல்லும் வாழ்க்கையை மேற்கொள்ளும் செயல்வீரர்களைத்தான் அவர்கள் தேடுகின்றனர். அது ஒரு நடுநிலைப் பள்ளி. பள்ளி ஆய்வாளர் மாணவர்களைப் பொதுத்திடலில் கூட்டி, நீங்கள் யாரை உங்களுக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். மாணவர்களில் சிலர் நடிகர், விளையாட்டு வீரர், அரசியல் பிரமுகர்கள் போன்றோரின் பெயரை உச்சரித்தனர்.

➡ 15

குடும்பக் குவலயம்

# குடும்பம், பெற்றோர், பிள்ளை உறவு

- பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா, உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம் -

## தொடர் - 2



இறைவன் ஆதியில் மனிதனை ஆணும், பெண்ணுமாகப் படைத்தார். அதுவும் இறைவன் தமது சாயலாகப் படைத்தார். “மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்” தொ.நூ 1:26. “கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்”. இங்கே ஆணையும், பெண்ணையும் இறைவன் தமது சாயலாகப் படைத்தார் என்று கூறப்படுகின்றது. அதுவும் இருமுறை கூறப்படுகின்றது. அதாவது படைப்பாளியின் சாயலாகும். அதாவது படைப்பின் செயலில் பங்குக்கொள்ள அழைக்கின்றார். திருமணத்தின் மூலம் இச்செயல் முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது. அதுமட்டுமல்ல. ஆணும், பெண்ணுமாகப் படைத்தார் என்பது இருவருக்கும் சமமான கௌரவம் வழங்கப்படவேண்டும் என பொருள் தருகிறது. ஆண், பெண்ணை அடிமையாக வைத்திருக்கும் ஆண் ஆதிக்கத்தைப்பற்றியோ அல்லது ஆணை அடிமையாக வைத்திருக்கும் பெண் ஆதிக்கத்தைப் பற்றியோ கூறவில்லை.

எபேசியர் 5:21-23 இல் புனித பவுல் தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டில் திருமணத்தை விளக்கியது போல் மக்களுக்கும் இறைவனுக்கும் இடையிலான உடன்படிக்கை அன்பைப்பற்றி மனதில் இருத்திக் கொண்டு திருச்சபைக்கு கிறிஸ்து அன்பு செய்தது போல் கணவன் தனது மனைவிக்கு அன்பு செய்ய வேண்டும் என்றும், மனைவி தனது கணவனுக்குப் பணிந்து இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

மேலும் தொடக்க நூல் 2:22இல் “ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி, மனிதனிடம் அழைத்து வந்தார் என்று கூறப்படுகின்றது. விலா எலும்பு இரத்த உறவைக் குறிக்கின்றது. அதேபோன்று நெருங்கிய உறவைக் குறிக்கின்றது. இன்று எமது திருமண வாழ்வை எடுத்துக்கொண்டால் திருமணம் முடித்த நாளில் இருந்து இறக்கும் வரை இருவருக்கும் இடையில் ஆழமான உறவு நாளுக்கு நாள் வளர்ந்து செல்கின்றதா? அல்லது குறைந்து போகின்றதா? நாம் பல படிப்பினைகளைக் கேட்கின்றோம். இருப்பினும் இருவருக்கிடையில் மோதல், பிரச்சினைகள் ஏற்படுவது ஏன்? பல காரணங்களால் மோதல்கள் ஏற்படும். அதில் ஒன்று உளவியல் காரணம். ஒவ்வொரு ஆணுக்குள்ளும் பெண் சுபாவமும் உண்டு. அதை உளவியலாளர் “Anima” என்பர். தனக்குள் இருக்கும் இச்சுபாவத்தை ஒரு பெண்ணில் காணும் பொழுது, உடனே அவனுக்கு அவள்மேல் ஒரு கவர்ச்சி ஏற்படுகின்றது. அதேபோன்று ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஆண் சுபாவம் உண்டு. இதனை “Animus” என்பர். தனக்குள் இருக்கும் ஆண் சுபாவத்தை ஒரு ஆணில் கண்டதும், அவளுக்கு அவன்மேல் கவர்ச்சி ஏற்படுகின்றது.

இருவரும் காதலித்து திருமணம் செய்தபின், சில காலம் கழியும் பொழுது, மற்றவரின் பலவீனங்களைக் காணும் போது வெறுப்பு ஏற்படத் தொடங்குகின்றது. அதேபோன்று ஒவ்வொரு கணவனும், மனைவியும் தத்தமது குடும்பத்திலிருந்து தந்தையின் மனப்பாங்கு, (Father complex) தாயின் மனப்பாங்கு (Mother complex) போன்றவற்றையும் பழக்க வழக்கங்கள், பெறுமதிகளையும் எடுத்துக்கொண்டே வருகின்றனர். இந்த வேறுபாடுகளைக் காணும்போது வேறுபாடுகளுக்குள் எப்படி விட்டுக்கொடுத்து வாழ்வது என்ற பயிற்சி இல்லாது இருப்பதால் பிரச்சினை ஏற்படுகின்றது. எப்போதும் ஒருவர் மற்றவரை மாற்றவே முயலுகின்றனர். மற்றவர் இருக்கும் நிலையில் நிபந்தனை இல்லாமல் ஏற்றுக்கொண்டு வேற்றுமைகளில் ஒற்றுமையாக வாழத்தெரிவதில்லை. மேலும், சிலர் பிறப்பால் அறிவு ரீதியாக, தர்க்க ரீதியாகச் செயற்பட பழக்கப்பட்டிருப்பர் (Thinking Type). சிலர் எதையும் உணர்வு பூர்வமாகப் பார்க்க பழக்கப்பட்டிருப்பர் (Feeling type). ஒரு நாள் மனைவிக்குச் சுகயீனம் ஏற்பட்டது. அவள் படுக்கையில் படுத்திருந்தாள். கணவன் வேலை விட்டு வந்ததும், எனக்குக் கிட்ட வந்து, எனது தலையைத் தடவி மருந்து குடித்திங்களா? என்று கேட்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் கணவன் வேலைவிட்டு வந்ததும் அவ்வாறு செயற்படவில்லை. தலை வலி என்றால் மருந்து குடித்திருக்கலாம் தானே என்று கூறிவிட்டுச் சென்று பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார். இது மனைவிக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியது. இங்கே இருவரும் மேற்கூறப்பட்ட சுபாவங்களை புரிந்து கொள்ளாததால் மோதல் ஏற்பட்டது. சிலர் மற்றவர்களுடன் சகஜமாகப் பழகக் கூடியவர்களாக இருப்பர் (Extrovert). மேலும் சிலர் மற்றவர்களுடன் சகஜமாகப் பழகாத சுபாவத்தை (Entrovert) கொண்டிருப்பர். இதனால் இருவருக்கிடையில் மோதல் ஏற்படக் கூடும். இதனால் ஒருவர் மற்றவரது சுபாவத்தைப் புரிந்து கொள்ளப் பழக வேண்டும். மற்றவரை மாற்றுவதிலேயே எமது சக்தியைச் செலவழிக்காது எம்மை மாற்றி, மற்றவர் இருக்கும் நிலையில் குறைகளோடும், நிறைகளோடும் ஏற்றுக்கொண்டு வேற்றுமைக்குள் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும்.

இப்படி வாழ எமக்கு அதிக வல்லமை தேவை. திருடுவதற்கும், கொல்வதற்கும், அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன். (யோவான் 10:10). இறைவன் தரும் வல்லமையைக் கேட்டுச் செபிக்க வேண்டும். சிந்திக்கும் விதத்தை மாற்ற வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும். விட்டுக்கொர்டுத்து வாழப் பழக வேண்டும். மன்னித்து மறக்க வேண்டும். ஒருவர் மற்றவருக்குச் செவிசாய்க்க வேண்டும். அன்பு எம்மில் இருக்கும்போது மற்றவரை மதித்து ஏற்றுக்கொள்ள இலகுவாக இருக்கும்.●

*(அடுத்த இதழில் தொடரும்)*

# குடும்பம் ஒரு கோவில்

- இ. பற்றிசியா, 8ம் வட்டாரம், வங்காலை -

வாழ்க்கை ஒரு வசந்தம். குடும்பம் ஒரு கோவில். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். குடும்பம் நட்புடன் வாழ்ந்தால் குதூகலம். இப்படியெல்லாம் குடும்பத்தைப்பற்றி உயர்வுடன் கூறலாம். ஆம். முன்னொருகாலம் இவ்வாறான கூற்றுக்கள் ஏற்புடையனவாக இருந்தன. வலது காலை எடுத்து வைத்துத்தான் புதுமணத்தம்பதியர் வாசற்படியைத் தாண்டுவார்கள். இல்லத்துக்கு அவ்வளவு பெருமையும், முதன்மையும் இருந்தது. ஆனால் இன்று குடும்பங்கள் திசைமாறிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் இல்லம் இன்று இரண்டாம் இடந்தான். முதலாமிடத்தை திருமணமண்டபங்கள் ஆக்கிரமித்து விட்டன. மங்களம் பொங்கும் மணநாளும், மணமக்கள் உறவு நாளும் இல்லம் இடைஞ்சல் என்று ஏசியுடன் ஹோட்டல்களில் அரங்கேற்றப்படுகின்றன. வாசற்படிகள் தாண்டப்படுகின்றன. வரன்முறைகள் மாற்றம் பெறுகின்றன. கடந்தகாலங்களில் உறவுகளின் பலம் எட்டுக்குமேல் பன்னிரெண்டு பிள்ளைகளுக்குமேல் எங்கள் பேரன் பூட்டன் காலத்தில் இருந்ததை நாம் அறிவோம். ஒரு வீட்டில் திருமணம் அல்லது வேறு ஏதாவது கொண்டாட்டம் என்றால் முதல் நாளே அந்தக் குடும்பத்தின் உறவுகளும், ஊரவரும் ஒன்று கூடுவார்கள். செய்ய வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் தமது சொந்தக் குடும்பத்தின் பொறுப்புக்கள் போல எல்லோரும் ஒன்று கூடிச் செய்து முடிப்பார்கள். முதல் நாளிலேயும் விருந்து கொடுப்பார்கள்.

இங்கு பிரிவினைகள் என்பது மிகவும் அரிதாகவே காணப்பட்டன. குறிப்பிட்ட குடும்பங்களின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்று அவர்களே ஒரு பெருங்கூட்டமாக இருந்தனர். அத்துடன் உறவினர்களும் சேர்ந்துவிட மகிழ்ச்சியும், ஆரவாரமும் களைகட்டுவதைப் பார்த்தால் பெருமையாக இருக்கும். ஆனால் இன்று பிள்ளைகளுக்குள்ளே பிரிவினைகள். உறவுகளுக்குள்ளே வேற்றுமைகள். எல்லாப் பிள்ளைகளும், எல்லா உறவுகளும் சேர்ந்து கொண்டாடுகின்றன என்றால் அது விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே நடைபெறுகின்றது.

பெற்றோரைப் பெருமைப் படுத்தியது அந்தக்காலம். அம்மா, அப்பா என்றால் முன்னறி தெய்வங்கள்தான். கீறிய கோட்டைக் கடக்காத பிள்ளைகள். சண்டை பிடித்தாலும், சகோதரப் பாசத்தை விட்டுக் கொடுக்காத சகோதரங்கள். மருமக்களை தாம் பெற்ற பிள்ளைகளாக மதித்த காலம். மருமக்களும், மறுபெற்றோராக மதிப்பளித்த காலம். உறவுக்காக எதையும் இழக்க தயாராக இருந்த பாசப் பிணைப்புக்கள். அனைத்திற்கும் மேலாய் பெற்றோரின் வார்த்தைகளை சிரமேல் வைத்து பணிந்தார்கள். செய்த எல்லாத் தொழில்களும் ஆசீர்பெற்றன. கரை வளம், கடல் வளம், கலை வளம், கல்வி வளம் பெருகின. விசேடமாக இறை அழைத்தல்கள் நிறைந்தன. செல்வம் நிறைந்திருந்தது. மகிழ்வும், சமாதானமும் நிறைந்திருந்தது. ஏற்றதே வாழ்க்கை இணைத்ததே குடும்பம். விட்டுப் பிரியாமல் இறப்புவரை இணைந்தே வாழ்ந்தார்கள். ஆனால் இல்லற வாழ்வில் காலத்தின் மாற்றம், கணனியுகம், வேலைப்பழு, கடமையின் வேகம், மதிப்பான வாழ்வு, பணத்தின் பெறுமதி ஆசை இவற்றுடன் அவசரமும், கோபம் கொள்ளும் நடத்தையும் பந்தபாசங்களை அறுத்துள்ளது. ஆகவே இலட்சியப்பாதையில் பயணிக்க, வாழ்வை வளமாக்க எம் இயல்புக்கு ஏற்ற அளவிலே, தகுதிக்கு மேற்படாமல் பார்த்துக்கொள்ளும்போது வாழ்வு நமக்கு வசமாகும். வாழ்ந்தோரின் அனுபவங்கள் வாழ்க்கைப்படியாய் மாறும். கற்றோரின் பொன்மொழிகள் களம் அமைக்கும், பெரியோரின் வழிகாட்டல் பேதமை நீக்கும்.

நல்லதைச் செய்வது கடினமானது? தீமையை உடனே செய்துவிடலாம். ஆக்குவது கடினம். அழிப்பதற்கு ஒரு வினாடி போதும். குடும்ப உறவு, பாசங்கள் எல்லாம் நீண்ட வாழ்வுக்குரியன. உயர்வானதை நாடும் போது தாழ்வானது தாண்டிவிடும். எனவே குடும்பத்தில் பொறுமையைக் காப்போம். ஒன்றாய் வாழ்வோம். நன்றாய் வாழ்வோம். அதுவே பயனுள்ளது.●

# குடும்பம் தூய திருத்துவத்தின் பிரதி விம்பம்

- கி. அருளப்பு, விடத்தல்தீவு -

மனிதம் மலர்ந்திட வேண்டும். மனித மாண்புகள் உயர்ந்திடவேண்டும். இறைவனின் சாயலே மனிதம் படைப்பின் தொடக்கத்தில் இருந்தே வாழ்வுக்கும், சாவுக்கும், அருளுக்கும், பாவத்திற்கும் இடையே முரண்பட்ட தன்மை இருந்துவந்திருப்பது யாம் அறிந்த ஓர் விடயமே. ஒருவன் தனக்கென வாழ்ந்தால் அவன் மனிதனே அல்ல. அவனும் வாழ்ந்து, அயலானையும் வாழவைத்தால் அவன் மனிதன். அயலானுக்கென்றே வாழ்ந்தால் அவன் தெய்வம். இங்குதான் மனித மாண்பும், மனித நேயமும் மிகுந்து காணப்படும். இதுவே நம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அன்னையாம் திருச்சபை இட்டுவைத்த தலைப்பு.

மனிதனுடைய வாழ்விலே இறைவனைப் பற்றிய சிந்தனை பிரிக்க முடியாத ஒன்று. ஏனெனில் இறைவனின் அன்பில் நிறைந்து வாழ்பவனே உண்மையான மனிதனாக இருக்க முடியும். இதை உணர்த்துவதே ஆன்மீகம். ஆன்மீகம் என்பது இறைவனைப்பற்றி அறிவதுமட்டுமல்ல. இறைவனில் தன்னைக் கண்டு அடுத்தவனில் ஆண்டவனைக்காணும் அற்புதம்தான் ஆன்மீகம். இத்தகைய ஆன்மீகம் நம் ஆண்டவர் இயேசு வாழ்ந்து காட்டிய ஒன்றாக இருக்கின்றது. இன்றைய குடும்பமே நாளைய சமுதாயம். சமுதாயத்தின் விளைநிலம் குடும்பம்.

இவ்வுலகத்தில் இரண்டு குடும்பங்கள் உண்டு. ஒன்று இறைகுடும்பம் இன்னொன்று மனுக்குடும்பம். இறை குடும்பம் தந்தை, மகன், தூய ஆவி. மனுக்குடும்பம் இயேசு, மரி, சூசை. தந்தை மகன் மீது அளவு கடந்த அன்பு கொண்டுள்ளார். மகனும் தந்தைமீது அளவுகடந்த அன்பு கொண்டுள்ளார். இவ்விருவருக்கும் இடையில் உள்ள அன்பின் வெளிப்பாடே பரிசுத்த ஆவி. இம்மூவரின் ஒன்றிப்பில்தான் அன்பே கடவுளென அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன. இயேசுவிற்கும், திருச்சபைக்கும் என்ன உறவோ, அதுவே நம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய பண்புகள். குடும்பமே கிறிஸ்தவ வாழ்வின் விழுமியங்களின் மையம். குடும்பம் என்றால் இன்பம் என்பது அதன் பொருள். குடும்பமே மனிதத்தின் பிறப்பிடம். வாழ்க்கையை வளப்படுத்தும் சிறப்பிடம் குடும்பம் கடவுளின் அருட்சாதனம். மனிதவாழ்வு குடும்பத்தில் ஒளியாகி, சமூகத்தில் மலர்ந்து உலகில் மணம் வீசுகின்றது. ஆபிரகாம் கடவுள் உறவு இதற்கு ஓர் நல் உதாரணம். (தொடக்கநூல்22:9) குடும்ப உறவில் அன்புக்கு மதிப்பு கொடுப்போரே நல்ல குடும்பங்கள். நல்விழுமியங்களைக் கடைப்பிடிக்கும்போது திருச்சபை வளர்கின்றது. திருமணம் என்பது துணையாய் இருப்பதற்கு மட்டுமல்ல, இணையாய் இருப்பதற்கும் இணைக்கப்பட்டது. மாலைகளை மாற்றிக் கொள்வது மட்டுமல்ல, மனங்களை ஏற்றுக் கொள்ளவும்தான். திருமணம் கடவுளின் அருட்சாதனம். இன்பத்திலும், துன்பத்திலும், உடல் நலத்திலும், வாழ்விலும், தாழ்விலும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் இருப்போம் என்று கடவுளுக்கு எம்மை அர்ப்பணமாக்குகின்றோம். கடவுளின் பிள்ளைகள் கடவுளால் பிறந்தவர்கள். அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார். (யோவா 1.12.13)

அருள்பெற்றோருக்கன்றி கல்யாணத்துறவு நிலை கிட்டாது என்றார். பிறப்பினிலே தகுதியில்லா ஆடவரும் உண்டு. பிறராலே தகுதியில்லாதானவரும் உண்டு. சிறப்பான சேவைக்கு தம்மைத்தாமே கொன்று தேவனுக்கு தொண்டு செய்யச் சென்றவரும் உண்டு. மனிதரால் அண்ணகராக்கப்பட்டவரும் உண்டு கடவுளால் அண்ணகராக்கப்பட்டவரும் உண்டு. (மத்தேயு19.11.12) குடும்ப வாழ்வில் இறைவனின் இணைப்பு இருக்கும் போதுதான் அது உண்மையான அன்பு, உறவு. இன்றைய குடும்பமே நாளைய சமுதாயம் ஒவ்வொரு குடும்பமும் சமூகத்தின் ஓர் அலகு. குடும்பமே தம் பிள்ளைகளின் முதல் மறை ஆசிரியர். இஸ்ராயேலே செவிகொடு. உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே. உன்முழு இதயத்தோடும், உன்முழு ஆற்றலோடும், உன் கடவுளாகிய ஆண்டவரை அன்பு செய்வாயாக. இன்று நான் உனக்கு கொடுக்கும் இந்த வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும் அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். நீ வீட்டில் இருக்கும்போதும், வழிப்பயணத்தின் போதும், படுக்கும் போதும், எழும்பும்போதும் அவற்றைப் பற்றிப்பேசு. உன் கைகளில் அடையாளமாக அவற்றைக் கட்டிக்கொள். உன் வீட்டு நுழைவாயிலும், கதவு நிலைகளிலும் அவற்றை எழுதிவை. (இணைச்சட்டம் 6.4.7)

வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி. பெற்றவர்கள் பட்ட கடன் பிள்ளைகளைச் சேருமடி. சேர்த்து வைத்த புண்ணியம்தான் சந்ததியைக் காக்குமடி. என்றும், நீ இடும் புல்லுக்கு நான் தரும் பாலென்றும் எம்முன்னோர்கள், இறை வல்லுனர்கள் சொல்லிவைத்ததை நாம் கேட்டிருக்கின்றோம். ஒவ்வொரு மனிதனும் இறைவனின் துளியே என்பதை மணிதர்கள் உணர்வதே இல்லை. தான் என்ற வட்டத்துக்குள்ளே வலம் வருபவன் உறவுகளை அறியாதவன். பிறர் மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் அர்ப்பணம் செய்யும்போது மனிதம் மலர்கின்றது. மாண்பு நிறைகின்றது.●

திருச்செபமாலை மாதம்

# அன்னைக்கு கரம் குவிப்போம்

## - திரு. பீ. கிறிஸ்பி குருஸ். தன்னார்வ பணியாளர், பேசாலை -

ஐப்பசி திங்கள், கார்முகில் பவனிவரும் காலம். வெயிலின் வெம்மை தணிந்து, குளிர்காற்று மெல்லென வீசத்தொடங்கும். வண்ண மலர்கள் மெல்லிய மழையில் சில்லென பூத்து மணம் பரப்பும். இம்மாதம் தான் அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட மாதம். அழகிய மலர்கள் அன்னையின் மலர்ப்பாதம் தழுவிக்கிடக்கும். அன்னையின் திருமுகத்தில் மெல்லிய புன்முறுவல் தவழ்வது போல் தோன்றும். ஏனென்றால் செபமாலைப் பூக்கள் அன்னையை அலங்கரிக்கும்.

அம்மா என்று அழைத்தால் குழந்தாய் என்று ஓடி வருவாள் அன்னை. இறைவனின் அன்பைத் தவிர அம்மா என்ற அன்புக்கு இவ்வுலகில் வேறேதும் ஈடாகாது. அன்னை மரியாவுக்கு இறைவனோடு இருந்த உறவு நிலையையும், மனித மீட்பின் அன்னையின் பங்களிப்பையும் வெளிப்படுத்தும் மறை உண்மைகளையும் சிந்தித்துப் பார்ப்போம்.

### 01. முப்பொழுதும் கன்னிகை

இயேசுவை கருத்தாங்கு முன்னும், இயேசுவை பெறும் போதும், பெற்ற பின்னும் அன்னை மரியா கன்னிமை குன்றாமலே இருந்தார். நேற்றும், இன்றும், என்றும் மாறாத தேவன் தனது கருவூலத்தையும் அப்படியே வைத்திருப்பது ஆச்சரியமல்ல. வாக்கு மாறாத தேவனை கருத்தாங்கிய அன்னையால் "நான் கன்னி ஆயிற்றே" என்ற வார்த்தையில் இருந்து எவ்வாறு" விலக முடியும். யூதப் பரம்பரையில் வாழ்ந்த அன்னை மரியா மெசியாவின் வருகை பற்றி நன்கு அறிந்திருந்தார். "கடவுள் கபிரியேல் என்னும் வானதூதரை ஒரு கன்னியிடம் அனுப்பினார்." (லூக்.1:23). "இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார். (மத்.1:23) கூறுகின்றது. அன்னை மரியா கன்னி என்று தொடக்க நூல் முதல் திருவெளிப்பாடு வரை கூறப்படுகின்றது. வானதூதர் நற்செய்தி அறிவித்த போது தனது எளிய உள்ளத்தை வெளிப்படுத்துகின்றார். "இது எப்படி ஆகும்? நான் கன்னி ஆயிற்றே" என்று. கடவுள் விண்ணகம் விட்டு மண்ணகம் வருவதற்கு வேறு எந்த வழியையும் அவர் கையாளவில்லை. ஒரு கன்னிப்பெண்ணையே தெரிந்தெடுத்தார். "இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்" (எசா.7:4) அலகைக்கு பகையாக கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட பெண். கன்னிமை கெடாமலே கருத்தாங்கிய பெருமைக்குரிய அன்னை மரியாள். "இதோ கருவுற்று ஒரு மகவைப் பெறுவீர்" (லூக்.1:31)

கன்னிமை கெடாமலே மாட்டுத் தொழுவத்தில் இயேசுவை பெற்றெடுக்கின்றாள். இவை அனைத்தும் இயற்கைக்கு மாறானவை. "இயற்கையும் கடவுளுக்கு கட்டுப்பட்டதே" ஏனெனில் கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. இயேசுவை பெற்றுத்தரும் கருவியாக மட்டும் அன்னையை இறைவன் பயன்படுத்தவில்லை. உயிர்த்த ஆண்டவர். மூடிய கதவுள்ள அறையில் கதவை திறக்காமலே பிரசன்னமானாரோ அதுபோல அன்னை மரியா தன் கன்னிமை கெடாமலே இயேசுவைப் பெற்றார் என்பதை விசுவாச சத்தியமாக ஏற்றுக் கொள்ளுகின்றோம். வானகத் தந்தையே, அருள்மிகப் பெற்றவளே வாழ்க என்று வாழ்த்துக் கூறி சகல வரங்களாலும் அணி செய்தார். எல்லா விதமான தீமைகளிலிருந்தும் விடுதலை பெறும் வண்ணம் இறைவனின் பாதுகாப்பில் இருந்தார்.

### 02. அன்னை மரியா இறைவனின் தாய்

தொடக்கத்தில் கடவுளோடு கடவுளாக இருந்த வாக்கு மனுவானார். அந்த வார்த்தையை சுமந்த பேழை தான் அன்னை மரியா. அவ்வாறாயின் அன்னை இறைவனின் தாய். "ஆனால் காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்துக்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்துக்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்." (கலா.4:4) அன்னை மரியா



இறைவனின் தாய் என்று அழைக்கப்படக் காரணம் தமது இறைத்தன்மையின் தொடக்கத்தை அன்னை மரியாவிடம் இருந்து பெற்றுக் கொண்டதால் அல்ல. மாறாக அவரது உடலை அன்னையிடம் இருந்து பெற்றுக்கொண்டதால் தான்.

இறைவனின் தாய் என்ற நிலை இறைவனின் மனித அவதாரத்தோடு ஒன்றாகி விட்டது. கடவுள் மனிதனாக மாதாவிடம் பிறந்தார். அன்னை மரியா இறைவனின் தாயானார். கடவுளுக்கு தாய் இல்லை. தொடக்கமும், முடிவும் இல்லை. அவர் தாமாய் இருக்கின்றார். ஆனால் கடவுள் மூவராக இருக்கின்றார். வார்த்தையாகவும் இருக்கின்றார். அந்த வார்த்தையான இயேசு இறை மகன். இருவருடையவும் ஆவி தூய ஆவியானவர்.

வானதூதர் அவரிடம் தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். (லூக்.1:35) அன்னை மரியாவிடம் இருந்து பிறந்ததால் அல்ல இயேசுக்கிறிஸ்து கடவுள் ஆனது. கடவுள் தான் மனிதனாக அன்னையிடம் பிறந்தார். இயேசு இறைவன். அன்னை மரியா இறைவனின் தாய். நம்மை பெற்றெடுக்கும் அன்னையை நாம் தெரிவு செய்வதில்லை. தமது தாய் எவ்வாறானவராக இருக்க வேண்டுமென்பதை ஒரு மகன் ஏற்கனவே முடிவு செய்ததற்கான ஒரே ஒரு சான்று தான் அன்னை மரியா. மீட்புப் பணிக்கு உடன் உழைப்பாளியாக தமது அன்னையை ஆயத்தம் செய்தார். அடிமை என்று தன்னை தாழ்த்தியதில் இருந்து, கல்வாரிக் குன்றில் தமது திருமகன் கடைசிச் சொட்டு இரத்தமும் சிந்தி தலை சாய்க்கும் வரை உடன் இருந்தவர் அன்னை மரியா. வாடகைத்தாய் அல்ல. வாழ்க்கையின் தாய். "இதோ உனது தாய்" அன்னை மரியா இறைவனின் தாய் மட்டுமல்ல, நமது தாயும் ஆவார். இது சிலுவை தந்த பரிசு. அடைக்கலம் தேடிப்போனால் அரவணைக்கும் தாய். அதனால் தான் விண்ணுலகிலும், மண்ணுலகிலும் உள்ள எல்லாப்படைப்புக்களையும் விட மேலானவர் என்று வாழ்த்துகின்றது மனுக்குலம்.

### 03. அமலோற்பவ அன்னை

பெண்களுள் நீர் ஆசிபெற்றவர். (லூக்.1:4) அன்னைக்கு வாழ்த்துப்பா பாடுகின்றார் எலிசபெத். முன்குறித்தார். அழைத்தார். மகிமைப்படுத்தினார், இன்னும் மகிமைப் படுத்துவார். இது இறைவனின் அநாதித் திட்டம். அன்னை மரியா அமல உற்பவி என்று திருவிவிலியத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் விசுவாசக் கண்ணோட்டத்தில் இறை வல்லமையை நோக்குமிடத்து கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்"

(மத்.5:8) கடவுளைக் காண்பதற்கு பரிசுத்தம் தேவைப்படுமாயின் இறைவன் தங்கி வாசம் செய்யுமிடம் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்பது நியாயமானதே. ஆதிப் பெற்றோர் பாவதோஷம் எதுவுமின்றி பரிசுத்தமும், பாக்கியமுமான நிலையில் உருவாக்கப்பட்டவர்கள். உண்ணக் கூடாது என்று விலத்தியதனால் அது கூடாத பழம், நஞ்சுப்பழம். ஆனால் பார்ப்பதற்கு அழகாக, இனிமையாக, அறிவுக்கு உகந்ததாக இருந்ததாக உண்ணுமுன்பே கண்டு கொண்டாள் ஏவாள். கவர்ச்சி அழகாகவே இருக்கும். ஆபத்தும் அங்கே தான் இருக்கும். உண்டாள், பாவ நஞ்சை உலகிற்குள் புகுத்தினாள். அந்த நஞ்சை அகற்றுவதற்கு இறை மகன் உலகிற்கு வரவேண்டியதாயிற்று.

இதன் காரணமாக நீதியின் தேவன் தனது குமாரனை பலியாக்கினார். அவர் உலகிற்கு வரவேண்டுமாயின் பரிசுத்தமும், பாக்கியமுமான ஒரு பெண் தேவை. பாவம் உலகில் புகுந்த அக்கணமே கடவுள் வாக்குறுதி தருகின்றார். "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும், அவள் வித்திற்குமிடையே பகையை உண்டாக்குவேன்" (தொ.நூ. 3:15). நீங்கள் அழியக்கூடிய வித்தினால் அல்ல. மாறாக உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்.

(1பேது 1:2) கடவுளின் வார்த்தையால் அக்கணமே அன்னை மரியா புதுப்பிறப்பு அடைந்து விட்டார். "மறுபடியும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட முடியாது" வேதம் சொல்லுகின்றது. "மரியாவின் வாழ்த்தை எலிசபெத் கேட்டபொழுது அவர் வயிற்றில் உள்ள குழந்தை அக்களிப்பால் துள்ளிற்று". கடவுளின் வார்த்தையால், தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு குழந்தை புதுப்பிறப்பு அடைந்து விட்டது. கடவுளின் வார்த்தை உயிருள்ளது. அன்னை மரியா அமலோற்பவ அன்னை என்று திருச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் உண்மையை லூர்து நகரில் புனித பெர்னதேத்துவுக்கு அன்னை மரியா காட்சியளித்து "நாமே அமல உற்பவம்" என்று அறிவித்தார். இது அன்னையின் அமலோற்பவத்தின் சான்று. இது திருச்சபையின் விசுவாசம். அதுவே நமது விசுவாசம்.

### 04. அன்னை மரியாவின் விண்ணேற்பு

இயேசு கடவுள் என்பதால் விண்ணேற்றம் அடைந்தார். அன்னை மரியா ஓர் ஒப்பற்ற படைப்பு என்பதால் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். மண்ணுலகில் தமது திருப்பயணத்தை முடித்த பின் அன்னை உடலிலும், ஆன்மாவிலும் மாட்சி பெற்றார். அதாவது பொதுத் தீர்ப்பின்போது நடைபெறும் ஆன்ம உடல் உயிர்ப்பை அன்னை மரியா தமது மண்ணுலகு வாழ்வின் இறுதியில் பெற்றுக் கொண்டார். அன்னை பாவம் எதுவும் இல்லாதவர். அமலோற்பவ அன்னை நித்திய கன்னி. இறைவனின் தாய். அது பூரணமாகவேண்டு மென்றால் அன்னை விண்ணேற்பு பெற வேண்டும். இது நமது பாரம்பரிய விசுவாசம். ஆயினும் பாவத்தின் கூலியான மரணத்தை தமது மகனின் பாதையில் செல்வதற்காக தாமும் ஏற்றுக் கொண்டார். அன்னையின் இறப்பு முழுமையான சமர்ப்பணமாக இருந்தது. ஆழ்ந்த தூக்கம் போன்றதாக இருந்தது. மீட்பரை சுமந்த தாயின் உடல் கல்லறையில் அழிந்து போக முடியுமா? ஆதியில் கடவுளின் ஞானத்தில் உருவான பெண் ஒரு பாவமும் இன்றி இறைவனால் பராமரிக்கப்பட்ட அன்னையின் உடல் கல்லறையில் அடங்கிவிட முடியுமா? "ஏனோக்கு கடவுளோடு நடந்து கொண்டிருந்தார், பின்பு அவரைக் காணவில்லை, ஏனெனில் கடவுள் அவரை எடுத்துக் கொண்டார்." (தொ.நூ 5:24) இது ஒரு சான்று. மோசே இறந்தார். கடவுள் அடக்கம் செய்தார். ஆனால் கல்லறையை இன்றுவரை காணவில்லை. "எலியா சுழற்காற்றில் விண்ணகத்துக்குச் சென்றார்."

➡ 14



# அணையாத அற்புத விளக்கு!



## அ. ஜஸ்மின் ஷறோன், நானாட்டான்.

தூய அன்னை மரியாள் அனைத்து அருள் வரங்களையும் பெற்ற சிறந்த எழிலரசி. அணைந்தும், அணையாத அற்புத விளக்கு. பிறக்கும் முன்பிருந்தே வாழ்ந்தவரும், பிறந்த பின் உலக வரலாற்றையே வகுத்தவருமான இறைமகன் இயேசு இறை தந்தையின் நினைவிலே தாயின்றி ஜெனித்தவர்.

கன்னி மரியின் மணிவயிற்றில் தந்தையின்றி மானிட உருவில் இறைமகன் பிறக்கப் போவதை அறிந்த இவர் தன்னையே முழுவதும் இறைவனுக்கு "அடிமை" என அர்ப்பணித்து விட்டவர். "கற்புக்கரசி" அவர் களங்கமற்ற நீர்ச்சுனை. இறைமகனையே தன் உதரத்திலே சுமந்த "திருப்பேழை." கடவுளையே தாங்கி நின்ற "கதிர்ப்பாத்திரம்." தன் கன்னிமைக்கு பழுதின்றி இறை மகனை பெற்றெடுத்த "தூயவர்." இது போன்ற பெருமை சூட்டும் எண்ணற்ற பண்புகளால் புகழ் பெற்று அன்றும், இன்றும் மக்களிடையே தேவ அன்னை மாண்புடன் விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

மனித அவதாரத்திற்கு முன்பே அன்னை மரியாவுக்கு சில சிறப்பம்சங்கள் வழங்கப்பட்டன.

- அவரது உற்பவத்திலே சென்ம பாவத்திலிருந்து மீட்கப்பட்டார். "அருள் மிகப் பெற்றவள்" என்ற நிலை மரியாளுக்கு பிறப்பில் இருந்தே வழங்கப்பட்டது.
- தனக்கு தரப்பட்ட மேலான வரங்களுடன், ஒத்துழைக்க தேவையான நல்ல மனநிலையும் தரப்பட்டது.
- கற்பு என்ற மிகப்பெரிய புண்ணியத்தின் மதிப்பும், அதற்கு சிறுவயதிலிருந்தே தன்னை அர்ப்பணிக்கும் மனநிலையும் தரப்பட்டது.
- இயேசுவின் மனித அவதாரத்தில் இயேசுவின் தாய் என்ற மகிமையும், அதே நேரத்தில் "கன்னி" என்ற பெருமையும் மரியாவுக்கு ஒரே நேரத்தில் வழங்கப்பட்டன.
- ஒன்பது மாதங்கள் இறைமகனை தனது திரு வயிற்றில் கருவாக கொண்டிருந்தார்.
- இறைவன் தன் திருவயிற்றில் குடியிருக்கும் காலத்தில் மரியாள் தொடர்ந்து தன் அருட்கொடைகளில் வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருந்தாள்.
- மனிதருக்கு கடவுள் பொழியவிருக்கும் அருட்கொடைகளின் வாய்க்காலாக அன்னை மரியாள் அமர்ந்தாள்.
- இயேசுவின் மனித அவதாரத்திற்கு பின்பு, தனது அமல உற்பவத்தின் விளைவாக மரியாளிடம் எந்த பாவமுமில்லை.
- மீட்பின் உழைப்பாளர் என்ற பேற்றினைப் பெற்றார்.
- எல்லா மனிதரைப்போன்றும் மரண வேதனை மரியாளுக்கு ஏற்பட்டது.
- ஆன்ம சரீரத்துடன் விண்ணேற்படைந்தார்.
- முடிவில்லா வாழ்வு பெற்றார்.

மேற்சொன்ன பன்னிரு ஆசீர்வாதங்களும், பன்னிரு விண்மீன்களாக மரியாள் மகுடத்தை அலங்கரிக்கும் இறை ஆசிகளாகும். அருள் வாழ்வின் சிகரத்திற்கும், தெய்வீக மகிமையின் உச்சத்திற்கும் மரியாளை உயர்த்தியது அவளது தாழ்ச்சியே. தன் வாழ்நாள் முழுவதும் மறைந்த வாழ்வை நாடினாள். மறைக்கப் படுவதையே விரும்பினார். ஒன்றுமில்லாதவராக கருதப்படுவதையே தேடினார். கடவுளின் தாயாகி விட்ட அந்நிலையிலும், தனது ஏழை உறவினராகிய எலிசபேத்திற்கு பணிவிடை புரிபவராக மரியா தன்னை ஆக்கிக் கொண்டாள்.

எனவே, எம் எல்லோர்க்கும் அன்னையாக விளங்கும் எம் மரி அன்னையை நாம் எப்போதும் வாழ்த்திப் போற்றுவோம். அவர் காட்டிய அன்பு வழியில் எம் வாழ்வை தொடருவோம். அன்னையின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள செபமாலைப் பக்தியை எம்மில் வளர்த்தெடுப்போம்.

"வாழ்க மரியாள்! வளர்க அவள் மாண்பு!●

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## – பென்ஜமின் சோமநாதரின் கவிதைகள் –

## செபமாலை

இறையாசீரை,
நிறையாசீரை,
திருப்பொழிவாய்,
அருட்பொழிவாய்,
ஆன்மாவில்
ஊற்றுவதற்கு,
அன்பினால் ஊட்டுவதற்கு,
திருச்செபமாலை
தினம் தினம்
எம்மைத் திடப்படுத்துமே.

அருட்கடலில் அள்ளி
எடுத்த ஆன்மாவின்
முத்து மாலையாம்
செபமாலை என்றும்
எமது ஜெயமாலை.


உலகப்போக்கில்
ஊனக் கண்ணால்
பார்த்திடாதீர் - அதை
ஞானக்கண்ணால்
பார்த்திடுவீர், நாளும்
நலமே பெற்றிடுவீர்.

ஊனக் கண்ணால் பார்த்தால்,
உண்மை தெரியுமா?
ஞானக்கண்ணால் பார்த்தால்
உண்மை துலங்கும் - விளங்கும்.

ஊனக்கண் பார்வை - அது,
இருட்டு வாழ்கை
குருட்டு வாழ்க்கை,
ஞானக்கண் பார்வை -
நிலை வாழ்க்கை.
செபமாலை - அது
வெற்றியின் பொன்மாலை,
விலையேறப்பெற்ற
வாழ்வின் வசந்த மாலை.

செபமாலை - அது
அருட்திருமாலை - எமது
ஞானமாலை,
அதுவே மரியன்னைக்கு
மகிமையின் பொன்மாலை
புகழ் மாலை.





## கருவின் உயிர் காப்போம்

கடவுளின் கிருபையாகி,
கொடையாகி, கருவறையில்
கருவாகி, உருவாகி,
உயிரோடு, உடலோடு உருவாகி,
புது உறவாகி, புது வரவாகி,
பூமியைக்காண வரும்
புது அதிதியைப் புன்னகையோடு
“வருக, வருக” - என வரவேற்போம்.

வாழ்த்தி மகிழ்வோம்.
அன்புடன் அரவணைத்து,
அம்மா - அப்பா என்ற
பதவி உயர்வுடன்
புது விருந்தாளரைப் பாசமாய்ப்
பெற்று வளர்ப்போம்.

கருக்கலைப்பு - அது கடவுளுக்கு
எதிரான பாவம் - எனவே,
கருவறையில் வளரும் கருவை
கருணையுடன் காப்பது
எமது கடமை. கருவின் உயிர்
காக்கும் படி கத்தோலிக்கத்
திருச்சபையும்
கனிவுடன் எம்மைக் கேட்கிறது.
கருவின் உயிர் காப்போம்.
கடவுளின் வரம் கேட்போம்.







# மருத்துவக் குணங்கள் நிறைந்த பேரீச்சம்பழம்




- மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பேரீச்சம் பழத்தை, தேனுடன் கலந்து ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லா சத்துக்களும் கிடைக்கும். இதனால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.
- பேரீச்சம் பழம் செரிமான மண்டலத்தின் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஒருவேளை உங்களுக்கு சீரற்ற குடலியக்கம், மலச்சிக்கல் அல்லது வேறு ஏதேனும் செரிமான பிரச்சனைகள் இருப்பின், பேரீச்சம் பழத்தை தினமும் உட்கொண்டு வர, அதில் உள்ள நார்ச்சத்து இப்பிரச்சனைகளுக்கு தீர்வளித்து, குடல் புற்றுநோய் வரும் அபாயத்தைக் குறைக்கும்.
- பேரீச்சம் பழத்துடன், பாதாம் பருப்பு சேர்த்து, பாலில் கலந்து கொதிக்க வைத்து சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கி, ஞாபக சக்தி கூடும். கைகால் தளர்ச்சி குணமாகும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள மக்னீசியம், தமனிகளில் ஏற்படும் வீக்கத்தைக் குறைத்து, இதய நோய்கள் வரும் அபாயத்தைக் குறைப்பதாக கூறப்படுகின்றது.
- பேரீச்சம் பழத்தை கர்ப்ப காலத்தில் உட்கொண்டு வந்தால், பிரசவம் முடிந்த பின் உடல் எடையை குறைக்க உதவியாக இருக்கும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள பொட்டாசியம், இதய செயல்பாட்டை மென்மையாக்கி, இரத்த அழுத்தத்தை சீராக வைத்துக் கொள்ளும். எனவே பேரீச்சம் பழம் சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம்.
- தினமும் பேரீச்சம் பழத்தை உட்கொண்டு வந்தால் மூளையின் செயற்பாடு மேம்படும். அதாவது ஞாபக சக்தி, ஒருமுகப்படுத்தும் தன்மை, கூர்மையான புத்தி, எதையும் எளிதில் கற்றுக் கொள்ளும் திறன் போன்றவை அதிகரிக்கும்.
- பேரீச்சம் பழத்தில் உள்ள அதிகப்படியான இரும்புச்சத்து உடலில் இரத்தணுக்களின் அளவை அதிகரித்து, இரத்த சோகை வரும் அபாயத்தைக் குறைக்கும். எனவே உங்கள் உடலில் இரத்தத்தின் அளவு சீராக இருக்க தினமும் 3 பேரீச்சம் பழத்தை உட்கொண்டு வாருங்கள்.
- சளி, இருமலுக்கு பேரீச்சம் பழத்தின் கொட்டைகளை நீக்கி பாலில் போட்டு காய்ச்சி பருகி வந்தால் சளி, இருமல் குணமாகும்.
- நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எலும்புகள் பலம் இழந்து காணப்படும். இவர்களுக்கு கல்சியம், இரும்பு சத்து தேவைப்படுவதால் தினமும் இரண்டு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.

**பேரீச்சைப் பழத்தின் இன்னும் சில நன்மைகள்:**

- இரத்தத்தைச் சுத்தப்படுத்தி விருத்தி செய்யும்.
- எலும்புகளை பலப்படுத்தும்.
- இளைப்பு நோயைக் குணப்படுத்தும்.
- முதியோருக்கு ஏற்ற மருந்தாக பேரீச்சம் பழம் உள்ளது. அவர்களுக்கு ஏற்படும் உடல் ரீதியான இன்னல்களைக் குறைக்கும்.
- புண்கள் ஆறும். மூட்டு வலி நீங்கும்.
- பேரீச்சம் பழத்தை பசும்பாலில் வேக வைத்து அருந்தி வந்தால் இதய நோய்கள் அண்டாது.●

*- நன்றி இணையத்தளம் -*

# கொஞ்சம் சிரிங்க



விமல் காலை விழித்தவுடன் தனது மாட்டைத்தேடிச் செல்கின்றான். அப்பொழுது பொலிஸ் அவனை அழைக்கிறது.
**பொலிஸ்** : கத்தாக் கரண்ட
**விமல்** : ஆம், கட்டித்தான் போட்டிருந்தன் சேர்.
**பொலிஸ்** : மொக்கத்த
**விமல்** : ஆம் மொக்கு மரத்திலதான் கட்டிபோட்டன் சேர்.

* * * * *

**நண்பன்** : உங்கட வியாபாரம் எப்படிப் போகுது?
**வியாபாரி** : தலைகீழாய்ப் போகுது.
**நண்பன்** : எப்படி?
**வியாபாரி** : ஆரம்பத்தில் வைர வியாபாரம் பண்ணினேன். இப்ப ரவை வியாபாரம்...

* * * * *

**சேவகன் 1** : நமது மகாராணி போருக்குப் போய் எப்படி ஜெயித்தாராம்? நன்றாகப் போரிட்டாராமா?
**சேவகன் 2** : அவரும் மன்னர் மாதிரி புறமுதுகுதான் காட்டினாராம். ஆனால் அவருடைய பின்னழகை எதிரி மன்னன் பார்த்துக்கொண்டே இருந்ததால் தோற்றுவிட்டானாம்.

* * * * *

**ஆசிரியர்** : டேய் கண்ணா. நான் தாற ரொபியில் இரண்டை சாந்திக்கும் மூன்றை மீனாவுக்கும் கொடுத்தா உனக்கு என்ன கிடைக்கும்?
**மாணவன்** : எனக்கு இரண்டு Girl Friends கிடைக்கும் ரீச்சர்.

**மீனா** : தாத்தாவுக்கு 80 வயது. இன்னும் ஒரு பல்லுக்கூட கீழ விழவில்லை.
**நண்பி** : அட ஆச்சரியமா இருக்கே எப்படி?
**மீனா** : பல்லு ஆடும்போது அவர் கீழே விழவிடாம கையால பிடுங்கி எடுத்திடுவார்.

* * * * *

**பொலிஸ்** : என்ன ஏதோ மூட்டையைப் பதுக்கி வீட்டில் வைத்திருக்கிறாய் என்று ரிப்போட் வந்திருக்கே. நட வீட்டிற்கு.
**திருடன்** : சத்தியமா ஒரு மூட்டையும் இப்போது வீட்டில் இல்லைங்க. மருந்து அடிச்சு எல்லாவற்றையும் அழிச்சுட்டன்.

* * * * *

**லோகு** : பெண்ணே என் இதயத்தில் வருவாயா?
**ரம்மியா** : செருப்பைக் கழட்டவா?
**லோகு** : சேச்சே என் இதயம் என்ன கோயிலா? அப்படியே வா பரவாயில்ல.

* * * * *

**ஆசிரியர்:** என்னடா 20 நாளா ஸ்கூலுக்கு வரல...?
**மாணவன்:** எங்கப்பாதான் சொன்னாரு ஒரே எடத்துக்கு அடிக்கடி போனா மரியாதை கெடைக்காதுண்ணு.

# மன்னா விளம்பரப் பலகை

“பசித்த வயிறு, பணமில்லாத வாழ்க்கை பொய்யான உறவுகள் இவை மூன்றும் ஒரு மனிதனுக்கு கற்றுக் கொடுக்கும் பாடத்தை எவனொருவனாலும் கற்றுக்கொடுக்க முடியாது.”

“அனுபவித்தவன் மட்டுமே அறிவான் அவன் சுகத்தை மட்டுமல்ல சுமையையும்தான்.”
..............................
“சுமைகளைக் கொடுத்த கடவுள், அதைத் தாங்க தோள்களையும் நமக்குக் கொடுத்திருக்கின்றார்.”
..............................
“வாழ்வு விளையாட்டுக் களமல்ல, உனக்கு உள்ளவற்றைக் கொண்டு நிறைவுடன் பயணிக்க ஒரு வாய்ப்பு.”
..............................
“வாழ்க்கையை ஏமாற்றியது போல் நீ மரணத்தை ஏமாற்ற முடியாது.”

“வாய்ப்புக்காக காத்திருக்காதே.. உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.”

“கடவுள் இரண்டு இடங்களில் இருக்கின்றார். ஒன்று வானுலகம், இன்னொன்று நன்றியுள்ள மனிதனின் இதயம்.”
..............................
“உறவுதான் வாழ்க்கை, பிரிவுகள் அதில் நிதர்சனம்”
..............................
“வேண்டாம் என்று நீ எதையும் கருதாதே. அதற்குள் உனக்கு வேண்டும் என்ற ஒன்று உள்ளது.”
..............................
“நான் போராடி இருக்கின்றேன் என்பதை என் வெற்றிகளைப் போலவே, என் தோல்விகளும் சொல்லும்.”

“வாய்ப்புக்காக காத்திருக்காதே.. உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.”

# சமையல் குறிப்பு

## சுவையான இஞ்சி பிஸ்கட்

**தேவையான பொருட்கள்**

மாஜரின் - 1½ கி.கி
சீனி - 1/4 கி.கி
கோதுமை மா - 3/4 கி.கி
முட்டை - 3
பேக்கிங் பவுடர் - 1 தே.கரண்டி
இஞ்சி / வேர்க்கொம்பு - 25 கிராம்
வனிலா - அளவாக



**செய்முறை :**

மாஜரினையும், சீனியையும், முட்டையையும் சேர்த்து சீனி கரையும் வரை நன்றாக அடிக்க வேண்டும். பின்னர் இஞ்சிச்சாறு அல்லது வேர்க்கொம்புத் தூள் கோதுமை மா, பேக்கிங் பவுடர், வனிலா ஆகியவற்றைச் சேர்த்து நன்றாக பிசைய வேண்டும். 1/2 மணிநேரம் கழித்து மெல்லியதாக உருட்டி விரும்பிய வடிவில் வெட்டி பேக் பண்ணிப் பரிமாறலாம். ●

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.195

1 குறிப்பேடு (அதிகாரம் 11 முதல் 20 முடிய)

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | ✡ | | | | 04 | |
| | | | 05 | | | 06 | | | | |
| | 07 | | | | | | | | | |
| | ✡ | ✡ | | 08 | | | | | | 09 |
| 10 | | | 11 | | | ✡ | | 12 | | |
| | | | | | 13 | 14 | | | | |
| 15 | | | | | | | 16 | | | |
| | | 17 | | | | | | | | |
| | 18 | | | | | | | | 19 | |
| 20 | | | | | ✡ | | | | | 21 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

## இடமிருந்து வலம்

1. பின்பு லேவியர் மோசேயின் கட்டளையாகத் தந்த ஆண்டவரது வாக்கின்படி கடவுளின் பேழையை அதன் .......... தங்கள் தோள்மேல் சுமந்து வந்தனர்.
3. ஆயினும் தாவீது சீயோன் .................. யைக் கைப்பற்றினார்.
7. ......................... கோலத்துடன் ஆண்டவரை வழிபடுங்கள்.
10. ஆயினும் கடவுளே அதுவும் உமக்குச் ................த் தோன்றிற்று.
15. ........................... எறிதற்கும், வில்லினால் அம்பு எய்வதற்கும், வலக்கை இடக்கைப் பழக்கமானவர்களாயும் இருந்தனர்.
17. குற்றமற்றவனான என்னை என் எதிரிகள் ..................... ஒப்புவிக்கும் பொருட்டு வந்துள்ளீர்கள் என்றால் நம் முன்னோரின் கடவுள் அதைக்கண்டு தீர்ப்புக் கூறட்டும்.
18. யாக்கோபுக்கு ..............வும், இஸ்ரயேலுக்கு என்றுமுள உடன்படிக்கையாகவும் அதை அவர் உறுதிப்படுத்தினார். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கின்றது.
20. அவர்தம் வியத்தகு ........................... அனைத்தையும் எடுத்துரையுங்கள்.

## மேலிருந்து கீழ்

1. மாறாக அவனை என் கோவிலின் மேலும், அரசின் மேலும் .............................. என்றென்றும் நியமிப்பேன்.
2. உலகெங்கும் வாழ்வோரே அவர் திருமுன் ........................ங்கள்.
4. இந்த ....................யை உம் அடியானுக்குக் கொடுப்பதாய்க் கூறியுள்ளீர்.
6. தாவீதின் சகோதரனாகிய சிமயா............... யோனத்தான் அவனைக் கொன்றான்.
9. தாவீது அவர்கள் மன்னனின் தலையிலிருந்த ................ எடுத்துக்கொண்டார். (2வது எழுத்து 1வது எடுத்துக்கு மேலே உள்ளது)
12. அவர்கள் போரில் தோள்கொடுத்த ஆற்றல்மிகு ....................
13. உம் அடியானுடைய வீட்டுக்கு வரவிருக்கும் பெரும் ..............ப் பற்றி வெளிப்படுத்தினீரே.
14. அவர்களோ அவருக்கு முன்பாகப் புற.............. ஓடினர்.
16. முன்பு ஒருமுறை நீங்கள் சுமக்காததால் நம் கடவுளாகிய ஆண்டவர் நமக்குள் ................... உண்டாகச் செய்தார்.

## வலமிருந்து இடம்

2. பின்பு கடவுளின்முன் எரிபலிகளையும் ...................ப் பலிகளையும், செலுத்தினர்.
5. அவர்கள் கடவுளின் ................. அபினதாபின் வீட்டிலிருந்து எடுத்து ஒரு புது வண்டியின்மேல் ஏற்றினர்.
4. மேலும் தாவீது தமஸ்கு ...................... நடுவில் பாளையங்கள் அமைத்தார்.
9. தங்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாத இந்த ......... இரத்தத்தை நான் குடிப்பது எப்படி?
13. காத்து நகரையும் அதன் ................யும் பிலிஸ்தியரிடமிருந்து கைப்பற்றினார்.
17. “போ, அவர்களை உன் ................... ஒப்புவிப்பேன்.”
21. உணவுப் .............. ஏற்றி அவர்திருமுன் வாருங்கள்.

## கீழிருந்து மேல்

8. ஆண்டவர் .................... தாவீது அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார்.
11. யூதா புதல்வரில் கேடயமும், ஈட்டியும் ............ப் போர்க்கோலம் பூண்ட ஆறாயிரத்து எண்ணூறு பேர்.
12. தாவீதின் புதல்வர் அவர்தம் அரசில் உயர் ................. வகித்தனர். (4ம் 5ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
13. முன்புபோல் கொடியோர் கையில் ...................... மாட்டார்.
16. இஸ்ரயேலரின் மூப்பர்கள் எல்லோரும் எபிரோனிலிருந்த ...................... வந்தார்கள்.
19. இஸ்ரயேலரை ......................... நாளிலிருந்து இன்றுவரை நான் எந்தக் கோவிலிலும் தங்கியதில்லை.
20. அவர்தம் ...................... மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்.
21. ஏனெனில் பிலிஸ்தியரின் ........................ முறியடிக்கக் கடவுள் உனக்குமுன் செல்கிறார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 193

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
செ. வளன் நியூமன் துரம்,
மரியாள் வீதி,
தாழ்வுபாடு.



**இரண்டாம் பரிசு:**
S. டென்சியா பெரேரா,
8ம் வட்டாரம்,
அன்ரனீஸ்வீதி, பேசாலை.

**மூன்றாம் பரிசு:**
செல்வி. வயலட் யோண்,
இல: 843, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 193ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. Y.அற்புதசீலி, சகாயமாதா இல்லம்,திண்டுக்கல் மாவட்டம்.
2. நோ. நந்தினி சில்வா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
3. நோ. சுவின்சிகா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
4. வ. அருண் கிரித்திக் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
5. புஸ்பாசேவியர், உவர்மலை, திருகோணமலை
6. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
7. ஞா. வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
8. குணமணிசேவியர், பெரியகடை, மன்னார்.
9. பி. லவோண்சினி, கார்மேல் மடம், பண்டாரவளை.
10. வி. வேஜின் டிலக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
11. பியாற்றிஸ் றபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
12. வி. தாசன்டலிமா, தலைமன்னார் கிராமம்.
13. இ. நிறோஜினி சில்வா, பெரியபண்டிவிரிச்சான், மடு.
14. J. மேரி துஷானி லெம்பேட், வங்காலை, மன்னார்.
15. A. ஜெயப்பிரியா, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
16. பி. மகாராஜா, பெற்றா, மன்னார்.
17. J. யேசுநாயகி லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.
18. ச. திரேசில்டா, காத்தான்குளம், வட்டக்கண்டல்.
19. ச. மேரி ஜஸ்மின் காத்தான்குளம், வட்டக்கண்டல்.
20. ச. யாழினி, அளவக்கை.
21. R. ஜெகநாதன், இல: 161, மடுக்கரை, நானாட்டான்.
22. சு. அபினா, மளுவராயர் கட்டையடம்பன், மடுறோட்.
23. சந்தான் லூட்ஸ் கிறிசாந்தினி, அடம்பன்.
24. நா. கெயில் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
25. கு. மரியதாஸ் யோண், வேப்பங்குளம், வவுனியா.
26. கு. அரிக்ஸ் டலிமா, 8ம் வட்டாரம், பேசாலை.
27. R. றமீசன், ஜிம்பிறவுண்நகர், எழுத்தூர்.
28. அந்தோனிப்பிள்ளை புளோரன்ஸ், நானாட்டான்.
29. ஷானிக்கா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
30. லோரன்ஸ் குருஸ், பஸ்ரிபுரி, வங்காலை.
31. சு. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
32. அ. ஜஸ்மின்ஷறோன், ஆவணம், நானாட்டான்.
33. எ. ஜெய்மென் ராஜா, புத்திரர்கண்டான், முருங்கன்.
34. T. துளக்ஷன், முருங்கன்கமம், முருங்கன்.
35. செல்லப்பர் மேரி அன்சியா, களிமோட்டை, முருங்கன்.
36. S. பெனிற்றா, பள்ளமடு, விடத்தல்தீவு.
37. A.L. ஆன் அன்சிலா, பள்ளிமுனை, கிழக்கு.
38. P. சோபியா, கொள்ளையன்குடியிருப்பு, தோட்டவெளி.
39. து. ஜெஸ்ரன், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை.
40. ச. மரியகொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
41. ஜீலியட் மேரி களிமோட்டை, முருங்கன்.
42. ஜெ. ஜெனுசன், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை.
43. V.M. நிவேதினி, கொன்னையன்குடியிருப்பு, தோட்டவெளி.
44. இ. மேரி லக்ஷனா, எழுத்தூர், மன்னார்.
45. அ. கிஷாந்தன், பள்ளிமுனை, மன்னார்.
46. அ. எமர்சன், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
47. அ. அன்ரனி பெற்றா, மன்னார்.
48. அ. கிளேயறா, எழுவைதீவு, யாழ்ப்பாணம்.
49. அ. சாமினி, கொன்னையன்குடியிருப்பு, தோட்டவெளி.
50. அ. மேரி பற்றிக் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

## கிறிஸ்தவ நாகரிகம்.....

**7ஆம் பக்கத் தொடர்ச்சி**

கி.பி 4ஆம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் நாகரிகமடையா மக்களின் படையெடுப்பாகும். உரோமர் சமூக அடிப்படையில் பற்றீசியன், பிளேப்பியன்ஸ் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டவர்கள். 4ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே அவர்களது சமூக அந்தஸ்தும் உயர்ந்தது. முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்புநிலை உரோமை அரசியல் சமூக மட்டத்தில் காணப்பட்டது. இந்நிலை திருச்சபையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திருச்சபையில் குருக்கள், பொதுநிலையினர் எனும் தெளிவான வேறுபாடு வளர்ந்தது. திருச்சபையின் அதிகார அமைப்பு முக்கோண அமைப்பைக் கொண்டதாக மாறியது. திருத்தந்தை, பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் துறவியர் என வரிசைப்படுத்தப்பட்டனர். பொதுநிலையினர் அடிமட்டத்திலேயே காணப்பட்டனர். திருச்சபையின் தீர்மானம் எடுக்கும் பொறுப்பும் அதை செயற்படுத்தும் அதிகாரமும் குருக்களிடயே காணப்பட்டன. பொதுமக்களின் பங்கும், செயற்பாடும் முற்றாகவே அருகியிருந்தது. இந்த அமைப்புமுறை 2ஆம் வத்திக்கான் சங்கம் வரை நீடித்தன.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தீர்மானங்களின் அடிப்படையில் இன்று கிறிஸ்தவ வாழ்வை நோக்கும்போது மனித நேயத்தை முன்னிறுத்திய இயேசுவின் போதனைகள் சிறப்பிடம் பெறுகின்றன. சட்டத்துக்குள் முடங்கிக் கிடந்த யூத நாகரிகத்தில் மனித நேயத்தை முதன்மைப்படுதிய இயேசுவைப் போல, உரோமைப் படிமுறை அமைப்புக்குள் சிக்கித்தவித்த திருச்சபைக்கு சமத்துவ சமுதாயத்தின் தேவையை உணரவைத்தது இரண்டாம் வத்திக்கான் சங்கம். எந்த நாட்டில், எந்த மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் வாழப்படுகிறதோ அந்த நாட்டு மக்களின் வாழ்வியலை தழுவியதாக கிறிஸ்தவ வாழ்வு அமைய வேண்டும் என்ற நிலை திருச்சபையின் ஒற்றுமையையும், சமத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. காலத்தின் தேவைக்கேற்ப எமது ஆன்மீகமும், வாழ்வியலும் அமையும் போதே மக்கள் வாழ்வு அர்த்தம் பெறுகின்றது.●

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## கறிற்ராஸ்.....

**9ஆம் பக்கத் தொடர்ச்சி**

**எமது எதிர்கால நல்வாழ்வுக்காக கல்வி ஊக்கம் கொடுத்துவரும் கறிற்ராஸ் வாழ்வுதயத்திற்கு நாம் உளமார நன்றி கூறுகின்றோம்.**

கறிற்ராஸ் வாழ்வுதயம் மன்னார் மறைமாவட்டத்தின் கல்வியில் ஆர்வமுள்ள வறிய மாணவர்களை இனம்கண்டு கல்விக்கான பணம், பொருள் உதவிகளை வழங்கிவருவது யாவரும் அறிந்த விடயமே. அவ்வாறான உதவிகளை நாம் பெற்று கல்வியில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றோம். எதிர்காலத்தில் நாம் நல்ல பிரஜைகளாக மாறுவோம் என்பதில் அசையாத நம்பிக்கை உண்டு. கறிற்ராஸ் வாழ்வுதயம் இவ்வாறான பணிகளின் மூலம் எம்மைப் போன்ற பல மாணவர்களுக்கு ஒளியாக திகழ்கின்றது. இன, மத வேறுபாடுகளைக் கடந்து இத்தாபனம் எங்கு கல்வியில் ஊக்கம் உள்ள மாணவர்கள் குடும்ப பொருளாதார பின்னடைவால் கல்வியை தொடர முடியாமல் இருக்கின்றார்களோ அங்கு நேரடியாகச் சென்று மாணவர்களைத் தெரிவு செய்வதை பார்க்கின்றோம்.

மேலும் உதவி பெறும் அனைத்து மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வுகளை நடாத்திவருகின்றது என மாணவர்கள் தமது மீளாய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.●

**தொகுப்பு - சு.அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
**திட்டமுகாமையாளர், கறிற்ராஸ், வாழ்வுதயம்.**

## அன்னைக்கு.....

**12ஆம் பக்கத் தொடர்ச்சி**

(2அர 2:11) கடவுளோடு நடந்து செல்பவர்கள் ஆசி பெற்றவர்கள். பெருமைப்படுத்தினார். இன்னும் பெருமைப்படுத்துவார்.
அன்னை மரியா அழியாமையில் நிலைவாழ்வில் தனது மகனோடு இருக்கின்றார். அன்னை மரியா திருச்சபைக்குத் தாய். இறந்த பின் அடக்கம் செய்யப்பட்டார். திருத்தூதர்கள் கல்லறையை திறந்து பார்த்தபோது அன்னை மரியா அங்கு இல்லை. எலும்பு கூட இல்லை. சுகந்த வாசம் கமழ்ந்து கொண்டிருந்ததாக பாரம்பரியம் கூறுகின்றது. அன்னையின் விண்ணேற்பு மாபெரும் நற்பேறாகும். 1950ஆம் ஆண்டு 12ஆம் பத்திநாதர் பாப்பரசர் அதிகார பூர்வமாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

கதிரவனை ஆடையாக அணிந்துள்ள, நிலாவைக் காலடியில் வைத்துள்ள, பன்னிரு விண்மீன்களை தலைமீது சூடியுள்ள மரியாவை வாழ்த்துவோம். மதிப்போம். அன்பு செய்வோம்.●

## செபமாலைத் தாசர் சபையின்........

**01ஆம் பக்கத் தொடர்ச்சி**

இவர் தனது ஆரம்பக் கல்வியை சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயத்திலும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியிலும் பயின்று, 1986ஆம் ஆண்டு செபமாலைத் தாசர் சபையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இந்தியாவில் நவத்துறவினையும் மெய்யியலையும் கண்டி தேசிய குருமடத்தில் இறையியலையும் கற்று மன்னார் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையினால் 1998 ஆவணி 20ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது குருத்துவ பணியில் இறையியல், மெய்யியல் மாணவர்களின் பொறுப்பாளராகவும், நவத்துறவு ஆசிரியராகவும் பணியாற்றி பின், கனடா, ஒட்டாவா பல்கலைக்கழகத்திலும், புனித பவுல் பல்கலைக்கழகத்திலும் கற்று திருச்சபையின் சட்டங்களில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார். இவரின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.●

# நீங்காத நினைவுகள்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 01 1944

உதிர்வு 01 10 2007

### திருமதி. அ. கிறகோரியம்மா (தங்கம்) (விடத்தல்தீவு)

"ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரின் முடிவு மகிழ்ச்சிக்குரியதாய் அமையும்: அவர்கள் இறக்கும் நாளில் ஆசி பெறுவார்கள்". (சீராக்:1:13)

நெஞ்சம் நிறைந்தவளே! நிறைவாக வாழ்ந்தவளே!
நாளும் பொழுதும் எம் நலன்நாடி இருந்தவளே!
தஞ்சம் நீயெனவே செபமாலை செபித்தவளே!
தரணியில் எம்மை விட்டுத் தந்தையிடம் சென்றீரோ!
கெஞ்சி வரும் அன்பருக்குத் தாயாக நீரிருந்தீர்.
கேட்காத போதிலும் நீர் மனமுவந்து உதவி செய்தீர்.
பஞ்சம், படைபிணி, நோய் பாழ்பட்டுப் போய் விடவும்,
பண்பான உமைஇறைவன் அணைத்திடவும் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 19ஆம். ஆண்டு. 31ஆம் நாள் நினைவஞ்சலிகள்





கபிரியேல் கிறிஸ்நோகு. கிறிஸ்நோகு அந்நோனியாள்
(கொக்குப்படையான். சிலாவத்துறை)

மலர்வு : 19 - 06 - 1932 மலர்வு : 09 - 04 - 1934
உதிர்வு : 05 - 09 - 1999 உதிர்வு : 20 - 08 - 2018

"உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்" (யோ11:25)

அன்பூட்டி, அறிவூட்டி, பண்புடன் பாசமூட்டி
இப்பதியில் எமை வாழ்வாங்கு வாழவைத்த
அன்பு தெய்வங்களே!
பரமனின் பாதத்திலே பக்தியோடு நீர் அமர்ந்து
எமக்காக வேண்டிடுவீர்!

**பிரிவால் நினைந்துருகும்:**
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 10 1930

உதிர்வு 12 10 2013

### திரு. ஹென்றி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் (தாழ்வுபாடு வீதி, மன்னார்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது." (திருப்பாடல்: 116.15)

'ஞானம்' என அன்பர் அனைவருமே அழைத்திருந்த
அன்பான அப்பா! ஆர்வமுடன் எமையணைத்து,
ஞானம் நிறைந்தவராய் நாம் வாழவேண்டுமென
நல்லதொரு தந்தையாய், எமக்கு வழிகாட்டியுள்ளீர்கள்!
ஞானத்திற் தொடங்கும் நாம் நான்கு புத்திரரும்,
அன்னைதந்தை பாசமதால் பண்புடனே இணைந்து நின்றோம்.
மோனத்திரு நிலையில் உமைத்தம்மோடிணைத்தருள
மன்றாடி வேண்டுகின்றோம். மாபரனின் திருவடியை!

**பிரிவால் நினைந்துருகும்:**
ஞானக்குமார், ஞானராஜா, ஞானதேவா, ஞானேந்திரா குடும்பங்களும், உற்றார், உறவினர், நண்பர்களும்.

## தாழ்வுபாடு பங்கின்.....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

பின் பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத்திற்கு சென்று சிறு செபம் செய்த பின் ஆலயத்தை பார்வையிட்ட பின் மடு நோக்கி புறப்பட்டோம். மடு தேவாலயத்தில் அருட்சகோதரியின் தலைமையில் திருச்செபமாலை செபித்தபின், எமது பங்குத்தந்தையினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின் மதியம் ஒரு மணியளவில் மடு வளாகத்தில் மதிய உணவை முடித்துக்கொண்டு, குஞ்சுக்குளம் நோக்கி புறப்பட்டோம். அங்கு தொங்குபாலம் பார்வையிட்ட பின் மாலை 5.00 மணியளவில் எமது கிராமத்தை வந்தடைந்தோம். மறையாசிரியர்களும், மாணவர்களும் மிகவும் மகிழ்ச்சியுடன் பங்குபற்றினார்கள். எங்களுக்கும் மறைக்கல்வி மாணவர்களுக்கும் இந்த சிறிய திருயாத்திரையை ஏற்படுத்திக் கொடுத்து ஊக்குவித்த எங்கள் பங்குத்தந்தைக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பங்குத்தந்தையின் பணி சிறக்க இறைவனை வேண்டி நிற்கின்றோம்.●

## பொது நிலையினருக்கான....

01ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வுக்கு உரோமை திருத்தந்தையின் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள கொழும்பு புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குனர் அருட்பணி. தயாசெல்ரன் அடிகளார், கொழும்பு புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் தமிழ் பகுதியின் இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட் லூசியன், யாழ்ப்பாணம் புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குனர் அருட்பணி இ.ம. ரவிச்சந்திரன் அடிகளார், கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தின் மெய்யியல் துறைக்கான இயக்குனர் அருட்பணி. பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்பணி. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி திரு. அன்ரன் புனிதநாயகம், மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்கள், துறவியர், பொது நிலையினர் பேரவைத் தலைவர் திரு. போஸ் ஆகியோர் வருகை தந்திருந்தனர். 165 பொதுநிலையினர் இக்கற்கை நெறியில் இணைந்துகொள்ள விண்ணப்பித்து இத்தொடக்க நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர்.●

## நீதிமன்ற வலய..........

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவர் பறப்பாங்கண்டலைப் பிறப்பிடமாகவும், மடு முள்ளிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்டவர். சமய, சமூக, தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபாடுடையவர். இவர் தற்போது மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு கலையருவியின் உறுப்பினராகவும், மடுப்பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை செயற்குழு உறுப்பினராகவும், மன்னார் துயர் துடைப்புச்சங்கம், பிரஜைகள் குழு, தமிழ்ச்சங்கம் என்பனவற்றின் செயற்குழு உறுப்பினராகவும் தன்னார்வத்துடன் தொண்டாற்றி வருகின்றார்.

மேலும் மன்னார் மறைமாவட்டத்தின் தொன்மை வரலாறுகளையும், கலை இலக்கியங்களையும் தேடிப் பாதுகாத்து வைப்பதிலும் ஊக்கமுடன் உழைத்து வருகின்றார். பல்துறைசார் விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது இறைபணியோடு, சமூகப்பணியும் சிறக்க மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.●

## கவுனாஸ் நகரில்.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி

கவுனாஸ் பேராலயத்தில், அருட்பணியாளர்கள், குருத்துவ மாணவர்கள் மற்றும் அருட்சகோதரிகளைச் சந்தித்தார் திருத்தந்தை. அவர்களுக்கு ஆற்றிய உரையில், "இவ்வுலக செல்வங்களிலேயே சுகம் காண்பவர்களுக்காகவும், இவ்வுலக வசதிகள் மறுக்கப்பட்டவர்களுக்காகவும் நாம் பெருமூச்சு விடவேண்டும்" என்று கூறினார் திருத்தந்தை. அதன்பின்னர், வில்நியூஸ் நகரில் யூதக் குடியிருப்பு முழுவதுமாக அழிக்கப்பட்ட நினைவிடம் சென்று செபித்தார். இத்துடன், திருத்தந்தையின் லித்துவேனிய நாட்டின் இரண்டாவது நாள் பயண நிகழ்வுகள் நிறைவுற்றன. உரையாடல், திறந்தமனம், புரிந்து கொள்ளுதல் ஆகியவை வழியாக கிழக்குக்கும், மேற்கிற்கும் இடையே பாலத்தைக் கட்டியெழுப்புபவர்களாக லித்துவேனிய மக்கள் மாற இயலும் என திருத்தந்தை அம்மக்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.●

## இறப்பு வரை........

04ஆம் பக்கத் தொடர்ச்சி

புனிதத்துவமும், நற்செயல்களை செயற்படுத்துவதும் ஒரு சிலருக்கோ, ஒரு சில நேரங்களுக்கோ மட்டும் உரியதல்ல. மாறாக, எல்லா வேளைகளிலும், எல்லாராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கடமை அது என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாவு வரை நம் வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது இச்சபையின் நிறுவுனர் ரொஸ்மினி அவர்களின் நோக்கமாக இருந்தது என்றார்.

அனைத்திற்கும் மேலாக பிறரன்பு விளங்கவேண்டும் என்ற புனித பவுலின் வார்த்தைகளுக்கு ஏற்ப, தன் சபைக்கு பெயர் வைத்துள்ள அருளாளர் ரொஸ்மினி அவர்கள், பிறரன்புடன், உள் மன அமைதியும் ஒருங்கிணைந்து செல்லவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் என்றார் திருத்தந்தை. ரொஸ்மினியன் துறவு சபையின் கல்விப்பணியையும் பாராட்டிய திருத்தந்தை, அவர்கள் இந்தியா, டான்சானியா, கென்யா, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் ஐரோப்பாவில் பரவி பணியாற்றி வருவது குறித்து தன் மகிழ்ச்சியை வெளியிட்டார்.

ரொஸ்மினியன் துறவு சபையினர், தாங்கள் பெற்றுள்ள தனி வரத்தின் துணை கொண்டு, நற்செய்தி அறிவிப்புப் பணியை தொடர்ந்து செயற்படுத்த ஊக்கமளித்து, அவர்களுக்கு தன் ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

## குடும்ப வாழ்வின்...........

04ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவப்பட்டுள்ள குடும்பப்பணி மையங்கள், திருமண அருளடையாளத்தைப் பெற்றவர்களை மட்டுமல்லாமல், இந்த அருளடையாளத்தைப் பெறாமல் இணைந்து வாழ்வோரையும் வரவேற்று அவர்களுக்கு இவ்வருளடையாளத்தின் மேன்மையை உணர்த்த வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்தார்.●

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 30 08 1930

உதிர்வு 05 09 2018

### திரு. சந்தாம்பிள்ளை கவிரியேற்பிள்ளை (மானங்கவெளி, முருங்கன்)

அன்பின் ஐயாவே!
ஆறவில்லை உம் பிரிவின் துயர்.
இனி உம் வதனம் நாம் என்று காண்போம்.
அன்புமிக்க துணைவனாக, பாசமிக்க தந்தையாக பாசமுள்ள சகோதரனாக பாட்டனாக, பூட்டனாக
ஊரெல்லாம் நண்பனாக வாழ்ந்தீர்களே ஐயா!
நல்வாழ்வு வாழ்ந்து, ஓட்டத்தை முடித்து இன்றோடு ஆனது மாதமும் ஒன்று. நியமம் தான் இதுவென்ற அறிவைக் கொண்டிருந்தாலும், இதயம் இதை ஏற்காது கலங்கித் தவிக்கின்றது

**பிரிவால் நினைந்துருகும்:** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

## முதிர்பொது நிலையினரும்..................

10ஆம் பக்கத் தொடர்.

நண்பகல் உணவு வேளையில் எட்டாம் வகுப்புப் பயிலும் இரு மாணவியரைத் தனித்தனியே அழைத்து "உங்களுக்கு வழி காட்டி (Role model) யார்? என்று இன்று காலையில் நான் கேட்டேன் அல்லவா? அதற்கு உங்கள் பள்ளியில் பணியாற்றும் 14 ஆசிரியர்களில் ஒருவர் பெயரைக்கூட எவரும் சொல்லவில்லையே ஏன்? என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஐயா எங்கள் பள்ளியில் அத்தகையோர் இல்லாமலில்லை. நாங்கள் ஒருவர் பெயரைச் சொன்னால் அன்று மாலையிலேயே எங்களை ஏனைய ஆசிரியர்கள் கண்டிக்கவும், தண்டிக்கவும் தவறமாட்டார்கள்" என்றனர். ஏதோ ஆசிரியப் பெருமக்கள் மட்டுமல்ல, பெரும்பாலான போதனையாளர்கள் சான்றாளர்களாக இருப்பதில்லை. எனவே இத்தகையோரைப் பார்க்கும் போதே முதிர் நிலையினர் தங்கள் மனத்தை இறுக்க மூடிக் கொள்கின்றனர்.

**முதிர் நிலையினர் முயன்றால் முடியாததில்லை!**

இரண்டாம் வத்திக்கான் சங்க ஒளி மற்றும் அதன் செயற்பாட்டின் வெளிப்பாடாகவும் முதிர் நிலையினர் உள்ளனர். "திருச்சபையின் நம்பிக்கையும் நமது நம்பிக்கையுமாக (காண். மறைக்கல்வி பொது ஆவணம் எண் 136) உள்ள கத்தோலிக்க மறைக்கல்விப் பணி மீது தனி அக்கறை கொண்டு அனைவரும் செயற்பட்டு நிலைவாழ்வு பெற வேண்டும். அத்தகைய அருள் வாழ்வைத் தாங்களும் பெற்று பிறருக்கும், வழங்க முதிர் நிலையினர் முன்வருவார்களாக!"●






**Head Office:** #345, Galle Road, Colombo 04, Sri Lanka.
Tel: 011 2553440, 2553441

**Jaffna Branch:** #272/1, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 2224647, 2219424

**Vavuniya Branch:** #45 B/1, 2nd Cross Street,
Vavuniya, Sri Lanka.
Tel: 024 2226800, 2226801

**Trincomalee Branch:** #334, Court Road, Trincomalee,
Sri Lanka.
Tel: 026 2227242, 2227244


# நீங்காத நினைவுகள்

## 40ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 / 05 / 1951



உதிர்வு: 06 / 08 / 2018

### திரு. அந்தோனி இருதய பத்திராசா டயஸ் (பத்தி)
**(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)**

அகவையில் 67 ஆண்டுகள் கழித்தீர்கள் - ஐயா!
ஆண்டவனிடம் சற்றும் தளராது சென்றீர்களே!
இவ்வுலகில் முத்துக்கள் பதித்தீர்கள் - ஐயா!
அந்த முத்துக்கள் மேலும் பத்து சேர்த்தோமே
எங்கள் மீது அன்பு கொண்டீர்கள் ஐயா!
உங்களோடு நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோமே
நோய் நொடிகள் பெரிதும் வாதிடா வாழ்ந்தீர்கள் - ஐயா!
வானவன் குறித்த நேரம் உம்மோடு இருந்திருக்கவில்லையே

**பிரிவால் நினைந்துருகும்:**
பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள் குடும்பம், பேரப்பிள்ளைகள், சிறியதாய் குடும்பம், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 / 06 / 1955



உதிர்வு: 26 / 10 / 2017

### திருமதி. றொசாறி ஜெனிற்றா றோச்
**(பள்ளிமுனை, மன்னார்)**

**"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவா11:25)**

அன்பு முகம் மறைந்தாலும், அழியாது உங்கள் நினைவலைகள்! ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே! இதயம் இத்துயர் சுமந்து ஈரமாறா துயரத்தில் எம் இதயம் கனக்கிறது. உங்கள் நினைவலைகள் எம் உயிரோடு, உணர்வோடு கலந்து இதயத்தில் என்றும் நீங்கள் எங்களோடு வாழ்கின்றீர்கள். கண்முன்பே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும், எம்முள்ளே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும். இனிய நினைவுகளையும் இழந்த வலியையும் இதயம் துடிக்கும் வரை, இறுதி மூச்சு வரை எம்முள் காப்போம்.

**பிரிவால் நினைந்துருகும்:** குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 25 / 11 / 1951



உதிர்வு: 29 / 08 / 2018

### திருமதி. சவிரி ஞானப்பு
**(வஞ்சியன்குளம், வங்காலை)**

"அம்மா" என்ற மூன்றெழுத்தை
தினந்தோறும் உச்சரிக்கின்றோம் - நினைவில்
இன்னொரு தடவை உங்கள் முகத்தைக் காண
ஏங்குகின்றது நெஞ்சம். நோயில் நீங்கள் பட்ட துன்பத்தை
மறக்க நினைக்கின்றது மனது. ஆனாலும் முடியவில்லை.
பார்க்கும் திசையெல்லாம் உங்கள் ஞாபக அலைகளும்,
சத்தமும் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.
காலனவன் விரித்த வலையில் பலமுறை சிக்கி, போராடி,
பிழைத்து இறந்ததொரு தாயாய் எம்மோடு வாழ்ந்தீர்கள்.
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற
தினந்தோறும் இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** அன்புக்கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள்.

## 08ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 30 / 06 / 1988



உதிர்வு: 06 / 10 / 2010

### செல்வன். த. சில்வஸ்ரன்
**(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்)**

அன்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே!
குடும்பத்தின் ஒளிச் சுடரே! கற்பனையில் கூட எண்ணவில்லை
சட்டென கணப் பொழுதில் எம்மை விட்டு பிரிவாய் என்று.
இற்றைவரை நம்பமுடியவில்லை - இன்றுடன் ஆண்டு எட்டு
கடந்ததென்று, சுற்றவரும், உற்றவரும் ஏங்கி நிற்க என்றும்
காலத்தே அழியாத அன்பு கொண்டாய்!
நற்றவனின் பாதமதை நலமே பற்ற நானிலத்தில் எம்மை
விட்டு மறைந்தே போனாயோ!
உன் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** குடும்பத்தினர்,

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 11 / 02 / 1936



உதிர்வு: 07 / 10 / 2013

### திருமதி. செபஸ்ரியாம்பிள்ளை அன்னம்மா
**(நானாட்டான்)**

எம் அன்புத் தெய்வமே அம்மா!
நேரங்கள் ஓடினாலும், காலங்கள் மாறினாலும்
எம்மைவிட்டு நீங்கவில்லையே உங்கள் நினைவுகள்!
யாராலும் ஈடுகொடுக்க முடியவில்லையே உங்கள் இழப்பினை!
ஐந்தாண்டு காலம் போனால் என்ன?
எத்தனை ஜென்மம் ஆனால் என்ன?
கண்முன்னே விட்டு நீங்கி, கனவாகிப் போனாலும்,
மண்விட்டு மறைந்து நீங்கள் மாயமாகிப் போனாலும்
மனம்விட்டு மறையாமல் எந்நாளும் இருப்பீர்கள் எம் மனங்களில்!
உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 / 06 / 1955



உதிர்வு: 27 / 10 / 2017

### திரு. ஏ. றெஜினோல்ட் யோசப் வில்வராயர்
**(தலைமன்னார் கிராமம், தலைமன்னார்)**

***ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.***

நிழல் போல் இருந்து நினைவான என் அப்பா!
காலமெல்லாம் எம்மைக் காத்திருப்பீர்கள் என்றிருக்க
கண் இமைக்கும் நேரத்தில் கண்ணீர் துளியாகினீர்கள்
இமைகள் நனைய, இதயம் நொருங்க, எம்மை தவிக்க விட்டு
கடமை முடிந்ததென்று கடவுள் பாதம் அமர்ந்தீர்களோ.
நீங்கள் எங்களை விட தூரத்தில் இல்லை
நீங்கா நினைவுகளில் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆன்மா சாந்திபெற உள்ளத்தால் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** மனைவி, பிள்ளைகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.